janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

▸ மலர் 84 ▸ 2022 ஜனவரி 09 - 15 ▸ விலை: ரூ.10 ▸ 16 பக்கங்கள் ▸ இதழ் 40







சிறப்பு அதிகாரச் சட்டமும்

நாகாலாந்தில் ஆயுதப்படைகள் டிசம்பர் 4ம் தேதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் கொல்லப்பட்டனர். >>>


ப 03



இந்தியாவில் அரசும் மதமும்

பிரதமர் நரேந்திர மோடி துவக்கி வைத்த காசி விஸ்வநாதர் ஆலய விழா நிகழ்வு >>>

ப 16



பெண்கள் மசோதா திரைமறைவு அரசியல்

பெண்களின் சட்டபூர்வத் திருமண வயதை 18லிருந்து 21 வயதாக உயர்த்த இந்திய அரசு 2021, டிசம்பர் 21அன்று >>>

ப 08

## விவசாயிகள் போராட்டம்: திருவாரூரில் வெற்றி விழா



## ஒன்றிய பா.ஜ.க. அரசு

# கிரிமினல் அரசு

## அதுல் குமார் அஞ்சான் குற்றச்சாட்டு

**எவ்வித வன்முறையும் இன்றி அமைதி வழியில், ஜனநாயக முறையில் போராடி, திமிர் கொண்ட ஆட்சியைக் கூட பின்வாங்க செய்ய முடியும் என்பதை காட்டிய, உலகமே வியக்கும் விவசாயிகளின் டெல்லி போராட்டம் 13 மாதங்கள் நீடித்தது.**

இந்த நிலையிலும் விவசாயிகளிடம் பேசிட மறுத்த ஐம்பத்தி ஆறு அங்குல மார்பு கொண்ட மோடி, தானே வலிய வந்து மன்னிப்புக் கோரி சட்டங்களை வாபஸ் பெற வைத்ததுடன், சட்டபூர்வமாக அனைத்து கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்கான உத்தரவாதத்தை பெற்ற விவசாயிகளின் போராட்ட வெற்றியை தமிழகமே கொண்டாடும் நிலையில் திருவாரூரில் 29.12.2021 அன்று பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள், விவசாய ஆர்வலர்கள் வந்து குவிந்தனர்.

மாலை நாலரை மணிக்கு தொடர் வண்டி நிலையத்தில் இருந்து பேரணி புறப்பட்டது. 714 விவசாய தியாகிகளின் நினைவாக வரவேற்பு குழுவின் தலைவர் மு.சேரன் ஏற்றிய தியாகச்சுடர் தொடர் ஓட்டமாக பேரணியின் முன் கொண்டு செல்லப்பட்டது.

இதைத் தொடர்ந்து எஸ்.கே.எம் பெயர் பொறிக்கப்பட்ட டீசர்ட் அணிந்த தொண்டர்கள் அணிவகுக்க... பேரணியில் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் அதுல் குமார் அஞ்சன், ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் பேச்சுவார்த்தை ஐவர் குழுவின் உறுப்பினரான அசோக் தாவ்லே ஆகிய இருவரும் தலைமையேற்று நடந்தே வந்தனர்.

தமிழ்நாடு விவசாய சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, தமிழ்நாடு விவசாய சங்கத்தின் பொதுச் செயலர் பி.சண்முகம் முன்னிலையில் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் மாநில செயற்குழு உறுப்பினர்கள் அணிவகுக்க 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கு கொண்ட பேரணி கடைவீதி வழியே தொடர்ந்தது.

பேரணியின் முகப்பில் தஞ்சை குழுவினரின் பறை இசை நிகழ்ச்சி, ஆட்டம் பாட்டத்துடன் சென்றது. பேரணியில் பங்கு கொண்டவர்கள் தாரை தம்பட்டத்துடன் பல்வேறு இசைக் கருவிகளுடன் குதூகலமாக வந்து கலந்து கொண்டு எழுச்சி முழக்கமிட்டனர்.

பெண்கள் நடனம் ஆடி வந்தனர். ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் பேரணி சென்று திருவாரூர் தெற்கு வீதியில் மாபெரும் பொதுக்கூட்ட மேடையின் முன் சங்கமித்தது.

மேடையில் பறை இசை ஆட்டம் மற்றும் பெண்களின் விவசாய பாடல்கள் நடந்தது. மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் பாடகர் கோவன் எழுச்சிப் பாடல் நிகழ்ச்சி நடைபெற்ற பின் ஐக்கிய விடுதலை முன்னணியின் மாநில செயற்குழு உறுப்பினர் கி.வே. பொன்னையன் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது.

வரவேற்புக்குழுவின் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வரவேற்புரை ஆற் றினார். அகில இந்திய தலைவர்கள் அதுல்குமார் அஞ்சன், அசோக் தாவ்லே ஆகியோர் உரையாற்றினர். இவர்களின் ஆங்கில உரையை த. லெனின், மற்றும் அன்வர் ஆகியோர் தமிழாக்கம் செய்தனர். பின்னர் எஸ்.குணசேகரன் முன் எம் எல்ஏ., பி.சண்முகம், பசுமை வளவன், இளங்கீரன், அ.பாஸ்கர், வி. அமிர்தலிங்கம் பொன்னுத்தாய் உட்பட பலர் பேசினர்.

இக்கூட்டத்தில் கௌதமன் – சித்ரா தேவி ஆகியோரின் புதல்வியும், பி.எஸ்.மாசிலாமணியின் பெயர்த்தியுமான சிறுமி ஹரிதா விவசாயிகளின் போராட்டம் குறித்து அஞ்சாது வீரத்தோடு பேசியது பார்வையாளர் அனைவரையும் பரவசப் படுத்தியது.

மாநில ஒருங்கிணைப்பாளர் கே. பாலகிருஷ்ணன் உடல் நலிவின் காரணமாக வர இயலாத நிலையில் அவருடைய உரையை மேரிலில்லிபாய் வாசித்தார். ஜனவரி 26 பேரணியின் போது திருவாரூரில் காவல்துறை தடுப்பை மீறி டிராக்டர்களை நகருக்குள் ஓட்டி வந்தபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளு நிகழ்வால் 12 பேர்கள் மீது கொலை முயற்சி உள்ளிட்ட வழக்குகளை காவல்துறை போட்டு ஏழு பேர்களை ஒரு மாதம் சிறையில் அடைத்தது. அந்த ஏழு பேர்களுக்கும் நினைவு கேடயங்களையும் மற்றும் அன்று தஞ்சையில் காவல்துறையின் தடுப்புகளை மீறி சமயோசிதமாக குறுக்கு வழிகளில் டிராக்டரை 80 கிலோ மீட்டர் தூரம் தானே ஓட்டி நகருக்குள் புகுந்த எஸ்தர்லீமா அவர்களுக்கும் நினைவு கேடயத்தை அகில இந்திய தலைவர்கள் வழங்கினர். வரவேற்புக்குழுவின் கௌரவதலைவர் கே.எஸ்.எஸ்.தியாகபாரி, துணைத் தலைவர் டி.எம்.முனவர்தீன் ஆகியோர் நினைவு கேடயங்களை அகில இந்திய தலைவர்கள் இருவருக்கும் வழங்கினர்.

அதைத்தொடர்ந்து செயற்குழு மற்றும் வரவேற்புக்குழு நிர்வாகிகளுக்கும் துண்டுகள் அணிவிக்கப் பட்டது. நிறைவாக வரவேற்புக் குழுவின் பொருளாளர் எஸ்.தம்புசாமி நன்றி கூறினார்.

கூட்டத்தில் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அதுல்குமார் அஞ்சான் பேசியதாவது:

டெல்லியின் கடும் குளிர், மழை, விவசாயிகள் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதல், காவல்துறையின் துப்பாக்கிச் சூடு, இவற்றையும் மீறி ஓராண்டு மூன்று மாதங்கள் மிகத் தீரத்தோடு போராடி தியாகம் செய்ததால் இன்று பாரதப் பிரதமர்

தொடர்ச்சி 5ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்



மோடிக்கு அகம்பாவம் அதிகமாகிவிட்டது. விவசாயிகள் எனக்காகவா செத்தார்கள் என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

– மேகாலயா ஆளுநர் சத்தியபால் மாலிக்

இந்திய கார்ப்பரேட் ஊடகங்கள் இதுகுறித்து ஏன் விவாதங்கள் நடத்த மறந்து போயினர் பாஜகவின் அழுத்தமோ!

ஏடிஎம் சேவைக் கட்டணம் ஜனவரி 1 முதல் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ. 21ஆக உயர்வு

– நிர்மலா



வருசத்தின் முதல் நாளே அரம்பிச்சுட்டாங்க வேட்டைய




# முன்னுதாரணங்களை பின்பற்றுவோம்!

## பேரன்புமிக்க தோழர்களே!

**இரண்டாயிரத்து இருபத்தியொன்றாம் ஆங்கில ஆண்டு விடைபெற்று சென்று விட்டது. இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆங்கில ஆண்டு பிறந்துள்ளது. விடை பெற்ற ஆண்டு பல சோதனை, இழப்புகளை தந்து விட்டு சென்றுள்ளது.**

மதிப்புமிக்க தலைவர் தோழர் தா.பா.வின் சிம்மக்குரல் ஒய்ந்துவிட்டது. மதுரையில் நடைபெற்ற அரசியல் எழுச்சி மாநாட்டில், சர்க்கர நாற்காலியில் வந்து, பல்லாயிரக் கணக்கில் கூடியிருந்த மக்களிடையே கையசைத்து வாழ்த்து கூறியதுடன்,

நின்றுகொண்டு, பேச இயலவில்லை என்றாலும், சக்கர நாற்காலியில் வந்து முழங்குவேன்; சாகும் வரையில் எனது நாக்கு சுழன்று கொண்டிருக்கும்; வகுப்புவாதத்திற்கு எதிரான எனது முழக்கம் தொடரும். என் தோழர்களை தட்டி எழுப்புவேன். எவருக்கும் எனது படை அஞ்சாது, தலை வணங்காது என ஆவேச முழக்கமிட்ட அருமைத் தலைவர் தா.பா. இன்று நம்மிடம் இல்லை என்றாலும், என்றென்றும் நம் நெஞ்சங்களில் நிலைத்து நிற்பார்.

மாநில மையத்திலும், ஜனசக்தியிலும் தொடர்ந்து பணியாற்றி அமைதிக்கும், பொறுமைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கிய நமது அருமைத் தோழர், முறுக்கிய மீசையுடன் பவனி வந்த பண்பாளர் தோழர் வி.ராஜமோகனை கொடிய கொரோனா பலி வாங்கிவிட்டது.

கல்லூரி காலம் தொடங்கி தன்னை பொது வாழ்வில் இணைத்துக்கொண்டு, மாணவர் பெருமன்றம், இளைஞர் பெருமன்றம் என தொடர்ந்து மதுரை மாவட்ட கட்சியின் செயலாளராக, பின்னர் மாநில மைய பொறுப்பாளராக, தேசிய குழு உறுப்பினராக பணியாற்றி அனைவரின் பேரன்பையும் பெற்ற அருமைத் தோழர் பி.சேதுராமனை கொடிய கொரோனா பலி வாங்கிவிட்டது.

இளைஞர் பெருமன்ற தஞ்சை மாவட்ட செயலாளராக, தஞ்சை மாவட்ட கட்சியின் துணைச் செயலாளராக, பொறுப்பு செயலாளராக பணியாற்றி, விவசாய சங்க மாவட்டச் செயலாளராக, பின்னர் மாநில பொதுச் செயலாளராக பணியாற்றி வந்த தோழர் டாக்டர் வே.துரைமாணிக்கம் நம்மிடம் தற்போது இல்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினரும், மாதர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலை வரும், தென் சென்னை மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளருமான தோழர் ஆர்.சுசீலா மரணம் துயரத்தில் ஆழ்த்தியது.

சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட திருவாரூர் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினரும், நீடாமங்கலம் ஒன்றியச் செயலாளருமான நடேச தமிழார்வன் படுகொலை நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

மேலும் நெல்லை தங்கவேல், வாத்தியார் ஜேக்கப், பட்டுக்கோட்டை மார்க்ஸ் என பட்டியல் நீள்கின்றது.

கொடிய கொரோனா ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்துள்ளது. புகழ்மிக்க பாடகர் எஸ்.பி. பால சுப்பிரமணியம் உட்பட ஏராளமானவர்களை நாம் இழக்க நேரிட்டுள்ளது. சோகங்கள் நிறைந்த ஆண்டாக மட்டுமே முடியவில்லை.

வெற்றி சாதனைகளும் இக்காலத்தில் உண்டு.

நடந்து முடிந்திட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் வகுப்புவெறி சக்திகளையும், அவர்களுக்கு துணை போனவர்களையும் ஒருசேர தோற்கடித்துள்ளோம்.

காலத்திற்கு ஒவ்வாத மனுதர்ம கொள்கைகளை நிறைவேற்றியே தீருவோம் என மூர்க்கத்தனமான முறையில் செயல்பட்டு வரும் மோடி தலைமையிலான ஆட்சிக்கு சம்மட்டி அடி விழுந்துள்ளது.

விவசாயிகளுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டங்களை திரும்ப பெறும் வரையில் வீடு செல்ல மாட்டோம் என்று உறுதியான போரை, மகத்தான போரை, மோடி அரசுக்கு எதிராக மேற்கொண்டு ஓராண்டுக்கும் மேலாக கடும் குளிர், வெப்பம், மழை, கொரோனா தோற்று என எது குறித்தும் அஞ்சாது சமர் புரிந்து, 700 விவசாயிகளை களத்தில் பலிகொடுத்து, மோடியின் அரசை பணிய வைத்து, மன்னிப்பு கேட்க செய்து வெற்றி வாகை சூடிய விவசாயிகளை வாழ்த்துவோம்; போற்றுவோம்.

மோடிக்கு பாடம் புகட்டுவது மட்டுமின்றி போராடும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய விவசாயிகள் போராட்டத்தை முன்மாதிரியாக மேற்கொள்வோம்.

வழக்கத்திற்கு மாறாய் வடகிழக்கு பருவமழை தமிழகத்தை நிலைகுலையச் செய்தது.

தலைநகர் சென்னை தத்தளித்து, வெள்ளத்தில் மிதந்து, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது.

காவிரி பாசன மாவட்டங்களில் மட்டுமின்றி தமிழ் நாடு முழுமைக்கும் விவசாயிகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

நெல், கரும்பு, வாழை, மஞ்சள், வெங்காயம், காய்கறிகள், மலர்கள், பழ தோட்டங்கள் அழிந்தன.

வடகிழக்கு பருவமழை மட்டுமின்றி டிசம்பர் இறுதி வாக்கில் 30, 31 மற்றும் ஜனவரி 1, 2, 3 தேதிகளில் பெய்த பெருமழை சேதாரங்களை மேலும் அதிகமாக்கியது.

விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30, 40 ஆயிரம் செலவு செய்து, அனைத்தும் பயனற்றுப் போயின. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்கிற பழமொழி உண்மையானது.

ஒன்றிய அரசு உயர்மட்ட குழுவை அனுப்பியது; வந்தது; பார்த்தது; சென்றது. ஊடகங்களில் செய்தியானதைத் தவிர வேறு ஒரு பயனுமில்லை.

தமிழ்நாடு அரசு வெள்ள நிவாரண நிதியாக ரூ.6,000 கோடி வழங்க வேண்டுமென ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்தது. வழக்கம்போல் மோடி அரசு மவுனம் சாதிக்கிறது.

மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ள மாநில அரசு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20,000 என்றும், இடுபொருளாக ரூபாய் ஆறாயிரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

**தாளடி முற்றாக அழிந்து போய் விட்டன. அறுவடைக்கு தயாராக இருந்த சம்பா நெற்கதிரும், டிசம்பர் இறுதியாய் பெய்த பெருமழை காரணமாக பெரும் சேதத்திற்கு உள்ளாகி உள்ளது. விவசாய தொழிலாளர்கள் வாழ்வாதாரம் இன்றி தவிக் கின்றனர். விலை உயர்ந்த கால்நடைகளை இழந்துள்ளனர். அரசு கட்டிக்கொடுத்த தொகுப்பு வீடுகள் உட்பட குடிசை வீடுகளும் மழை வெள்ள சேதத்திற்கு ஆளாகியுள்ளன. இவைகளுக்கு எல்லாம் நிவாரணம் வேண்டுமென மக்கள் எதிர்பார்ப்பது தவறல்ல. நிரவாரணங்கள் வழங்கிட வேண்டும் காலதாமதமின்றி, உடனடியாக வழங்கிட வேண்டும்.**

ஒன்றிய அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் மாநில அரசு கோரிய நிதியை வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசும் ஏக்கருக்கு ரூ.30,000 உட்பட நிவாரணங்களை அறிவிப்பதுடன், தாமதமின்றி வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ளது.

ஆங்கிலப் புத்தாண்டு பிறக்கும்போதே அபாய அறிவிப்புகளுடன் பிறந்துள்ளது.

கொடிய கொரோனா நம்மை விட்டு விலகுவதாக தெரியவில்லை. மூன்றாம் அலை பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தொடர்ந்து அரசால் எச்சரிக்கப்பட்டு வருகின்றது.

கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் மீண்டும் அதிகரித்து வருகின்றது.

மிகுந்த எச்சரிக்கையுடன் அலட்சியப்படுத்தாமல், பாதுகாப்புடன் இருக்கவேண்டும்.

தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் நொடிப்பொழுதும் தாமதிக்காது, தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

மரணத்தை கண்டு அஞ்சுபவர்கள் அல்ல நாம் என்றாலும், மரணத்தை நாமே நமது நடவடிக்கையால், அலட்சியத்தால் வரவழைத்துக் கொள்ளக் கூடாது.

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் பட்டாசு ஆலை விபத்தில் 5 தொழிலாளர்கள் மரணம் என்று ஆண்டின் தொடக்கம் தொடர்வது மிகுந்த கவலைக்குரியது.

பட்டாசு தொழிலை நம்பித்தான் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் உள்ளன.

தொழில், தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். அரசு குறைந்தபட்ச இழப்பீடு மட்டும் வழங்கினால் போதுமானது அல்ல. கண்காணிப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

ஆண்டின் முடிவும், தொடக்கமும் சோகங்களும், சோதனைகளும், கவலைகளும் நிறைந்துள்ள போதும், வெற்றிகளும் தந்து விட்டுச் சென்றுள்ளது.

நல்லதொரு முன்னுதாரணங்களையும் நமது தோழர்களின் குடும்பங்கள் நமக்கு வழங்கியுள்ளன.

இலக்கியப் பேராசான் ஜீவா கட்சியின் பொதுக் கூட்டத்திற்கு சென்று விட்டு, கூட்டம் முடிந்து இரவு இரயில் பயணம் மேற்கொண்டு சென்னை வருகின்றார்.

சென்னை ரயில் நிலையத்தில் இறங்கியவுடன் அழைத்துச் செல்ல வந்த தோழரிடம் இரவு சாப்பிடவில்லை; பசிக்கின்றது, சாப்பிட வேண்டும் வாங்கிக்கொடு என்கின்றார்.

அழைக்க வந்த தோழர், ஏன் உங்களிடம் பணம் இல்லையா? எனக் கேட்க...

பணம் இருக்கின்றது; நிறைய இருக்கின்றது. ஆனால், அது என்னுடைய பணம் அல்ல; கட்சிப் பணம் என்றார்.

ஜீவாவின் முன்னுதாரணத்தை நாம் மேடைதோறும் பெருமையோடு பேசி வருகின்றோம். கேட்போர் அதிசயித்து நிற்கின்றார்கள். இப்படியுமாய் இருந்தார்கள் என வியந்து போற்றுகின்றார்கள்.

பேராசான் ஜீவாவின் முன்னுதாரணங்கள் அழிந்து போய் விடவில்லை.

அவரின் வாரிசுகள் நமது கட்சிக்குள் தொடர்கின்றார்கள்; தொடர்ந்து கொண்டே இருப்பார்கள்.

தோழர் வி.ராஜமோகன் மருத்துவமனையில் நம்மை விட்டு பிரிந்த போது, அவரது துணைவியார் ஞானசுந்தரி அழுது கொண்டே, கைபேசி வாயிலாக துயரச் செய்தியைத் தெரிவித்தார்.

செய்தியை அறிந்தவுடன் சிறிதும் தாமதமின்றி ஜனசக்தி மேலாளர் தோழர் இளசை கணேசன் மருத்துவமனைக்கு சென்று அவரை சந்தித்து, ஆறுதல் தெரிவித்ததுடன், இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளுக்கு ரூ.25,000 வழங்கினார்.

பெற்றுக்கொள்ள மறுத்து, மீண்டும் கைபேசியில் தொடர்பு கொண்டு, கணேசன் பணம் கொடுக்கின்றார்; பணம் வேண்டாம். நேற்றுதான் ஜனசக்தியில் இருந்து சம்பளப் பணம் கொடுத்தார்கள். ஆகவே வேண்டாம் என்று மறுத்தவரை சமாதானப்படுத்தி பெற வைத்தோம்.

சட்டப்பேரவை தேர்தல் வந்தபோது தனது பங்காக ரூ.3000 வழங்கினார். வேண்டாம் என்று கட்சி சொன்ன போது, அவர் இருந்தால் (ராஜமோகன்) கொடுத்திருப்பார். ஆகவே பெற்று கொள்ளுங்கள் என்று வற்புறுத்தி வழங்கினார்.

நெல்லை மாவட்டம் தோழர் எம்.தங்கவேல் கட்சியின் வாசுதேவநல்லூர் ஒன்றிய செயலாளர், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர், தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங் கத்தின் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்து சிறப்பாக செயல்பட்ட தோழர். ஓவிய ஆசிரியராக பணியாற்றினார். 1973–ல்

தொடர்ச்சி 3ம் பக்கம் >>



எஸ்.சுதாகர் ரெட்டி

# நாகாலாந்து படுகொலைகளும் ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டமும்

**நாகாலாந்தில் ஆயுதப்படைகள் டிசம்பர் 4ம் தேதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 14 பேர் கொல்லப் பட்டனர். மோன் மாவட்டத்தில் பணியாற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் சிலர், மற்றவர்கள் அவர்களுடைய கிராமத் திலிருந்து வந்த அவர்களது உறவினர்களும் நண்பர்களும். அது ஓர் இரக்கமற்றப் படுகொலை.**

'ஆயுதப் படையினர் தற்காப்புக்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர்' என உள்துறை அமைச்சர் அமித்ஷா நாடாளுமன்றத்தில் அறிக்கை அளித்தார். அது கேலிக்குரிய பொய். படையினருக்கு எதிர்ப்புறத்தில் இருந்து சுடும்போது, படையினர் திருப்பித் துப்பாக்கிச் சூடு நடத்தினால் அது தற்காப்பு.

அவர்களது வாகனத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் சாலைத் தடுப்புகளைப் பயன்படுத்தியிருக்கலாம். அவ்வழியில் தீவிரவாதிகளை எதிர்பார்த்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் படையினர் கூறிக் கொள்கின்றனர். தங்கள் வண்டியை நிறுத்துமாறு சைகை செய்யப்படவில்லை என உயிர்பிழைத்த தொழிலாளி கூறினார். ஒருக்கால் அத்தகவல் உளவுப் பிரிவினரால் தரப்பட்டிருக்கலாம். சில காலமாக நாகாலாந்து கொந்தளிப்பில் குழப்பமாக இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன் நாகாலாந்து தீவிரவாதிகளுடன் சில உடன்பாடு ஏற்பட்டதாக மோடி அரசு கூறினாலும் அந்த உடன்பாடு என்ன என்பது குறித்து மக்களிடம் நம்பிக்கை வைத்து எதுவும் சொல்லவே இல்லை. தீவிரவாதிகளுடன் விவாதம் நடத்திய மூத்த காவல்துறை அதிகாரி ரவிக்குச் சுளையாகச் சமீபத்தில் ஆளுநர் பதவி அளிக்கப்பட்டது. கொடூரமான துப்பாக்கிச் சூடு சம்பவம் கிளர்ச்சியாளர்களை இப்பகுதியில் மீண்டும் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடத் தூண்டலாம்.

இராணுவக் கோர்ட் விசாரணை நடத்துவது இச்சம்பவத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க உதவாது; காரணம், அவர்களை 'ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம்' பாதுகாக்கிறது. 'பதற்றமான பகுதிகள்' என அழைக்கப்படும் இடங்களில் மக்கள் இயக்கங்களை நசுக்குவதற்காகப் பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்ததே இந்தச் சிறப்பு அதிகாரச் சட்டம். விடுதலை பெற்ற இந்தியாவில் அஸாமின் சில பகுதிகளுக்காக 1958ல் இச்சட்டம் அறிமுகமானது. பின்னர் ஒன்றிணைந்த அஸாம் மேலும் ஆறு வடகிழக்கு மாநிலங்களாகப் பிரித்து அமைக்கப்பட்டபோது, ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அச்சட்டத்தை அமல்படுத்த அஸாம் ரைஃபிள்ஸ் படை நியமிக்கப்பட்டது. அவர்கள் நடத்திய அட்டூழியங்கள் காரணமாகச் சிறப்பு அதிகாரச் சட்டத்தை மக்கள் வெறுத்தனர். பின்னர் அது மாற்றியமைக்கப்பட்டது. கடந்த பல வருடங்களில் பல சம்பவங்கள் நிகழ்ந்தேறின, கிளர்ச்சியாளர்களோடு மற்றவர்களும் கொல்லப்பட்டனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன் மணிப்பூரில் 20 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பேருந்து நிலையத்தில் காத்திருக்கும்போது சிலர் மிருகத்தனமான தாக்குதலைச் சந்தித்தனர். மனோரமா தேவி என்ற பெண்மணி பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்ட நிகழ்வால் மணிப்பூர் பெண்கள் பெரும் சீற்றம் அடைந்தனர். அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி உலக மக்களின் மனசாட்சியை உலுக்கியது; அப்பேரணியில் நிர்வாணமாகச் சென்ற பெண்கள், ''எங்களைப் பலாத்காரம் செய்'' என முழக்கமிட்டனர். மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போயினர். அஃப்ஸ்பா சட்டத்திற்கு எதிராக இரோம் ஷர்மிளா பல ஆண்டுகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். அவருக்கு வலுக்கட்டாயமாக அரசு உணவு ஊட்டினாலும், அவற்றை மீறி அவர் 16 ஆண்டுகள் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

**நீதிபதி ஜீவன் ரெட்டி கமிஷன்**

**உச்சநீதிமன்ற நீதியரசர் ஜீவன் ரெட்டி தலைமையிலான குழு 2005 ஜூன் 6 அறிக்கையில் இச்சட்டத்தை ரத்து செய்யக் கறாராகச் சிபாரிசு செய்தது. ஏனெனில், "இச்சட்டம் வெறுப்பு மற்றும் அடக்குமுறையின் அடையாளம், அடாத நடவடிக்கைகளுக்கான ஒடுக்குமுறை கருவி" என்றது. 10 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்ட அறிக்கையை 2015ல் மோடி அரசு நிராகரித்தது.**

**சந்தோஷ் ஹெக்டே குழு**

2013ல் ஆறு பேர் இராணுவத்தால் கொல்லப்பட்ட நிகழ்வை அடுத்து தொடர்ச்சியாக நடத்தப்பட்ட போராட்டங்களால் நீதியரசர் சந்தோஷ் ஹெக்டே குழு அமைக்கப்பட்டது. மேனாள் முதன்மை தேர்தல் ஆணையர் ஜெ.எம். லிங்டோ மற்றும் காவல்துறை மூத்த அதிகாரி ஒருவரும் குழுவில் இடம்பெற்றனர். விசாரணைக்குப் பிறகு பலியானவர்கள் எவர் மீதும் எந்தக் குற்றப் பின்னணி பதிவுகளும் இல்லை என்று அறிவித்தவர்கள், அஃப்ஸ்பா சட்டம் மேலும் மனிதத்தன்மையுடன் இருக்க வேண்டும், இராணுவப் படையினர் தங்கள் செயல்களுக்கு மேலும் பொறுப்பாக்கப்பட வேண்டும் என்றும் கூறினர்.

நீதிக்குப் புறம்பான கொலைகளைச் சட்டபூர்வமாக விசாரிப்பது குறித்து ஒன்றிய அரசு மூன்று மாத காலத்திற்குள் முடிவெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் ஆலோசனை கூறினர். மேலும் ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் போன்ற பகுதிகளில் அமைதியை ஏற்படுத்தி சாதிப்பதில் அஃப்ஸ்பா சட்டம் தடையாக உள்ளது எனக் குறிப்பிட்டது.

ஹெக்டே குழு ஆயுதப் படையினருக்கு எதிராகக் குற்ற நடவடிக்கை எடுப்பதிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அச்சட்டத்தின் ஆறாவது பிரிவைக் குறிப்பிட்டு முக்கியமான விமர்சனத்தைச் செய்தது: 'அப்பிரிவின்படி ஒன்றிய அரசின் அனுமதி இன்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட முடியாது; அவ்வாறெனில், உரிய விசாரணைக்குப் பின் ஒன்றிய அரசால் சட்டபூர்வ குற்ற நடவடிக்கைக்கு அனுமதி வழங்க முடியும் என்பதே அதன் பொருள்' என்றும் விளக்கியது.

இரண்டாவது நிர்வாகச் சீர்திருத்தக் குழு தனது அறிக்கையில் அஃப்ஸ்பா சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என சிபாரிசு செய்தது; மேலும் அவ்வாறு ரத்து செய்தால் அது வடகிழக்கு மாநில மக்களிடையே எழுந்துள்ள பாகுபாடு மற்றும் அன்னியப்படுத்தப்படுவதான உணர்வையும் நீக்கும் என்று கருத்துரைத்தது. அக்குழு, சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தைத் திருத்தவும் வடகிழக்குப் பகுதியில் ஆயுதப்படைகளைப் பயன்படுத்துவது பற்றிய புதிய அத்தியாயத்தைச் சேர்க்க வேண்டும் எனவும் சிபார்சு செய்தது.

உச்சநீதிமன்றம் பின்வருமாறு கூறியது: ஆயுதப்படை நடத்தும் எந்த என்கௌண்டரில் பலியானாலும், பலியானவர் அப்பாவி பொது மனிதரோ அல்லது தீவிரவாதியோ அல்லது பயங்கரவாதியோ எவராயினும் அது முழுமையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்; சட்டம் அனைவருக்கும் பொது, இருவருக்கும் சமமாகவே பயன்படுத்த வேண்டும். ஜனநாயகத்தின் தேவை அது, மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதன் தேவையும், தனிநபர் சுதந்திரங்களைப் பாதுகாப்பதன் தேவையுமாகும். இப்படிப் பல முக்கியமான சிபார்சுகளுக்குப் பிறகும் ஆயுதப் படையினர் சிறப்பு அதிகாரச் சட்டம், மக்கள் விருப்பத்திற்கு மாறாகத் தொடர்கிறது; அப்பாவிகள் பலியாவதும்கூட.

சிலகாலம் முன்பு ஒரு மூத்த இராணுவ அதிகாரி, 'எந்த நாட்டின் மக்கள் அந்நாட்டின் இராணுவத்தைப் பார்த்து பயப்படவில்லையோ, அந்த நாடு சபிக்கப்பட்டதாக அழியும்' என்று திருவாய் மலர்ந்தார். அது சரியான கருத்து அல்ல. எல்லைகளையும் தேசத்தையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே இராணுவம், மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக அல்ல. நாட்டின் எதிரிகள், ஆக்கிரமிப்பாளர்கள் இராணுவப் படையைப் பார்த்து பயப்பட வேண்டும். நமது நாட்டு மக்கள் இராணுவத்தை மதிக்கிறார்கள், வீரர்களின் தியாகத்தை போற்றி அவர்களிடம் அன்புடையவர்களாக இருக்கிறார்கள். பின் அவர்கள் ஏன் அச்சப்பட வேண்டும்?

அரசு நிர்வாகத்தின் எந்த அமைப்பிடமும் அச்சப்படுவது வெறுப்பை வளர்க்கும். தேசத்தின் ஒட்டுமொத்த மக்களும் தீவிரவாதிகள் இல்லை. மக்கள் கூட்டம் பின்வரும் பிரிவினர்களைக் கொண்டிருக்கிறது: தேசத்தின் செல்வத்தை உற்பத்தி செய்யும் உழைக்கும் வர்க்கம்; தேசத்திற்கு அன்னமிட உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள்; ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் போல பெரும் கருவிகளை உற்பத்தி செய்து வானை அளக்க ஊர்திகள் அனுப்பும் நமது விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள்; மக்களின் நலன் காக்கும் மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், கைவினைஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், மக்கள் உரிமைக்காகப் போராடும் மக்கள் பிரதிநிதிகள், சிறிய பெரிய வணிகர்கள், போற்றுதலுக்குரிய தூய்மைப் பணியாளர்கள், கணினி வல்லுநர்கள் என எண்ணிறைந்த பகுதியினரைக் கொண்டது நமது மக்கள் தொகை. இந்த மக்கள் இராணுவத்தைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும்? எங்கெல்லாம் குற்றவாளிகளும் சமூக விரோதிகளும் இருக்கிறார்களோ அவர்களை நமது காவல்துறையினர் கவனித்துக் கொள்வார்கள்.

நாடாளுமன்றத்தில் எதிர் கட்சிகள், காங்கிரஸ் உட்பட நாகாலாந்து படுகொலைகள் குறித்து முழுமையான விசாரணை கோரி எதிர் தரப்புப் பங்கினை ஆற்றின; இடதுசாரிகள் உட்பட சில கட்சிகள் மக்கள் விரோத அஃப்ஸ்பா சட்டத்தை ரத்து செய்யக் கோரின.

தற்போது இதற்கான போராட்டம் வடகிழக்கு மற்றும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளோடு வரையறுத்து நிற்பதல்ல. இது ஒட்டு மொத்த தேசத்தின் ஜனநாயகத்திற்கான போராட்டம். அரசியல் கட்சிகள், ஜனநாயக சக்திகள் மற்றும் மக்கள் அனைவரும் அஃப்ஸ்பா சட்டத்தை ரத்து செய்வதற்காக இணைந்து போராட முன்வர வேண்டும்.

நன்றி: நியூஏஜ், தமிழில் : **நீலகண்டன்**

---

**02ம் பக்கத் தொடர்ச்சி >>**

விமான விபத்தில் தோழர் பாலன் பலியான போது, இரங்கல் ஊர்வலத்தில் தோழர் தங்கவேலுவும், நமது கட்சி தோழர்களும் கட்சிக்கு நிதி வசூல் செய்கின்றார்கள்.

(ஊர்வலத்தில் கலந்துகொண்டதற்காக நிர்வாகத்தால் பழிவாங்கப்பட்டு வேலையை விட்டு நீக்கப்பட்டார்)

ஒரு நண்பரிடத்தில் நிதி கேட்கின்றார்கள். அவரும் கட்சியின் மீதும், தோழர்கள் மீதும் நல்லெண்ணம் கொண்டவர். ரூபாய் 60,000 தருவதாக தெரிவித்து விடுகின்றார், உடன் ரூ. 50,000 வழங்கிவிட்டு மீதியை மறுநாள் பெற்றுக் கொள்ளுமாறு கூறுகின்றார். மறுநாள் தங்கவேல் நன்கொடை யாளரிடம் சென்ற போது, பாக்கி ரூபாய் பத்தாயிரம் கொடுத்து விடுகின்றார், ரூபாயை பெற்றுக்கொண்ட தங்கவேல் வீடு செல்கின்றார்; வீட்டில் ரூபாயை எண்ணுகின்றார். ஆயிரம் ரூபாய் அதிகமாக உள்ளது.

உடனடியாக நன்கொடை வழங்கியவர் இல்லம் சென்று, அவரை சந்தித்து நீங்கள் வழங்கியதில் ரூபாய் 1000 அதிகமாக உள்ளது என்று திருப்பிக் கொடுத்து விடுகின்றார்.

நன்கொடை கொடுத்தவரும், அவருடன் இருந்த நண்பர்களும் வியந்து போகின்றார்கள். இந்த காலத்திலும் இப்படி இருக்கின்றார்களே! கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்களைத் தவிர யாரிடமும் நாம் இப்படிப்பட்ட நேர்மையை பார்க்க முடியுமா? என வியந்து போகின்றார்கள்.

தங்கவேல் மட்டுமல்ல, அவரது மனைவி தோழர் பார்வதி, தங்கவேலுவை போன்று கட்சி மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். தங்கவேல் 75ஆவது பிறந்த நாளில், கணவனும் – மனைவியும் அலுவலகத்திற்கு வந்து அன்று நடைபெற்ற மாவட்டக் குழு கூட்டத்தில் பங்குபெற்ற மாவட்ட குழு உறுப்பினர்கள் அனைவருக்கும், அவர்களது செலவில் உணவு சமைத்து பரிமாறி மகிழ்ந்தார்கள்.

தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்பார்கள்.

தங்கவேல் தம்பதியரின் அன்பு மகன் முத்தழகு நெல்லை மாவட்ட அலுவலகத்திற்கு வருகின்றார். மாவட்ட செயலாளர் எஸ்.காசிவிசுவநாதனை சந்தித்து அப்பா பையில் ரூ.4,200 இருந்தது, அப்பாவிற்கு இவ்வளவு பெரும் தொகை என்றும் இருந்ததே இல்லை. ஆகவே இது கட்சி பணம் தான் என்று கூறி, தொகை முழுவதையும் கொடுத்து செல்கின்றார்.

ஆண்டின் இறுதியில் டிசம்பர் 27 அன்று மாலை தான், நமது மதிப்புமிக்க தலைவர் தா.பா.வின் படத்திறப்பு நிகழ்ச்சி. நிகழ்ச்சி தொடர்பான பணிகளில் இருந்த போது, தோழர் டாக்டர் வே.துரைமாணிக்கத்தின் மூத்த மருமகன் செல்லதுரை போன் செய்து, உங்களை நேரில் பார்க்க வேண்டும், எப்போது வரலாம்? எனக் கேட்டார்.

இன்று தா.பா.வின் படத்திறப்பு நிகழ்ச்சி உள்ளது. பகல் 12 மணிக்குள் வந்தால் பார்க்கலாம் என்று தெரிவித்தோம்.

காலை 11 மணிக்கு தோழர் வே.துரைமாணிக்கத்தின் மூத்த மகள் வாலண்டினா, இளைய மகள் சசிகலா, மருமகன் செல்லதுரை ஆகிய மூவரும் பாலன் இல்லம் வந்து ஒரு சிறு கைப்பையை கொடுத்தார்கள் (பேக்).

அப்பை (பேக்) முதுகளத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு விவசாயிகள் சங்க ராமநாதபுரம் மாவட்ட 24 வது மாநாட்டில் வழங்கப்பட்டது. (27.07.2018) பேக்கை பெற்று திறந்து பார்த்தபோது நான்கு கவர்களும், வங்கிக் கணக்குப் புத்தகங்களும் இருந்தன.

ஒரு கவரில் ரூ.16,200 – ம்
மற்றொன்றில் ரூ.2,500 – ம்
மற்றொன்றில் ரூ 10,000 – ம்
மற்றொன்றில் 10,000 – ம்
இவையன்றி தனியாக ரூ.400–ம்
ஆக மொத்தம் ரூ.39,500
ஆகியவை இருந்தன.

இவையன்றி வங்கி கணக்குப் புத்தகங்களும் இருந்தன. அவற்றில் ஒன்றில் ரூ.3,15,986.50 பைசா இருப்பு இருந்தது. இப்புத்தகம் அவருடைய பெயரில் இருந்தது.

மற்றொரு பாஸ் புத்தகம் சங்க பெயரில் உள்ளது. அவற்றில் ரூ.476 உள்ளது. இவை அனைத்தையும் நமது அன்பு மகள்களும், மருமகனும் கட்சியிடம் ஒப்படைத்து, இது எங்கள் பணமல்ல, சங்கத்தின் பணம் என்று பொறுப்போடு வழங்கினார்கள்.

நம்மால் மகிழ்ச்சியோடு பெறமுடியவில்லை. கண்களில் தாரை, தாரையாக கண்ணீர் வடிந்தது. அது இன்றுவரை நிற்கவில்லை.

இழப்பு, சோகம், வெற்றி, முன்மாதிரிகள் என்று 2021ஆம் ஆண்டு விடை பெறுகின்றது. 2022ஆம் ஆண்டு அச்சத்தோடு பிறந்துள்ளது. எதிர்கொள்ளவேண்டியவை ஏராளம், ஏராளம். அவைகளை எதிர்கொள்வோம்.

அனுபவங்களைப் பெற்றோம். வெற்றிகளை கொண்டாடி மகிழ்வோம். முன்னுதாரணங்களை பின்பற்றுவோம்.

வணக்கம். மீண்டும் சந்திப்போம்.

தோழமைமிக்க **இரா.முத்தரசன்**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

**மலர்** 84 **இதழ்** 40

# பொங்கலுக்கு வராதே போ, போ, போ!

ஆறுகள் பல ஓட, திருமேனி செழித்ததாக, அசைக்க முடியாத கிராமப் பொருளாதாரம் நின்று நிலைத்திருந்த தமிழ்நாட்டில், விளைச்சலைத் தந்த இயற்கையை, சூரியனை, உடனிருந்து உழைத்த மாடுகளை போற்றி வணங்கும், பொங்கல் திருவிழா நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

மதங்கள், சாதிகள் வேறுபாடு எதுவுமின்றி, மனிதம் தோய்ந்து, அன்பால் ஒன்றுபடும் தமிழர் திருநாள். சுழன்றும் ஏர்பின்னது உலகம் என உழவர்களைக் கொண்டாடுகிற திருநாள். இன்று கிராமச் செழுமை குறைந்து பெரிதும் நகர்மயமாகி, உழு கலன்கள் நவீனமாகி, செல்வமாய்க் கருதப்பட்ட மாடுகள் உற்பத்திச் செயல் பாட்டிலிருந்து விலக்கப்பட்டு விட்ட பின்னும், மூளையில் தங்கியுள்ள மரபணுக் கூறுகள் பொங்கலை இன்னும் பொலிவுற கொண்டாட வைக்கின்றன.

இந்தப் பொங்கலை கொண்டாடுவதற்கு இந்தியாவின் பிரதமர் மோடியை தமிழ்நாட்டுக்கு பாஜக அழைத்து வருவதாகச் செய்திகள் சொல்கின்றன. எப்படிப்பட்ட பிரதமர்?

வேளாண் சட்டங்களை கொண்டு வந்து, இந்திய விவசாயிகளை தலைநகரின் எல்லைப் புறத்தில் வைத்து வாட்டி எடுத்த பிரதமர்! 700 க்கும் மேற்பட்ட விவசாயிகளின் சாவுக்கு காரணமாக இருந்ததோடு மட்டுமில்லாமல் ‘அவர்கள் என்னாலா செத்தார்கள்’ என்று ஆணவக் கேள்வி எழுப்பும் பிரதமர்!

சென்ற மாதங்களில் பெருவெள்ளம் தமிழ்நாட்டை புரட்டி எடுத்த தால், காவிரிப்படுகையில் விவசாயம் முற்றிலுமாகக் கொள்ளை போனது. அதைப் பார்வையிட ஒன்றிய அரசு அனுப்பிய குழு நவம்பர் 21ம் தேதியன்று, நேரடியாக வந்து சேதத்தைப் பார்வையிட்டுப் போனது.

மேலும் ஒன்றிய அரசுக்கு, நவம்பர் 16, 25 மற்றும் டிசம்பர் 15 ஆகிய நாட்களில் சேதவிபரங்களுடன் கூடிய விரிவான அறிக்கைகளை தமிழ்நாடு அரசு சமர்ப்பித்து இருக்கிறது. சேதங்களை சரிசெய்ய தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு 1510. 83 கோடி ரூபாயும், நிரந்தர சீரமைப்புக்கு 4719. 62 கோடி ரூபாயும் நிவாரணமாக வழங்கிட கோரி தமிழ்நாடு முதல்வர் டிசம்பர் 29ம் தேதி இந்தியப் பிரத மருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால் எந்த நிவாரணமும் தமிழ்நாட்டுக்கு தர மறுத்து விட்ட பிரதமர்!

இந்தியாவில் மிக அதிகமான ஜிஎஸ்டி வரி செலுத்தும் முன் வரிசை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. அது போதாது என, ஏற்கனவே ஜிஎஸ்டி இழப்பீடு நிலுவைத் தொகை ரூ.16,125 கோடி, ஒன்றிய மாநில அரசுகளால் இணைந்து நடத்தப்படும் திட்ட செல வுக்காக ஒன்றிய அரசு தரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.17,000 கோடி, செயல்திறன் மானியம் ரூ.2029.22 கோடி, அடிப்படை மானி யம் ரூ. 540 8.6 கோடி ஆக மொத்தம் 36,302.98 கோடி ரூபாய்களை ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குத் தர வேண்டும். கொரோனா ஒரு பக்கமும் பெருமழை மறுபக்கமும் சூறையாடிய தமிழ் நாட்டைப் பாதுகாக்க, நிலுவை தொகைகளைக்கூட தருவது பற்றி வாயே திறக்காத பிரதமர்!

அண்மையில் ஹரித்துவாரில் நடைபெற்ற மதவெறி சக்திகளின் மாநாட்டில் பகிரங்கமாக “காவல் துறையும், ராணுவமும், இந்துக்களும் சேர்ந்து ஆயுதங்களை ஏந்தி, முஸ்லிம்களை அகற்ற வேண்டும்; 20 லட்சம் முஸ்லிம்களை கொன்று குவிக்க 100 வீரர்கள் நமக்குத் தேவைப்படுகிறார்கள்; நவீன ஆயுதங்களில் பயிற்சி பெற வேண்டும்; அத்தகைய கொலைகளைச் செய்யத் தயாராக இருக்கும் இந்துவுக்கு ஒரு கோடி ரூபாய் இப்போதே கொடுக்கிறோம்“ என்றெல்லாம் பேசப்பட்டிருக்கிறது. மிக நீளமான அந்த உரைகள் யாவும் காட்சி ஊடகங்களின் வழியே நாடெங்கும் பரவி இருக்கின்றன.

இதன்மீது அந்த மாநிலத்திலும், ஒன்றியத்திலும் ஆளுகிற பாஜக அரசுகள் எடுத்த நடவடிக்கை என்ன? அரசியல் சாசனத்துக்கு எதிராக, மக்களிடையே வெறுப்பை விதைக்கும், விஷம் கக்கும் பரப்புரை நிகழ்த்தியவர்களை தேசவிரோதச் செயல் மற்றும் ஊபா சட்டத்தின்படி கைது செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை மறுத்து, தட்டிக் கொடுக்கிற பிரதமர்!

கார்ப்பரேட் கொள்ளை லாபத்துக்காக விவசாயிகளைப் பலியிட்டு, அன்பு படர்ந்த திருநாட்டில் வெறுப்பை விதைத்து, மக்களைப் பிரித்து, தமிழ்நாட்டுக்கு சேரவேண்டிய தொகைகளை வழங்காமல் தடுத்து, உரிய நிவாரணத் தொகையை வழங்குவதற்கு மறுக்கும் ஒருவருக்கு, மேன்மையும் மனிதமும் மிகுந்த பொங்கல் திருநாளைத் தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டாட என்ன அருகதை இருக்கிறது?

பொங்கலுக்கு வரும் பொருந்தாத நபரை நோக்கி, முன்னரே ஒலித்த அந்தப் பெரும் குரல், இந்த வாரம் முழுமையும் முழங்கட்டும், “மோடியே திரும்பிப் போ!”

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடுகள்

### திருத்துறைப்பூண்டி ஒன்றிய கிளை மாநாடுகள்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நகரம் முழுவதும் கிளை மாநாடுகள் நடைபெற்றன.

பனையூர், இராயநல்லூர், விளக்குடி, மேட்டுப்பாளையம், கொத்தமங்கலம், நுணாக்காடு, எழிலூர், நெடும்பலம், கட்டிமேடு, பிச்சன்கோட்டகம், மேலமருதூர், ஆதி ரெங் கம், சேகல், கொருக்கை, மேலகொருக்கை, தலைக் காடு, கொக்கலாடி, பாமணி, தேசிங்குராஜபுரம், வரம்பி யம்,வேளூர், மணலி, குன்னூர், குரும்பல், திருவலஞ் சுழி,கீரக்களூர், பூசலாங்குடி, ஆலிவலம், ஆண்டாங்கரை, கீராலத்தூர், திருத்தங்கூர், அம்மனூர், கோமல், கச்சனம், பழையங்குடி, ஆலத்தம்பாடி, ஆதனூர் ஆகிய 42 கிளைகளிலும் மாநாடுகள் நடைபெற்றன.

தேசியக்குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம். எல்.ஏ., மாவட்டச் செயலாளர் வை.சிவபுண்ணியம் எக்ஸ்.எம் .எல்.ஏ., மாநிலக்குழு உறுப்பினர்கள் கே.உலகநா தன் எக்ஸ்.எம்.எல்.ஏ., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., மற் றும் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மாநாடுகளில் கலந்து கொண்டனர்.

**தென்காசி மாவட்டம்:** தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற கிளை மாநாடுகள் வருமாறு, சிவகிரியில்: 1வது கிளை செயலாளர், ச.குருசாமி, துணைச் செயலாளர் முத்தையா, 2வது கிளை செயலாளர் கிருஷ்ணன், துணைச் செயலாளர் கணேசன், 3வது கிளை செயலாளர், மாரியப்பன், துணை செயலாளர் கந்தன், 17வது கிளை செயலாளர், கோவிந்தன், துணை செயலாளர், பாபு ஆகியோர் தேர்வு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாநாடுகளில் மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, மாவட்ட நிர்வாகக்குழு சிங்காரவேலு, நகர செயலாளர் பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராயகிரியில் 5வது வார்டு கிளை செயலாளர் கணேசன், துணை செயலாளர், கமலாதேவி, 6வது வார்டு கிளை செயலாளர் முருகம்மாள், துணை செயலாளர், வள்ளி, 11வது வார்டு கிளை செயலாளர் சின்னவேலுச்சாமி, துணை செயலாளர் நாகராஜன், 15வது வார்டு கிளை செயலாளர் வைரவராஜன், துணை செயலாளர் காளிமுத்து ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். நகர செயலாளர் சமுத்திரம், துணை செயலாளர் சொரிமுத்து, ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி நிர்வாக குழு தோழர்கள் சங்கரையா, இராமசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

சங்கரன்கோவில் ஒன்றியம் சுப்புலாபுரம் கிளை இரண்டாக பிரிக்கப்பட்டது. ஏ கிளை செயலாளர் மனுவேல் ராஜன், துணை செயலாளர் கணேசன், பி கிளை செயலாளர் கணபதி, துணை செயலாளர் பாடாலிங்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஒன்றிய செயலாளர் குருசாமி, விச முருகன், கனகராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருவேங்கடம் ஒன்றியத்தில் காரிச்சாத்தான் செயலாளர் மலையாண்டி, துணை செயலாளர் வேல் முருகன், பாறைப்பட்டி செயலாளர் மாயக்கண்ணன், துணை செயலாளர் குழந்தைசாமி, அத்திபட்டி செயலாளர் குருசாமி, துணை செயலாளர் முருகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒன்றிய செயலாளர் அந்தோணி கலந்துகொண்டார்.

வாசுதேவநல்லூர் ஒன்றியம் கூடலூர் கிளை செயலாளர் சிவஞானபாண்டியன், துணை செயலாளர் காளித்துரை, வாசுதேவநல்லூர் செயலாளர் ராஜன், துணை செயலாளர் கோட்டியப்பன், மேல புளியங்குடி செயலாளர் முருகன், துணை செயலாளர் ராஜேந்திரன், தாருகாபுரம் செயலாளர் முருகன், துணை செயலாளர் செல்வராஜ், தென்மலை செயலாளர் முனியாண்டி, துணை செயலாளர் கருப்பசாமி, திருமலாபுரம் செயலாளர் ஏசுராஜன், துணை செயலாளர் ஜெகதீசன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் மாநாடுகளில் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்பையா, ஒன்றிய செயலாளர் ப.வேலு, துணை செயலாளர் முருகன், ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

செங்கோட்டை தாலுகா புளியரை கிளை செயலாளர் கருப்பையா, துணை செயலாளர் செந்தில்மாரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாநாட்டில் மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை தாலுகா செயலாளர் மாரியப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**தாளமுத்துநகர் கிளை:**

தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்துநகர் கிளை மாநாட்டிற்கு சுப்ரமணியன் தலைமை தாங்கினார். மாநகர செயலாளர் எஸ்.பி.ஞானசேகர், கட்சியின் மூத்த வழக்கறிஞர் கணபதி சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் மாப்பிள்ளையூரணி தாளமுத்துநகர் கிளை செயலாளராக அந்தோணி சௌந்தர்ராஜன் தேர்வு செய்யப்பட்டார்.

**மீன்சுருட்டி கிளை:**

மீன்சுருட்டி கிளை மாநாட்டில் செயலாளராக வடிவேல், பொருளாளராக கலைச்செல்வன், முத்துசேர்வா மடம் கிளைச் செயலாளராக சபாபதி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஒன்றியசெயளாலர் ராமநாதன், துணை செயலாளர் ராஜாபெரியசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

**பண்டாரவாடை கிளை:**

பாபநாசம் தாலுகா, பாபநாசம் ஒன்றியம், பண்டாரவாடை கிளை மாநாட்டில் ஒன்றியச் செயலாளர் சாமு.தர்மராஜன் கட்சி கொடியை ஏற்றி வைத்தார். கிளை செயலாளராக பி.ராசு, துணைச் செயலாளராக ஜாபர் சாதிக் தேர்வாகினர்.

**ராஜபுர கிளை:**

ராஜபுரத்தில் கிளை மாநாடு பி.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. பி.கோதண்டபாணி கொடி ஏற்றினார். கிளைச் செயலாளர் கோ. பழனிச்சாமி நடைபெற்ற வேலைகளை சமர்பித்தார்.

**தோப்புத்தெரு கிளை :**

தோப்புத்தெரு கிளை மாநாட்டிற்கு ஆர். பாலசுப்பிரமணி யன் தலைமை தாங்கினார். வீ.கோவிந்தராஜ் கொடி ஏற்றினார். கிளைச் செயலாளர் கோ.கண்ணன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாநாடுகளில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர்.தில்லைவனம், ஒன்றிய செயலாளர் ஆர்.செந்தில்குமார், வி.தொ.ச. மாவட்டத் தலைவர் ஆர்.எஸ்.பாலு, எஸ்.திருநாவுக்கரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மணப்பாறை:**

மணப்பாறை 13வது நகர மாநாடு நடைபெற்றது. புறநகர் மாவட்ட செயலாளர் த.இந்திரஜித் கொடி ஏற்றிவைத்தார். புறநகர் மாவட்ட துணை செயலாளர் செல்வராஜ் உரை நிகழ்த்தினார். 27 பேர் கொண்ட நகரக் குழு அமைக்கப்பட்டது. நகர செயலாளராக ஜனசக்தி உசேன் தேர்வு பெற்றார்.

**தருமபுரி :**

நல்லம்பள்ளி வட்டாரம் மாதேமங்கலம், வெங்கட்டம் பட்டி, பாளையத்தானூர் ஆகிய கிளைகளின் மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் வெங்கடம்பட்டி கிளைசெயலா ளராக பி.பிரசாத், துணைச்செயலாளராக வி.நடராஜன், பொருளாளராக எஸ்.கபில் ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர். பாளையத்தானூர் கிளை செயலாளராக ஆர்.சிவன், துணைச் செயலாளராக ஜி.பழனிச்சாமி, பொருளாளராக இளந்திரையன் தேர்வு செய்யப்பட்டனர்.

மாதேமங்கலம் கிளை செயலாளராக ஜி.சண்முகம், துணைச செயலாளராக ஏ.கோபால் பொருளாளராக கே.மாதையன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**குட்டூர் கிளை:**

பர்கூர் வட்டம், குட்டூர் ஊராட்சி புளியம்பட்டியில் நடை பெற்ற மாநாட்டில் செயலாளராக ராஜாமணியும், துணை செயலாளராக சீனிவாசனும், பொருளாளராக ராமசாமியும் தேர்வு செய்யப்பட்டனர்.

**அகர எலத்தூர் கிளை:**

மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றியம் அகர எலத்தூர் 28வது கிளை மாநாடு நடைபெற்றது. மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன் அரசியல் விளக்கவுரை ஆற்றினார். கே.எஸ்.சிவராமன் ஒன்றிய செயலாளர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பேசினர்.

**திண்டுக்கல் மாநகர 25வார்டு கிளை:**

திண்டுக்கல் மாநகர 25வார்டு கிளை 7வது மாநாடு நடைபெற்றது. வி.பாலகணேசன் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

**தருமபுரி:**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டத்தில் உள்ள இலளிகத்தில் நடைபெற்ற கிளை மாநாட்டிற்கு மாவட் டக்குழு உறுப்பினர்கள் சின்னசாமி, மாதம்மாள் ஆகியோர் தலைமை வகித்தனர். கட்சியின் மாநில செயற் குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் கட்சி கொடியை ஏற்றி மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாவட்டச் செயலாளர் எஸ். தேவராசன், மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன், நல்லம்பள்ளி வட்டார செயலாளர் கிருஷ்ணராஜ், துணைச் செயலாளர்கள் பாரதி,சித்துராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**விருதுநகர் மாவட்டம்:**

சாத்தூரில் எ.எஸ்.சண்முகையா தலைமை வகித்தார். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க மாநில தலைவர் மருத்துவர் த.அறம், வட்ட செயலாளர் சாமிநாதன் ஆகியோர் பேசினார். செயலாளர் எஸ்.எஸ். முத்து வேலை அறிக்கை சமர்ப்பித்தார். நகர செயலாளராக ஜான்ராஜா, துணை செயலாளராக சையதுஅலி மற்றும் நிர்வாக குழு தேர்வு செய்யப்பட்டது.

**இராஜபாளையம் மில் அரங்க கிளை:**

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் மில் அரங்க கிளை மாநாடு ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், நகர செயலாளர் வி.இரவி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி ,விஜயன் ஆகியோர் பேசினார்கள். செயலாளராக மாரிமுத்து, துணை செயலாளர்களாக பாஸ்கர், மாரியப்பன் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**கல்போது கிளை:**

விருதுநகர் கிழக்கு ஒன்றிய கல்போது கிளை மாநாடு இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாநில குழு உறுப்பினர் பாலமுருகன்,மாவட்ட குழு உறுப்பி னர்கள் முத்துக்குமார், முருகேசன் ஆகியோர் பேசினர். செயலாளராக ராஜ்குமார் தேர்வு செய்யப்பட்டார்.

**சுந்தரபாண்டியம் கிளை:**


விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு வட்டம் சுந்தர பாண்டியம் சிபிஐ கிளை மாநாடு பால்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி . இ ர ா ம ச ா மி

>> தொடர்ச்சி 14ம் பக்கம்



எஸ். தோதாத்ரி

# அறிதல்



**பிறந்த குழந்தை இயற்கையைச் சார்ந்தே இருக்கிறது. அதன் செயல்கள் இயல்பூக்கம் சார்ந்தவை. ஆனால் அது வளர வளர சமுதாய மனித னாக மாறுகிறது. அப்போது அதற்குப் பிரக்ஞை உருவாகிறது. இது வளர வளர சிக்கலானதாக மாறுகிறது. புறத்தே இருக்கும் சமுதாயம் மூளை யில் பிரதிபலிக்கிறது. இது பல சமூக சிந்தனைகளாக வளர்கிறது. இப்பொழுது மனிதனுக்கு இரண்டு நடைமுறைகள் உள்ளன. ஒன்று இயற்கைச் சூழல் சார்ந்தவை. இரண்டு சமுதாயம் சார்ந்தவை. இவற்றிற்கு பொருத்தமானவை உண்மை என்று அறியப்படுகின்றன.**

**உலகின் எல்லாச் சிந்தனையாளர்களும் அறிவு பற்றிக் கூறியுள்ளனர். திருவள்ளுவர் 'அறிவுடைமை' என்ற ஒரு அதிகாரத்தையே அதற்கு ஒதுக்கியுள்ளார். அறிவிற்கு முதலிடம் கொடுத்து ஐரோப்பாவில் தோன்றிய இயக்கம் அறிவொளி இயக்கம் என்றே அழைக்கப்படுகிறது. மார்க்சிசமும் அறிவு பற்றி ஒரு கொள்கையை உருவாக்கி உள்ளது. இதற்கு மார்க்சிய அறிவுத் தோற்றவியல் என்று பெயர்.**

கருத்து முதல்வாதிகளுக்கும், சமய வாதிகளுக்கும் அறிவு என்பது அகத்தே உள்ள அல்லது புறத்தே உள்ள கருத்து அல்லது இறைவனை அறிவதே அறிவாகும். இங்கு அறிவிற்கு ஒரு எல்லை காட்டப்படுகிறது. அதற்கு அப்பால் அறிவு என்பது இல்லை என்பது இதன் பொருள். பொருள்முதல்வாதம் அவ்வாறு அல்ல. அது அறிவை எல்லையற்றதாக காண்கிறது.

பொருள்முதல்வாதத்தின் அடிப்படையான கருதுகோள் சுற்றியுள்ள பொருளைப் புரிந்துகொள்ள முடியும் என்பதாகும். இதிலிருந்துதான் மார்க்சிய அறிவியல் தொடங்குகிறது. மனிதன் ஆதி காலத்திலிருந்தே சுற்றுப்புறத்தை புரிந்து கொள்ள முயற்சித்தான். அதன் விளைவுதான் கருவிகளை கண்டுபிடித்தது, இயற்கையை தன் வசப்படுத்தியது ஆகியனவாம். இது பொருள் பற்றிய அறிவை அவனுக்கு கொடுத்தது. இதில் முதல் கூறு பொருள் என்பது புறவயமாக இருக்கிறது என்பதாகும். இதனை புரிந்து கொள்வதில் முதலில் அறியாமை உள்ளது. பின்னர் அறிந்து கொள்ளுதல் உள்ளது. அறியாதன, அறிந்து கொள்ளுதல் இந்த இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. நாம் அறியாமையிலிருந்து அறிதலுக்கு முன்னேறுகிறோம்.

மார்க்சிய அறிவுத் தோற்றவியலில் முக்கியமான கருத்து பிரதிபலித்தல் கொள்கையாகும். வெளியே உள்ள பொருள், நமது மூளையில் பட்டு பிரதிபலிக்கிறது. இது நமது மூளையில் பிம்பங்களாக மாறுகிறது. இந்த பிம்பங்களின் தொகுப்புதான் சிந்தனை. இந்த மூளை செயலிழந்தால் நாம் சிந்திப்பதில்லை. மருத்துவர்கள் மயக்க மருந்து கொடுத்தால் நமக்கு எதுவும் தெரியாது. எனவே இதில் ஏற்படும் நரம்பு மண்டலச் செயல் தான் சிந்தனை எனப்படுகிறது.

இவ்வாறு நமது மூளையில் ஏற்படும் பிம்பங்கள் சரிதானா என்று காண உள்ள முறை நடைமுறை என்பதாகும். நடைமுறையில் பொருத்தமானவை தாம் ஏற்றுக்கொள்ளப்படும். பொருத்தமற்றவை மறுக்கப்படும் அல்லது மறைந்து விடும். 'ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது' என்பார்கள். 'பட்டறிவு' என்பார்கள். இவை நடைமுறையைக் குறிக்கும் வழக்காறுகள்.

இந்த நடைமுறை என்பது வெறும் பூகோள செயல்கள் அல்ல. சூழ்நிலையில் இருந்து தகவல்களைப் பெறலாம். இவற்றை உணர்வது என்பது சமூகச் செயலாகும்.

அறிவு வளர்வதைப் பொறுத்து உண்மையும் உருவாகிறது. அறிவு வளர்ச்சி என்பது தெரியாததிலிருந்து தெரிந்து கொள்ளும் நிலையாகும். அறியாமையிலிருந்து அறிந்துகொள்ளும் நிலையாகும். சென்னை என்ற ஊரைப்பற்றி ஒருவன் கேள்விபட்டிருக்கிறான்; ஆனால், பார்த்ததில்லை. அது பற்றி சில கருத்துக்களை உருவாக்கியுள்ளான். இவை தவறாக இருக்கலாம். சென்னைக்குச் செல்கிறான். அவன் உண்மையைக் கண்டறிகிறான். பழைய கருத்துக்கள் மறைகின்றன; புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. இதில் அறிவானது ஒரு கட்டத்தில் இருந்து மற்றொரு கட்டத்திற்கு செல்வதைக் காண்கிறோம். முதலில் தெரிந்த விவரங்கள் அடிப்படையில் சில முடிவுகளுக்கு அவன் வருகிறான். இதில் ஒன்று உள்ளது. முதலில் கொஞ்சம் தெரியும்; ஆனால் பிழைகள் உள்ளன. பின்னர் பிழைகள் அகற்றப்பட்டு பல உண்மைகள் தெரியும். இது இன்னும் முன்னேறும்போது அதிகமாகத் தெரியும். இவ்வாறு அறிவு முன்னேறுகிறது. இதில் உண்மை என்பது ஒவ்வொரு கட்டத்திலும் சார்புநிலைத் தன்மை உள்ளது. அது படிப்படியாக உயர்த்தப்பட்ட உண்மையை நோக்கி நகர்கிறது. இயங்கியல் பொருள் முதல் வாதத்தில் முழு உண்மை, மாறாத உண்மை என்பன கிடையாது. அறிவும் உண்மையும் விசாலமடைந்து கொண்டே செல்லும். அதனால்தான் ஔவையார் கூறினார் "கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு"

தொடர்புக்கு: **98947 83657**

01ம் பக்கத் தொடர்ச்சி >>

மோடி மன்னிப்பு கேட்டு அச்சட்டத்தை திரும்பப் பெற்றிருக்கிறார். அதற்காகத்தான் நாம் இங்கே கூடி வெற்றி விழா கொண்டாடுகிறோம்.

போராட்டம் தான் பிரதமரை இந்த முடிவை எடுக்க வைத்தது. இப்படி அந்த கொடூரச் சட்டத்தை திரும்பப் பெற்றாலும் இன்னும் குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் (எம்.எஸ்.பி.) நிறைவேற்றப்படவில்லை என்பதுடன் நமது நெடுநாளைய கோரிக்கையான விவசாய உற்பத்திப் பொருட்கள் அனைத்திற்கும் அரசு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பதும் இன்னும் இருக்கிறது என்பதை மறக்கலாகாது.

எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவில் இருந்தவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் விவசாய உற்பத்தி செலவுகளோடு கூடிய 50% லாபம் தரும் விதத்தில் எம்.எஸ்.பி. அமைய வேண்டும் என்பது இன்னும் நிறைவேறாத கோரிக்கையாக தொடர்கிறது.

நாக்பூரின் ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் இயக்கப்படும் மோடி ஒருங்கிணைந்து போராடிய விவசாயிகளுக்கு முன்பு தோல்வியடைந்தார் என்பது உண்மைதான். ராபி மற்றும் காரிப் பருவங்களில் விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு விலை அதிகம் ஏறுவதில்லை. ஆனால், அதற்காக பயன்படுத்தப்படும் விதை, உரங்கள், பூச்சி மருந்து ஆகியவற்றின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளன. எனவே, விவசாய உற்பத்திப் பொருட்கள் அனைத்திற்கும் கட்டாயம் குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் என்பது தேவையாக உள்ளது.

சிறு உற்பத்தியாளர்கள், மருந்து உற்பத்தியாளர்கள், கார்ப்ரேட்டுகள் தங்கள் உற்பத்தி பொருளுக்கு அதிகபட்ச சில்லரை விலையை (எம்.ஆர்.பி.) நிர்ணயித்து விடுகின்றனர். ஆனால், விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கோ, கோதுமைக்கோ, பருப்புக்கோ, எண்ணெய் வித்துகளுக்கோ மற்ற விவசாய விளை பொருட்களுக்கோ விலையை நிர்ணயிக்க முடிவதில்லை. மாறாக, சந்தை சக்திகள் தான் விலையை தீர்மானிக்கின்றன. இதன் காரணமாகத்தான் கடந்த 200 ஆண்டுகளாக நாம் வறுமையில் வாழ்கிறோம். நாமே விலையை நிர்ணயித்தால் ஒரு தற்கொலை சாவுகூட விவசாயிகள் மத்தியில் எழுந்திருக்காது.

ஒவ்வொரு குடும்பமும் நலமோடு இருந்திருக்கும். எனவே, அரசாங்கத்தின் கொள்கைகள் தான் விவசாயிகளின் வீழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாக இருக்கிறது.

கிராமப்புற இந்தியாவில் இருக்கும் சிறு, குறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், பெட்டிக் கடை நடத்துவோர் இவர்கள்தான் கிராமப்புற இந்தியாவையே உருவாக்குகின்றனர். இவர்களே மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்க்கையை கொண்டவர்கள் ஆவர்.




இவர்களது உற்பத்திக்கு கட்டுபடியான விலை கிடைக்காததால்தான் தங்கள் குடும்பத்தை காப்பாற்ற வேலை தேடி இளைஞர்களும், இளம் பெண்களும் நகரங்களை நோக்கி குடி பெயர்கின்றனர். இந்த பிரச்சினையை தீர்க்க, விவசாயத்தை லாபகரமான தொழிலாக மற்றுவதன் மூலமே சாத்தியப்படுத்த முடியும். அதற்காகத்தான் எம்.எஸ்.சுவாமிநாதன் குழு அந்த பரிந்துரைகளை அளித்திருந்தது.

அரசு பணியில் கடைநிலை ஊழியர்களில் இருந்து பெரும் அதிகாரிகளான ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். வரை அனைவரும் 30 ஆண்டுகாலம் பணியாற்றி முடித்திருந்தால் ஓய்வூதியம் பெறுகின்றனர். ஆனால், கிராமப்புறத்தில் 80வயது வரை உழைக்கிற இவர்களுக்கு எந்த ஓய்வூதியமும், சமூகப் பாதுகாப்பும் கிடையாது.

1967ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து பி.எல்.480 ஒப்பந்தத்தின்படி கோதுமைகள் வராதா? என ஏங்கியிருந்த ஒரு காலம் உண்டு. ஆனால் அவற்றை இன்று மாற்றி நமது விவசாயிகளின் உழைப்பின் பயனால் உணவில் தன்னிறைவை பெற்றிருக்கிறோம். இப்படி உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தியவர்களுக்கு நாட்டிலே என்ன பாதுகாப்பு இருக்கிறது? மாறாக வாங்கிய கடனை கட்ட முடியாமல் தற்கொலை செய்து இறந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல லட்ச கோடிக்கணக்கான ரூபாய்களை வங்கிகளில் கடனாகப் பெற்ற விஜய் மல்லையா, நீரவ் மோடி தொடங்கி பலர் கடனை கட்டாது வெளிநாட்டிற்கு பத்திரமாக சென்று சொகுசு வாழ்க்கை வாழ்கின்றனர்.

ரூ.30, 40 ஆயிரம் கடன் பெற்ற விவசாயிகள் கடனைத் திரும்பக் கட்ட மோடி வலியுறுத்துகிறார். விஜய் மல்லையா, சோக்சிக்கு ஒரு நீதி, விவசாயிகளுக்கு ஒரு நீதியா? இதுவே மோடி பா.ஜ.க.வின் நிகழ்ச்சி நிரலாக இருக்கிறது.

எனவேதான், பா.ஜ.க. அரசை ஒரு குற்றவாளி அரசு என்று நான் குறிப்பிடுகிறேன். தமிழக மக்கள் மிகத் தெளிவாக பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். ஐ கடந்த தேர்தல் களில் விரட்டி விட்டனர். அதற்காக அவர்களை நான் வாழ்த்து கிறேன். ஆனால், வட இந்தியாவில் இன்னமும் மோடி நாடகம் நடத்தி வருகிறார். நாடாளுமன்றம் ஜனநாயகம் அழித்தொழிக்கப்படுகிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்வி கேட்டால் தடுக்கப்படுகிறார்கள். மீறி கேள்வி கேட்டால் வெளியேற்றப்படுகிறார்கள். நடுநிலையோடு இருக்க வேண்டிய சபாநாயகர் ஒருதலைபட்சமாக செயல்படுகிறார். மக்களவையில் இருக்கிற மிருக பலத்தால் எல்லாவிதமான கொடூரச் சட்டங்களையும் நிறைவேற்ற முற்படுகின்றனர். எதிர் கருத்துக்களை அழிப்பதற்கு முனைகின்றனர். இவற்றிற்கு எதிராக மக்களை தயார் செய்வது மிகவும் அவசியமாகும்.

நண்பர்களே இப்போது நான் சில அரசியலையும் பேசப் போகிறேன். அரசியல் இன்றி எதுவும் இல்லை. விடுதிகள், மருத்துவமனைகள், வேலை வாய்ப்புகள் இவை அனைத்தும் அரசியலே தீர்மானிக்கிறது. எனவே, விவசாயிகளின் நம்பிக்கைக்கு உரிய ஒரு அரசை மத்தியில் உருவாக்க வேண் டும். அதன் மூலம் விவசாயிகளுக்கான கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்.

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர், உத்தரகாண்ட் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. உத்தரப் பிரதேசத்தில் பிரதமரும் அம்மாநில முதல்வரும் வகுப்பு வெறி வெறுப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். மக்களை முஸ்லீம் என்றும், இந்துக்கள் என்றும் பிளவுபடுத்தியதன் மூலம் கடந்த 2014, 2017, 2019 தேர்தல்களில் வெற்றி பெற்றனர். இப்போது கிறிஸ்தவர்களின் சர்ச்சுக்கள் கொடூரமாக ஆர்.எஸ்.எஸ்.– பா.ஜ.க. குண்டர்களால் தாக்கப்பட்டு நாசப்படுத்தப்படுகின்றன. அங்கு விஸ்ணுவின் சிலையையும் வைத்துள்ளனர். இதனை எப்படி நாம் ஆதரிக்க முடியும்? கிராமப்புற இந்தியாவை பிரித்தாள அனுமதிக்கலாமா? ஒரு பக்கம் சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளை அதன் உண்மைத் தன்மை தெரியாமல் பேசுகிறார் பிரதமர், ஆனால் சுப்பிரமணிய சுவாமிகக்கள் பலவற்றை வெளியே சொல்லி விடுகின்றனர். 2022க்கான புத்தாண்டு வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதோடு, நாம் இன்னும் அதிக வலிமையான போராட்டங்களை கட்டமைக்க வேண்டும். இனி ஒருபோதும், விவசாய விரோத ஆட்சி டெல்லியிலே இருக்கக் கூடாது. இந்த வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற நாம் தொடர்ந்து போராடுவோம்.


சட்ட ரீதியாக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். இதற்காக சம்யுக்த கிசான் மோர்ச்சா வரும் ஜனவரி 30 தேதி நாடுதழுவிய அளவில் ஒரு போராட்டத்தை நடத்த இருக்கிறது. அதனை நாம் உறுதியாக நின்று வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு பேசினார்.



ஆர்.கிருஷ்ணமூர்த்தி

# பாராளுமன்றமா? பா.ஜ.க.வின் பஜனைக் கூடமா?



**பாராளுமன்ற ஜனநாயகம் என்பது ஆளும் கட்சிக்கு மட்டுமே உரியதல்ல. எதிர்க்கட்சிகளுக்கும் சம உரிமை இருப்பதை உணர்ந்து, ஆளும் கட்சி பாராளுமன்ற நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும். விவாதங்கள் அவசியம் என்பதையும், விவாதங்களின் போது இருசாராரும் தங்கள் கருத்துக்களை முன் வைக்கவும், மக்கள் நலத் திட்டங்களை சமர்ப்பிக்கவும் உரிமையுண்டு என்பதைத் தெளிவுபட செயல்படுத்துவதற்கான இடமே பாராளுமன்றம்.**

ஜனநாயக அமைப்பில் அதன் ஆலயமாய் இருப்பதுவே பாராளுமன்றம். மக்களின் சக்தியை மையமாகக் கொண்டு செயல்படுவதே ஜனநாயகம்; செயல் படும் இடமே பாராளுமன்றம்.

ஜனநாயகம் 2 வகைப்படும். ஒன்று நேரிடைப் பங்கேற்பு. இரண்டாவது பிரதிநிதி முறை பங்கேற்பு.

**நேரிடை பங்கேற்பு:**

மக்களிடையே பொது வாக்கெடுப்பு, வேலைநிறுத்தம், பேரணி, கோரிக்கை ஆர்ப்பாட்டம், கையெழுத்து இயக்கம் போன்றவை நேரிடையாக மக்கள் தங்களின் கோரிக்கைகளை வெளிப்படுத்தும் வகை சார்ந்தது.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் இதிலிருந்து வேறுபடுகிறது. இதில் மக்களின் நேரிடைப் பங்கேற்பு இருக்காது. மக்களின் கருத்துக்களை இடைத்தரகர்கள் போன்று மக்களால் தேர்ந் தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வெளிப்படுத்தி செயல் படுவர். இவர்களது கடமை மக்கள் / தேச நலன்களைப் பாதுகாப்பது. இத்தகைய அரசியல் அமைப்பின் சிறந்த எடுத்துக்காட்டே *பாராளுமன்ற ஜனநாயகம்.

இதில் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தனது வார்த்தைகளுக்கும், செயல்களுக்கும் பொறுப்பாளர்கள்; மக்களுக்கும் கட்டுப்பட்டவர்கள்.

**தோற்றம்:**

லோக்சபா எனப்படும் மக்களவை, ராஜ்ய சபா எனப்படும் மாநிலங்களவை இரண்டுமே இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் 1950 ஜனவரி 26 உருவாக்கப்பட்டவை. இதற்கு முன்னர் இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்றம்.

அரசாங்கத்தின் தலைவராக பிரதம அமைச்சர் இருக்கிறார்.

**பலவீன பலம்:**

மக்களவை, மாநிலங்களவை இந்த இரண்டில் மக்களவை கலைப்புக்கு உட்பட்டது. மீண்டும் தேர்தல் நடத்தி அமைப்பு என்பதற்கானது. ஆனால் மாநிலங்களவை கலைப்பு என்ற பேச்சுக்கே இடமின்றி தொடர்ச்சியானது.

சமீபத்திய கூட்டத்தொடரில் மாநிலங்களவையில் ஜன நாயக பாராளுமன்ற நடைமுறைகள் மீறப்பட்டன என்று சொல் வதைவிட ஆளும் கட்சியின் அத்துமீறல் தலை தூக்கி ஆடியது என்பதுதான் உண்மை.

மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண் ணிக்கை 245. இதில் ஆளும் பி.ஜே.பி. யின் தேசிய ஜனநாயக கூட்டணி: 118. எதிர்க்கட்சிகளின் ஐக்கிய முற்போக்குக் கூட் டணி :57. பி.ஜே.பி.க்கு எதிரான மற்ற கட்சிகள்:66. ஆக:123. காலியிடங்கள்:4.

இந்த சூழ்நிலையில் பி.ஜே.பி. அதன் மசோதாக்களை நிறைவேற்ற மாநிலங்களவையில் பெரும்பான்மை வேண்டும். இல்லாத பெரும்பான்மயை உருவாக்க வேண்டும். அதற்கு தன்முன் உள்ள பெரும்பான்மையின் எண்ணிக்கையை அடா வடியாகக் குறைத்து தங்களது சிறுபான்மையை பெரும் பான்மையாக மாற்ற வேண்டும். இதற்கு பாராளுமன்ற ஜன நாயக முறையில் எந்த வழியும் இல்லை. ஆகவே ஜனநாயக மரபுகளை மிதித்து குறுக்கு வழியில் தான் இது சாத்தியம் என உணர்ந்த பா.ஜ.க. கூச்சநாச்சமின்றி இதனைச் செய்தது.

**சட்டம் என்ன சொல்கிறது !**

குளிர்கால கூட்டத்தொடர் துவக்க நாளில் மாநிலங்களவை உறுப்பினர்கள் 12 பேர் அவை நடவடிக்கைகளிலிருந்து சஸ்பென்ட் செய்யப்படுவதாக அவைத்தலைவர் வெங்கையா நாயுடு அறிவிக்கிறார். இந்த 12 உறுப்பினர்களும் கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மழைக்கால கூட்டத் தொடரின் கடைசி நாளன்று நாடாளுமன்ற மாண்பை சிதைக்கும் வகை யில் செயல்பட்டனர் என்று காரணம் சொன்னார்.

இந்த 12 பேரில் காங்கிரஸ் 6, திரிணமூல் காங்கிரஸ் 2, சிவசேனா 2, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1, மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்டு கட்சி 1 ஆக 12 பேர்.

இந்த 12 உறுப்பினர்களும் பாராளுமன்ற சட்ட விதி 256 ன் கீழ் நீக்கி வைக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டது.

**விதி: 256**

விதி 256(1) ன் படி அவை நடப்பு நாளன்று அவை மாண்புக்கு இடையூறாக இருப்பதாக தலைவர் கருதி தேவையானால் பெயர் கூறி அந்த உறுப்பினர்களை நீக்கிவைக்கலாம்.

விதி (256) 2 ன்படி ஒரு தீர்மானம் முன்மொழிந்து அதனடிப் படையில் அந்த தொடர் முடிகிற வரை குறிப்பிட்ட உறுப்பினர் களை சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கம் செய்யலாம்.

இதுதான் சட்ட விதி. ஆனால் சட்ட விதி 256(1) ன்படி அவைத் தலைவர் பெயர் கூறி நீக்கவில்லை. விதி 256(2) ன்படி நீக்கத்திற்கான எந்தவித முன்மொழிதல் தீர்மானமும் இல்லை.

இதைவிட மேலாக அக்கூட்டத்தொடர் முடிவுற்றதாகவும் அறிவிக்கப்பட்டுவிட்டது.

எனவே அடுத்த குளிர்கால கூட்டத்தொடரில் முன் முடி வுற்ற கூட்டத்தொடர் நிகழ்வைக் காட்டி 12 உறுப்பினர்களை நீக்கம் செய்தது எந்த விதத்திலும் செல்லாத ஒன்று: எனவே இடைநீக்கத்தை அவைத் தலைவர் திரும்பப் பெற வேண்டும் என எதிர்க்கட்சிகள் நியாயமான காரணங்கள் கூறி வலியுறுத்தின.

இந்த சூழ்நிலையில் தான் எதிர்க்கட்சிகள் உறுப்பினர்கள் நீக்கத்தைத் ரத்து செய்ய, அவர்கள் தங்கள் செயலுக்கு மன்னிப்பு தெரிவித்தால் பரிசீலிக்கலாம் என்று அவைத் தலைவர் கூறினார்.

இதனைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப் பினர் பினாய் விஸ்வம் “ நாங்கள் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும் ! நாங்கள் ஒருபோதும் மன்னிப்பு கேட்க மாட்டோம் ! நாங்கள் வீர் சாவர்க்கர் வழி வந்தவர்கள் அல்ல பகத்சிங்கின் வாரிசுகள்” என்று உரக்க பதில் சொல்லி பி.ஜே.பி.க்கு சாட்டையடி கொடுத்தார்.

## அவையை நடத்திய அவலம்:-

**இந்த குளிர் கால கூட்டத்தொடர் அவசர கதியில் ஒருநாள் முன்னதாக முடிக்கப்பட்டது.**

**ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவே பி.ஜே.பி.ன் அஜெண்டா. தங்கள் மசோதாக்களை நிறைவேற்ற மாநிலங்களவையில் பெரும்பான்மை இல்லாத நிலையில் , 12 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து செயற்கை பெரும்பான்மையை சட்ட விரோதமாக உருவாக்கி மசோதாக்களை நிறைவேற்றியது. எதன் மீது விவாதம் கிடையாது.**

**விதி 256 (1) (2) ன்படி இடைநீக்கம் தவறு என்று எதிர்க் கட்சிகள் சுட்டிக்காட்டியதற்கு அவைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களிடம் இருந்து எந்த பதிலும் இல்லை.**

**பா.ஜ.கா.வின் லட்சணம்:**

ஆளும் அரசின் தலைவராக பிரதமர் மோடி, சபை துவங் கும் நாளிலும், முடியும் நாளிலும் மட்டுமே தலை காட்டும் வழக்கத்தைக் கொண்டுள்ளார். ஜனநாயகத்தின் உயர் மட்ட நிலை இடம் பாராளுமன்றமே. அப்படிப்பட்ட பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்கு கூட பதில் சொல்லாத ஒரே பிரதமர் மோடி அவர்கள் தான்.

தேர்தல் சட்ட திருத்த மசோதா, அணைபாதுகாப்பு போன்ற மசோதா போன்றவை நிறைவேறியதில் எதிர்க்கட்சிகளுக்கு விவாதம் செய்திட எந்த வாய்ப்பும் தரப்படவில்லை.

பெண்களின் திருமண வயதை 18லிருந்து 21 ஆக உயர்த்தும் மசோதா நிலைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 100க்கும் மேலான நாடுகளில் பெண்களின் திருமண வயது 18 ஆக இருக்கும் போது இங்கு அதை 21 ஆக மாற்ற வேண்டிய அவசியம் என்ன? இதற்கான சொல்லப்படாத உண்மை காரணம் பொது சிவில் சட்டம் என்பது ஆர்.எஸ்.எஸ்.ன் அஜெண்டா என்பதுதான்.

அவை துவக்க நாளில் வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதற்கான மசோதா மீது விவாதம் மறுக்கப்பட்டது. வேளாண் சட்டங்களை வாபஸ் பெற வேண்டும் என எல்லா எதிர்க்கட்சிகளும் கேட்ட பிறகு அதன் மீது விவாதம் தேவையில்லை என சொல்லப்பட்டது. வேளாண் சட்டங்கள் வாபஸ் பெறுகையில் குறைந்த பட்ச விலை நிர்ணயம் பற்றிய எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு பதிலே இல்லை.

ஆதார் கார்டை தேர்தல் அடையாள அட்டையுடன் இணைக் கவே கூடாது என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 9 பேர் கூறிய பின்னும் இணைப்பு அவசியம் என்பதற்கான சரியான காரணம் எதையும் அரசு கூறவில்லை. ஆதார் அட்டை சமூக நலன்களுக்கு மட்டுமே என உச்சநீதிமன்றம் சொல்லியபிறகும் இணைப்பு ஏன்? என்பதை பி.ஜே.பி.யால் கூற முடியவில்லை.

தேசத்திற்கு, தொழிலாளர்களுக்கு, மக்களுக்கு எதிரான, அதேசமயம் கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான நிலையை தொடர்ந்து எடுத்து வரும் பி.ஜே.பி. பொய்யான போலி விளம்பரங்கள் மூலம் மக்களை ஏமாற்றி வருகிறது.

கொரோனா தடுப்பூசி விரைவாக தாமதிக்காது மக்களுக்கு அதிக அளவில் போடப்பட வேண்டும் என்பதைக் கூட பிரத மரின் பிறந்த நாளில் அதிக அளவில் தடுப்பூசி என்பது விளம் பர வகை சார்ந்தது.

பி.ஜே.பி.ஆட்சியில் அரசியல் அமைப்புச் சட்டம் ஓரங் கட்டப் படுகிறது. ஜனநாயகம் அதிலும் குறிப்பாக பாராளு மன்ற ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்படுகிறது. தேச நலன் சீரழிக்கப்படுகிறது. தொழிலாளர் நலச் சட்டங் கள் பறிக்கப் படுகிறது. பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங் கள் கார்ப்பரேட்டுகளிடம் தாரைவார்க்கப்படுகிறது. மாநில உரிமைகள், மொழி, பண்பாட்டுக் கலாச்சாரம் அழிக்கப் படுகிறது. கார்ப்பரேட் முதலாளிகளின் வளர்ச்சி மட்டுமே ஆட் சியாளர்களின் திட்டமாக இருக்கிறது. இந்துத்வா மதவெறி மக்களிடம் திணிக்கப்படுகிறது.

இனி இப்படிப்பட்ட ஒரு மோசமான பாசிச ஆட்சி தொடரவே கூடாது. இது தானாக நிகழாது. நாம் அனைவரும் ஊர்கூடி களம் இறங்கவேண்டும்.

இந்திய பாராளுமன்றம் ஆர்.எஸ்.எஸ். பண்டாரங்களின் கூடாரமாக மாறிட இந்த நாட்டு மக்களாகிய நாம் ஒருபோதும் அனுமதிக்கவே கூடாது.

பாசிசம் அழித்து பாராளுமன்ற ஜனநாயக மரபுகள் காக்கப்பட வேண்டும் ! பாரத தேசம் காப்பாற்றப்பட வேண்டும் !

இணைந்து போராடுவோம் ! இந்திய தேசம் காப்போம் !

தொடர்புக்கு: **94449 56694**

## திருத்தம்

கடந்த வாரம் ஜனசக்தியில் இரண்டாம் பக்கம் பொதுவேலை நிறுத்தம் தமிழ்நாட்டில் பெருவெற்றி பெறட்டும் ! என்ற தலைப்பில் அமர்ஜித் கவுர் உரையின்

துவக்கத்தில் டிசம்பர் 27ம் தேதி அன்று என்பதை டிசம்பர் 26ம் தேதி என்றும்,

இறுதி பாராவில் ஏப்ரல் 23, 24 தேதிகளில் நடக்கும் வேலை நிறுத்தம் என்பதை பிப்ரவரி 23, 24 என்றும் திருத்தி வாசிக்கவும்.

- ஆசிரியர் குழு



# சங்கே முழங்கு!

**நாட்டைக் காப்போம்! மக்களைக் காப்போம்!**

## 2022 பிப்ரவரி 23, 24

# பொது வேலைநிறுத்தம்!


பிப்ரவரி 23,24 தேதிகளில் பொது வேலை நிறுத்தம் குறித்து திட்டமிட மாநில அளவிலான அனைத்துத் தொழிற்சங்கங்களின் கூட்டம் சென்னையில், எச்எம்எஸ் அலுவலகத்தில், அதன் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கி.நடராசன், மா.பேச்சிமுத்து, வி.வேலுசாமி (தொமுச), வி.குமார் (சிஐடியு), டி.எம்.மூர்த்தி, ம.ராதாகிருஷ்ணன், மு.சங்கையா (ஏஐடியுசி), டி.வி.சேவியர், எம்.சுப்ரமணியன் (ஐஎன்டியூசி), எம்.சுப்பிரமணியபிள்ளை (எச்எம்எஸ்), வி.சிவகுமார், பி.ரகுராமுலு, எம்.தமிழ்வாணன், (ஏஐயுடியுசி), ஆர்.சம்பத் (டபிள்யுபிடியுசி) எம்.திருநாவுக்கரசு, உ.அதியமான் (ஏஐசிசிடியூ), ஏ.எஸ்.குமார், ஜி.முனுசாமி (எல்டியுசி) அம்பத்தூர் க.பேரறிவாளன் (எல்எல்எஃப்), இரா.அந்திரிதாஸ் (எம்எல்எப்), உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கோரிக்கைகள்:

- தொழிலாளர் சட்ட தொகுப்புகள் நான்கையும் கைவிடு!
- மூன்று வேளாண் சட்டங்களையும், மின்சார திருத்தச் சட்டத்தையும் திரும்பப் பெறு!
- தேசிய பணமாக்கும் கொள்கை உள்ளிட்ட எந்தப் பெயராலும், பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்காதே!
- வருமான வரி செலுத்தும் அளவுக்கு வருவாய் இல்லாத குடும்பங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 7,500 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கு!
- மகாத்மா காந்தி ஊரக வேலைஉறுதி திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து! நகரங்களுக்கும் விரிவுபடுத்து!
- கட்டுமான, உடலுழைப்பு தொழிலாளர்கள் அனைவருக்கும் விரிவான சமூக பாதுகாப்பு திட்டங்களை அமலாக்கு! ஏற்கனவே இயங்குகிற, மாநில நல வாரியங்களை சீர்குலைக்காதே!
- அங்கன்வாடி, ஆஷா, சத்துணவு மற்றும் இதர திட்ட ஊழியர் களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தையும், சமூகப் பாதுகாப்பையும் உறுதிசெய்!
- கொரோனா பெருந்தொற்றில் பணிபுரிந்த முன் களப் பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பும், காப்பீடு வசதிகளும் வழங்கு!
- விவசாயம், கல்வி, மருத்துவம் மற்றும் அதிஅவசிய மக்கள் பயன்பாட்டுத் துறைகளில் பொது முதலீட்டை அதிகப்படுத்து! செல்வவளம் மிக்கவர்களிடமிருந்து சொத்துவரி வசூலித்து இதற்கான நிதியைத் திரட்டி, தேசிய பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டி புனர்நிர்மாணம் செய்!
- பெட்ரோலிய பொருட்கள் மீதான கலால் வரியைக் குறைத்து, அனைத்து பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்து!
- காண்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்து! அதுவரை சம வேலைக்கு சம ஊதியம் வழங்கு!
- புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதியத்தை செயல்படுத்து! பிராவிடண்ட் பண்ட் குறைந்தபட்ச ஓய்வூதி யத்தை கூடுதலாக்கு!

- ஜனவரி 17 முதல் ஜனவரி 30 வரை சென்னை, திருச்சி, கோவை, திருநெல்வேலி ஆகிய மையங்களில் மண்டல மாநாடுகள்.
- **ஜனவரி 26 உறுதியேற்பு நாள்:** குடியரசு தினத்தன்று தெருக்கள், திடல்கள், ஊர்ப் பொது இடங்கள், ஆலை மற்றும் அலுவலக வாயில்கள் மற்றும் சாத்தியப்பட்ட அனைத்து இடங்களிலும், மோட்டார் சைக்கிள் பேரணி நடத்தி, தேசியக்கொடி ஏற்றி, தேசத்தை பாதுகாக்கவும் மக்களையும், விவசாயிகளையும், தொழிலாளர்களையும், நாட்டின் பொதுத்துறை சொத்துக்களையும் பாதுகாக்கவும் உறுதிமொழி ஏற்க வேண்டும்.
- **டிசம்பர் 20 முதல் ஜனவரி 30 வரை துறைவாரியான கூட்டு மாநாடுகள்:** ஏற்கனவே பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள வகையில் துறைவாரி மாநாடுகளை ஜனவரி 30க்குள் நடத்தி முடிக்க வேண்டும்.
- **ஜனவரி 20 முதல் பிப்ரவரி 5 வரை ஜூம், முகநூல் வழி பரப்புரை;** அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் தினந்தோறும் வேலை நிறுத்தத்தின் அவசியங்களை விளக்கி உரையாற்றுவர்.
- **பிப்ரவரி 4 ம் தேதி வேலை நிறுத்த நோட்டீஸ்:** அனைத்து சங்கங்களும் கூட்டாக வேலை நிறுத்த நோட்டீசை நிர்வாகங்களுக்கு வழங்க வேண்டும். வாய்ப்புள்ள இடங்களில் ஊர்வலங்கள் நடத்தி நிர்வாகங்களிடம் வழங்கலாம். பதிவுத் தபால் மூலமும் அனுப்புவது அவசியம்.
- **பிப்ரவரி 5 முதல் 15 வரை பரப்புரை:** மோடி அரசின் சீரழிவு கொள்கைகளை விளக்கவும், பொது வேலைநிறுத்தத்துக்கு மக்களிடம் ஆதரவு கோரவும் பிப்ரவரி 5,6,7,8,9 தேதிகளில் ஆலைவாயில்களிலும், தொழிலாளர் குடியிருப்புகளில் கூட்டங்கள் நடத்த வேண்டும். பிப்ரவரி 10 முதல் 15 தேதிகளில் தெருமுனைக் கூட்டங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்வுகள் உள்ளிட்ட வடிவங்களில் பொதுமக்களிடம் பரப்புரை செய்ய வேண்டும். இதற்கான இடங்கள் மற்றும் பொறுப்பாளர்களை மாவட்ட கூட்டு குழுவில் முடிவு செய்ய வேண்டும்.
- **பிப்ரவரி 18ஆம் தேதி**, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில், ஆர்ப்பாட்டங்களை, பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் கவனத்தை ஈர்க்கும் வடிவங்களில் நடத்த வேண்டும்.
- **பிப்ரவரி 21 ஊடகவியலாளர் சந்திப்பு:** பிப்ரவரி 21 அன்று ஊடகவியாளர்களை அனைத்து சங்க தலைவர்கள் சந்தித்து வேலை நிறுத்தம் குறித்து பேட்டியளிப்பது.
- பிப்ரவரி 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் பொது வேலை நிறுத்தம்




ஏ.இ.பாலுச்சாமி

# அழிவை நோக்கி இந்திய ஜனநாயகம்!

**இந்திய ஜனநாயகம் மோடியால் அழிக்கப்பட்டு வருகிறது. முஸ்லிம்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள் தலித்துகள், திட்டமிடப்பட்டே கொல்லப்பட்டு வருகிறார்கள். சமூக ஊடகங்கள், பல்கலைக்கழகங்கள், நீதிமன்றங்கள், எதிர்க்கட்சிகள், நீதிகேட்டு போராடுபவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். அரசியல் சாசனம் வழங்கிய அடிப்படை உரிமைகள், ஆட்சியாளர்களால் காலடியில் போட்டு மிதிக்கப்படுகிறது.**

நாடாளுமன்றத்தில் பேசும் உரிமை, விவாதித்து முடிவெடுக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. இந்திய அரசின் அதிகார மையமான பிரதமர் மோடியோ, நாடாளுமன்ற அவைகளுக்கு வருவதே இல்லை. மக்கள் பிரதிநிதிகளின் கருத்தை கேட்க தேவையில்லை. தான் அடித்த மூப்பாக அனைத்து முடிவுகளும் மோடியால் மேற்கொள்ளப்பட்டு அவைகளில் விவாதம் ஏதும் இன்றியே சட்டமாகப்படுகின்றன. இப்போக்கு நல்லதல்ல என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியே சுட்டிக்காட்டிடும் அவலம் நிலவுகிறது.

இந்தியா பரந்துபட்ட ஜனநாயகத்திற்கு முன்னுதாரணமாக திகழ்ந்த நாடு. அனைவருக்கும் வாக்குரிமை, முறையான தேர்தல், பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகள் அரசை அமைக்கும் உரிமை, சிறுபான்மையினருக்கு உரிய பாதுகாப்பு, விரும்பியபடி மதங்களை தேர்வு செய்வது, அதனைப் பின்பற்றுவது, பிரச்சாரம் செய்வதற்கான உரிமை, மதசார்பற்ற நிலை ஆகிய ஜனநாயகப் பண்புகளின் உறைவிடமாக திகழ்ந்த நாடு இந்திய நாடு.

மோடி ஆட்சிக்கு வந்தபின் அனைத்தும் தலைகீழாக மாறி விட்டன. இந்தியாவை இந்து நாடாக அறிவித்திட ஆரம்ப கட்ட பணிகள் பல நடந்தேறி வருகின்றன. ஆர்.எஸ்.எஸ். காரர்கள் கல்வி நிலையங்கள், அச்சு ஊடகங்கள், சமூக ஊடகங்கள், காவல்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, பாதுகாப்பு துறைகளில் திட்டமிடப்பட்டே புகுத்தப்பட்டு உள்ளார்கள். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் வெறியூட்டப்படுகிறார்கள்.

மோடியின் வருகைக்கு பின்பு 2014 லிலிருந்து முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில், டிசம்பர் 21 இல் ஹரித்வாரில் கூடிய இந்து மாநாட்டில் எழுப்பப்பட்ட வெறித்தனமான பேச்சுக்கள் இந்திய மக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது. “இந்து இளைஞர்களே முஸ்லிம்களை கொன்று குவிக்க தயாராவீர். ஈழப் போராளி பிரபாகரனாகவும், பகத்சிங்காகவும் மாறி ஆயுதம் ஏந்திடுங்கள். 1947 முன்பு நடந்தது மாதிரியாக முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க தயாராவீர். 1857ல் டெல்லி சுல்தானுக்கு எதிராக நடைபெற்ற வன்முறை போராட்டத்தை கையில் எடுங்கள். அரசும், காவல்துறையும், ராணுவமும் நம் வசம் உள்ளன” என்ற வன்முறை பேச்சுக்களுக்கு மோடி மவுனம் காக்கிறார். பேசிய தலைவர்கள் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

உலக நாடுகள் மோடியின் போக்குகளை உன்னிப்பாக கவனித்து வருகின்றன. இந்தியாவை இந்து மதம் சார்ந்த நாடாக மாற்றும் நிலைகளை உணர்ந்து வருகின்றன. பிரான்சு நாட்டின் அரசியல் அறிஞர் கிறிஸ்டோபி ஜாப் ரிலாட் என்பவர், “இந்தியாவில் முஸ்லிம்கள்”, “மோடியின் இந்தியா” என்ற இரு புத்தகங்களையும் எழுதியுள்ளார். அவர் இந்திய ஆங்கில இதழுக்கு சமீபத்தில் அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

“இந்தியாவின் அரசியல் சாசனம் மதச்சார்பின்மையை வலியுறுத்துகிறது. மத சுதந்திரத்தை உரிமையாக்கி உள்ளது. ஆனால், மோடியால் அறிவிக்கப்பட்ட குடியுரிமைச் சட்டம் முஸ்லிம் பிரிவினருக்கு எதிரானதாக உள்ளது. இந்தியாவில் உள்ள பல மதங்களுள் முஸ்லிம்களை வேறுபடுத்தி தனிமைப்படுத்தும் போக் காக அச்சட்டம் உள்ளது. இந்திய குடிமக்கள் இல்லை என்று எந்த மதத்தினரையும் அரசியல் சாசனம் கூறவில்லை. இந்துக்கள் அல்லாதவர்களை இரண்டாம் தர குடிமக்களாக்கிட மோடியின் குடியுரிமைச் சட்டம் வழிவகுக்கிறது.

இலங்கையில் சிறுபான்மை தமிழர்களை இரண்டாம் குடிமக்களாக அந்நாட்டு அரசு பிரகடனப்படுத்தியதற்கு ஒப்பாகும் மோடியின் சட்டம். மோடி ஆட்சியில் இந்தியாவில் இந்து பெரும்பான்மையினரின் ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாக்கப் பட்டுள்ளது. இந்துத்துவவாதிகள் 1947–ல் இந்தியா முஸ்லிம் நாடுகளால் சூழப்பட்டுள்ளது, இவை பகை நாடுகள் ஆகும். இந்திய முஸ்லிம்களும் நமக்கு பகைவர்களே என்று அன்று கூறினார்கள்.

ஷாபானு வழக்கின் தீர்ப்பின் போது இந்துக்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக்கப்பட்டு விட்டதாக பாஜக பிரச்சாரம் செய்தது. 1993 முதல் 2008 வரை இந்தியாவில் நடந்த பயங்கரவாத தாக்குதல்கள் பாஜகவுக்கு தேர்தலில் கணிசமான வெற்றிக்கு உதவின.

ஆர்.எஸ்.எஸ். குழுமங்களான பஜ்ரங்தள், ஏ.பி.வி.பி., பி.எம்.எஸ்., வி.எச்.பி., சேவா பாரதி ஆகியவை வன்முறையில் நம்பிக்கை உடைய அமைப்புகள். பொதுவாக இந்துக்கள் வன்முறையை விரும்பாதவர்கள். அகிம்சை வழியை ஆதரிப்பவர்கள். ஆனால் இன்றோ இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

வந்தே மாதரம் என்று சொல்லாதவர்கள் இந்தியாவில் இருக்க தகுதியற்றவர்கள் என மோடியின் அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்கள் கூறி வருகிறார்கள். இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே புண்ணிய பூமியாகும் என்கிறார்கள் இவர்கள்.

இது பிற மதத்தினரை அன்னியப்படுத்தும் போக்காகும். அரசு பணிகளில் பிராமணர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. முஸ்லிம்கள், தலித்துகள், பிற மதத்தினர் ஓரங்கட்டப்படுகிறார்கள். கல்விமுறை காவி மயமாக்கப்பட்டு வருகிறது. இந்தியர்கள் வலுக்கட்டாயமாக முஸ்லிம்களாக்கப்பட்டு வருவதாக பாடப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற தாஜ் மஹால் உ.பி. மாநில அரசின் சுற்றுலா புத்தகத்தில் இடம் பெறவில்லை.

நீதிமன்றங்களிலும் இந்துத்துவ உணர்வுகள் நீதிபதிகளிடையே விதைக்கப்படுகிறது. எதிரான கருத்துடைய நீதிபதிகளுக்கு பதவி உயர்வுகள் மறுக்கப்படுகிறது. நீதித்துறையின் தனித்தன்மை சிதைக்கப்படுகிறது. அரசின் தலையீடு இத்துறையில் அதிகரித்து வருகிறது. சுயமாக செயல்படும் நீதிபதிகளுக்கு அரசிடமிருந்து அழுத்தம் வருகிறது. அரசு இயற்றிய மக்கள் விரோத சட்டங்களுக்கு எதிராக தொடுக்கப்படும் வழக்குகள் விசாரிக்கப் படாமலேயே கிடப்பில் போடப்படுகின்றன.

இந்திய தேர்தல் முறை அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சம வாய்ப்பை வழங்குவதாக இல்லை. பாஜகவுக்கு சாதகமான நிலை உருவாக்கப்படுகிறது. தேர்தலில் பாஜக தோற்றாலும், கட்சி மாறிகளால் பாஜக ஆட்சி அமைக்கும் நிலை சாதாரணமாக நிகழ்கிறது. இதற்கென கோடிக்கணக்கில் பாஜக செலவிடுகிறது. கார்ப்பரேட்டுகள் பாஜகவுக்கு தேவையான நிதிகளை கோடிகளில் வழங்கி மோடியிடம் சலுகைகளை பெற்று வருகிறார்கள்.

காவல்துறையில் பாஜகவின் ஆதிக்கம் கோலோச்சுகிறது. குடியுரிமை சட்டத்திற்கு எதிராக முஸ்லிம்கள் நடத்திய நீண்ட நெடிய போராட்டத்தை காவல்துறை பாரபட்சமாக நடந்து அடக்கி ஒடுக்கியது. முஸ்லிம்கள் பலர் தாக்கப்பட்டனர். அதிகம் பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பசுப் பாதுகாப்பு படையினர் காவல் துறைக்கு ஆணையிட்டனர்.

மகாத்மா காந்தி, நேரு, டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் தேசிய உணர்வை, உலக உணர்வோடு இணைத்தார்கள். இந்தியாவில் பிறந்த அனைத்து மதத்தினரும் இந்தியர்கள் என்று எண்ணினார்கள். மொழி, இன, மத அடிப்படையில் மக்களை அவர்கள் பாகுபடுத்தி பார்க்கவில்லை. இன்று இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரை இரண்டாம் தர குடிமக்களாக்கும் முயற்சி நடைபெறுகிறது. ஆனால் இது வெற்றி பெறாது. இந்தியாவை இந்து நாடாக மாற்றிட மோடி மேற்கொள்ளும் முயற்சிக்கு காலம் உதவிடாது”. இவ்வாறு பிரான்சு நாட்டு அரசியல் அறிஞர் கிரிஸ்டோபி தனது பேட்டியில் கூறியுள்ளார்.

டாக்டர் அம்பேத்கர் கூறினார். “நாம் முதலில் இந்தியர்கள். அதன்பின் இந்துக்கள். இந்திய விடுதலைக்கான போராட்டம் அனைத்து மக்களுக்குமானது. இந்தியாவும் அனைத்து மக்களுக்கும் உரிமையானது. மோடியை விட்டால் வேறு யார்? என்ற கேள்வி இன்று ஊடகங்களால் எழுப்பப்படுகிறது. இந்தியா உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு. இந்திய ஜனநாயகம் காக்கப்பட முதலில் மோடியை விரட்டுவோம். பின்னர் மாற்றை பற்றி யோசிப்போம்.

தொடர்புக்கு: **73389 20584**



ஆனி ராஜா



# பெண்களின் திருமண வயதை உயர்த்தும் மசோதா திரைமறைவு

**பெண்களின் சட்டபூர்வத் திருமண வயதை 18லிருந்து 21 வயதாக உயர்த்த இந்திய அரசு 2021, டிசம்பர் 21அன்று மக்களவையில் 'குழந்தைத் திருமணத் தடைச் சட்டம், 2006' திருத்த மசோதா தாக்கல் செய்துள்ளது.**

இந்து, கிருஸ்துவ, முஸ்லீம், பார்சி மதங்கள் சார்ந்த அந்தந்த மதத்தினர் சம்பந்தமான திருமணம், மணமுறிவு, தத்து எடுத்தல், ஜீவனாம்சம் தொடர்பான சட்டங்களில் திருத்தம் செய்வது மசோதாவின் நோக்கம். தற்போது நடைமுறையில் உள்ள பாரம்பரியம், பழக்க வழக்கம், திருமண நடைமுறைகள் குறித்து மசோதா குறிப்பிடுகிறது.

பெண்களுக்கான சட்டபூர்வ திருமண வயதை உயர்த்தும் இந்தத் திருத்தத்தின் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் கல்வியைத் தொடரவும், ஆரோக்கியமான குழந்தைப் பேறுக்காக உடல் நலனைக் காக்கவும், பெண்களுக்கு வாய்ப்பு 'வழங்குவதாக' பாஜக அரசு பெருமை பேசுகிறது. சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அரசு கூறுகிறது.

மேலெழுந்தவாரியாகப் பார்க்க, உத்தேசிக்கப்பட்டுள்ள இம் மசோதா பெண்களுக்குச் சார்பானதாக, முற்போக்கானதாகத் தோன்றினாலும், நெருக்கமாக ஆராய்ந்தால் உண்மை அதற்கு நேர்மாறானது என்பது விளங்கும்.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது, குறிப்பாக அவர்களின் ஊட்டச்சத்து, கல்வி, தாய் சேய் மரண விகிதம் முதலானவற்றை மேம்படுத்த வேண்டும் என்பது சொல்லப்பட்ட நோக்கங்கள்; அவர்களது குடும்பத்தினர், சமூகம், கண்காணிப்பு தனி அமைப்புகள் அல்லது அரசு இவற்றின் வற்புறுத்தல் இன்றி பெண்கள் தன்னாட்சியுடன் குறிப்பாக வயது வந்த பெண்கள் தங்கள் திருமணம், குழந்தை பெறுதல் முதலானவற்றை முடிவெடுக்கும் உரிமை உட்பட அனைத்து வகையிலும் பெண்கள் அதிகாரமளிக்கப்பட வேண்டும் என்பது நோக்கம்.

அதற்காகவே திருமண வயதை உயர்த்துவது என்ற அரசு நடவடிக்கை மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் அரசின் பிற செயல்பாடுகளோடு ஒத்துச் செல்லவில்லை என்பது நமது ஆய்வின் முடிவு.

இந்த நோக்கங்களைப் பெண்களின் திருமண வயதை உயர்த்துவதன் மூலம் சாதித்துவிட முடியாது என மாதர் சம்மேளனம் உறுதிபடக் கூறுகிறது. எதார்த்தத்தில் நிலவும் பெண்களின் அந்தஸ்து நிலையை ஒப்பிட, பெண்களுக்கு 'அனைத்து வகையிலும் முழுமையாக' அதிகாரமளிப்பதை, அவர்களின் திருமண வயதை அதிகரிப்பதன் மூலம், சரி செய்துவிட முடியாது.

தேசத்தின் செல்வாதார வாய்ப்புக்கள் மற்றும் நீதியைப் பெறுவதில் பெண்களுக்குச் சமத்துவமற்ற பெரும் பிரச்சனைகள் உள்ளன. பெண்கள் திருமண வயதை உயர்த்துவதை மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்துவது ஒரு சமூகத்தினரையும் சமுதாயத்தின் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களையும் பாதிக்கும் நோக்கமுடையதாகச் செலுத்திவிடும்.

வெளியே சொல்லப்படும் நோக்க இலக்குகளுக்கும், அதை எட்டுவதற்கான அமைப்புநிலை வசதிகளுக்கும் இடையே ஆழமான முரண்பாடுகள் நிலவுகின்றன; அத்தகைய வாய்ப்பு வசதி குறைபாடு தரமான கல்வியைப் பெறுவதில், குறிப்பாகப் பெண் குழந்தைகள் மற்றும் சமூகத்தின் விளிம்புநிலையிலிருந்து வருபவர்களைத் தரமான கல்வியைப் பெற இயலாதவர் ஆக்குகிறது.

**கல்வி நிலை :**

விளிம்புநிலையில் உள்ளவர்களுக்கு உயர் கல்வியைப் பெறுவது ஏறத்தாழ முடியாத ஒன்று. பத்தாம் வகுப்புவரை உள்ள கிராமப்புற அரசுப் பள்ளிகள், கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் முறையான கட்டமைப்பு வசதிகள் அற்ற நிலையில் உள்ளன. இக்குறைபாடு இலட்சக் கணக்கான பெண் குழந்தைகள் 10ம் வகுப்பைக்கூட அடைய முடியாதவராகத் தடுத்துவிடுகிறது.

2013 – 14ம் ஆண்டிற்கான 'கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்டத் தகவல் முறைமை' அறிக்கையின்படி, தொடக்கநிலை பள்ளிக் கல்வியில் 6கோடிக்கும் அதிகமான பெண் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 2019 – 20ம் ஆண்டு நடுநிலைக் கல்வி மட்டத்தில் பள்ளிகளில் அதே எண்ணிக்கையில் பெண்குழந்தைகள் இருக்க வேண்டாமா? ஆனால் அவ்வாண்டிற்கான அறிக்கையில் வெறும் 35 லட்சம் பெண் குழந்தைகள் மட்டுமே நடுநிலை மட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

அதன் பொருள், 5கோடியே 65லட்சம் பெண் குழந்தைகள் தொடக்கக் கல்வியோடு இடை நிறுத்தப்பட்டுவிட்டார்கள் என்பதே. அப்படி ஐந்தாம் வகுப்போடு இடை நிறுத்தப்பட்டவர்கள் எப்படித் தங்கள் 18வது வயதில் பட்டக் கல்வியில் சேர முடியும்? எப்படி அவர்கள் அதிகாரமளிக்கப்படுவர்?

இந்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் என்பது மிக மிக முக்கியமான பிரச்சனை; அப்பிரச்சனைக்கு விரைவாகத் தீர்வு காண, உறுதியான செயல்பாடுகள், விஞ்ஞான மற்றும் அறிவார்ந்த அணுகுமுறை வேண்டும். குறிப்பாக இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் அதிகரிக்கும் தாய் சேய் மரண விகிதங்களை முதலில் தடுத்து நிறுத்த விரைவான நடவடிக்கை தேவை.

**வேறுசில ஆய்வு அறிக்கைகள்**

சமீபத்தில் வெளியான 'உலகப் பட்டினி குறியீடு பட்டியல்' அறிக்கையில் 116 நாடுகளில் இந்தியா 101 இடத்தில் உள்ளது. நாடுகளின் சூழ்நிலை, மக்களின் ஊட்டச் சத்து குறைபாடு, ஐந்து வயதுடைய குழந்தைகளில் i) வயதுக்கு ஏற்ற எடையின்றி மெலிந்து இருப்பது ii) வயதுக்கு ஏற்ற உயரம் இன்றி குள்ளமாக இருப்பது மற்றும் iii) ஊட்டச்சத்தின்றி இறந்து போவது போன்ற காரணிகளின் தரவுகள் அடிப்படையில் அப்பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

ஒன்றிய அரசின் 'தேசிய குடும்பநல ஆய்வு 5' **(NFHS-5)** அறிக்கையின்படி ஆறு வயதிற்குக் கீழ் உள்ள இந்திய தேசத்தின் குழந்தைகளில் 67% இரத்த சோகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அதற்கு முந்தைய 4வது அறிக்கையில் 58.6 சதவீதமாக மட்டுமே இருந்தது. அதே போல ஐந்து வயதிற்குக் கீழுள்ள குழந்தைகளில் குள்ளமாவது 36%, வயதுக்கேற்ற எடை இல்லாது இருப்பது 19% மற்றும் எடை குறைவான குழந்தைகள் 32.1 சதவீதமாக உள்ளது என அறிக்கை கூறுகிறது.

தாய் சேய் மரண விகிதத்திற்கு முக்கிய காரணம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு அதிகமாக இருப்பதேயாகும். குடும்ப நல சர்வே அறிக்கை 5ன்படி, கர்ப்பிணி அல்லாத 15 வயதிலிருந்து 49 வரையான பெண்களில் இரத்த சோகை 53.2 சதவீதத்திலிருந்து 57.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதே நிலைதான் கர்ப்பிணித் தாய்மார்களிடமும் காணப்படுகிறது.

**மோசமான பொருளாதார நிலை**

இன்றைய பொருளாதார நிலை என்பது வேலை வாய்ப்பு இல்லாத மற்றும் பணி இழப்பு ஏற்படுத்தும் வளர்ச்சியாக உள்ளது; இந்த நிலைமை இளம் பெண்களுக்குப் பொருளாதார அதிகாரமளிப்பதை வெகுவாகப் பாதிக்கிறது. தொழிலாளர் உழைப்புச் சக்தியில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு தற்போது 20 சதவீதமாக மிகவும் குறைந்துள்ளது என 'தேசிய சாம்பிள் சர்வே அமைப்பின் **(NSSO)**' சமீபத்திய ஆய்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

அங்கன் வாடிகளிலும், ஆஷா மற்றும் மதிய உணவுப் பணியாளர்களாகவும் ஆண்டுக் கணக்காகப் பணியாற்றும் பெண்கள், தொழிலாளர்களாகவே அங்கீகரிக்கப்பட்டதில்லை. பள்ளிகளில் மதிய உணவு சமைக்கும் சமையல்காரர்களுக்குப் பணி நியமனத்தில் கூறப்பட்ட கடமைகளைத் தவிரவும் பெருக்குதல், கழிவறைகளைத் தூய்மை செய்தல், பள்ளி முதல்வர் வீட்டில் அன்றாட வீட்டுப் பணிகள் கட்டாயப்படுத்தப்பட்டு சுரண்டலுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

அதே போன்ற நிலையில் இருப்பவர்களே ஆஷா பணியாளர்களும் கிராமங்களில் யாருக்கு எந்த நேரத்தில் என்ன உடல்நல பாதிப்பு என்றாலும் அவர்களை முதலில் கவனிக்கும் சுகாதாரப் பணியாளர் ஆஷாதான். நள்ளிரவில் ஒரு கர்ப்பிணித் தாய் அழைத்தாலும் சென்று கவனித்து அவர்களை மருத்துவமனையில் சேர்க்கத் தயாராக இருக்க வேண்டியவரும் அவர்தான். அவர்கள் எல்லாம் தன்னார்வத் தொண்டர்கள் என அழைக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட பணியாளரின் உழைப்பைப் புறக்கணித்து அவர்களைத் தொழிலாளர்கள் என அடையாளப்படுத்தவும் முற்றாக மறுக்கப்படுகிறது.


**ஊதிய இடைவெளி**

உலகப் பொருளாதார ஃபோரம் என்ற அமைப்பின் உலகப் பாலின இடைவெளி 2021 அறிக்கையில் 156 நாடுகள் தரவரிசை பட்டியலில் இந்தியாவுக்கு 140வது இடம்; இந்தியாதான் தெற்காசியாவில் மோசமாகச் செயல்படும் மூன்றாவது நாடு. பொருளாதாரச் செயல்பாடுகளில் ஈடுபடுவது மற்றும் வாய்ப்புகள் குறித்த துணை குறியீடு பட்டியலில் பெண்களின் நிலை சரிந்துள்ளதாகச் சுட்டிக் காட்டுகிறது: "சரிவை ஏற்படுத்தும் காரணிகளில் பெண்களின் உழைப்புச் சக்தி பங்கேற்பு விகித வீழ்ச்சி, நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்பப் பணிகளில் பெண்கள் பங்களிப்பு குறைந்துள்ளது.

மூத்த மேலாண்மைப் பொறுப்புக்கள் மற்றும் மேல்நிலையில் பெண் மேனேஜர்கள் எண்ணிக்கை சரிந்துள்ளது. அனைத்துப் பிரிவுகளிலும் பெண்களின் நிலையில் சரிவே ஏற்பட்டுள்ளது. மேலும் இந்தியாவில் பெண்கள் ஈட்டிய வருமானம், மதிப்பீட்டின்படி ஆண்களின் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே என்பது இந்தியாவை உலகளாவிய இந்தக் குறியீட்டுப் பட்டியலின் கடைசி பத்து இடங்களில் தள்ளி உள்ளது" என அறிக்கை கூறுகிறது.

**முன்னோக்கிச் செல்வதற்கான வழி**

இந்த நாட்டின் பெண்கள் உண்மையாகவே நன்றாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டுமெனில்; அரசியலமைப்புச் சட்டம் உறுதியளித்த சமத்துவம் மற்றும் கௌரவமான குடியுரிமையை வழங்கிடவும்; தரமான இலவச மற்றும் வேலைவாய்ப்புப் பெற தகுதியுடையதாக்கும் கல்வியை உறுதி செய்வதில் நமது கவனம்



**களம், காலம் என்பவை வாழ்வின் எல்லா நிலைகளிலும் ஆதர வடிவங்களாகும். களத்திற்கு அப்பாற்பட்டு, காலத்திற்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்க முடியாது.**
**– ஏங்கல்ஸ்**




ஊசலாட்டமற்றுக் குவிக்கப்பட வேண்டும்; மேலும் ஊட்டச்சத்து மற்றும் தரமான சுகாதாரம் பேணல் வசதி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். இளம் பெண்களுக்கு மனநிறைவான உறுதியளிக்கப்பட்ட கௌரவமான வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பான பணியிடம்; வன்முறையற்ற பாதுகாப்பான சமூகச் சூழ்நிலை; திருமணம் குறித்துப் பெண்களுக்குச் சுயேச்சையான மற்றும் முடிவெடுக்கும் அதிகாரம் அளிக்க வேண்டும். இவற்றையெல்லாம் உறுதி செய்து கிடைக்கச் செய்தால், பின்னர் அதுவே தன்னியல்பாக பெண்களின் திருமண வயதைப் பொருத்தமாக உயர்த்தச் செய்யும்.

எனினும் மேற்குறிப்பிட்ட வாய்ப்புகளை அளிக்கும் அனைத்துப் பிரிவுகளும் தீவிரமாக தனியார்மயப்படுத்தப்படுவது மேலும் பெண்கள் வாய்ப்புக்களை குறிப்பாக மிகவும் விளிம்புநிலை மற்றும் சமூகத்தின் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கு எட்டாமல் செய்துவிடும்.

**தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் முதலியன**

தேசிய உணவு பாதுகாப்புச் சட்ட அமலாக்கம் குறித்துப் பிரதமரும் அரசும் விவாதிக்க வேண்டிய நேரத்தில், அச்சட்டத்தைக் குறிவைத்துத் தாக்கி ஆதார் உடன் இணைக்கப்படுகிறது. இதனால், பெருமளவில் மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி விலக்கப்பட்டு, சட்டத்தின் பயன் மறுக்கப்படுகிறது. 1975 அக்டோபர் 2ம் நாள் கொண்டுவரப்பட்ட ''ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்ட சேவைகள்'' குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும். உலகின் மிகப் பெரிய இந்தச் சமூகநலப் பாதுகாப்புத் திட்டம், ஆறு வயதிற்கு உட்பட குழந்தைகளின் ஊட்டச்சத்து, உடல்நலன் மற்றும் மன நலம் உள்ளிட்ட ஆரோக்கியத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

இதன் மூலம் தாய் சேய் இறப்பு, நோய்வாய்ப்படுதல் மற்றும் குழந்தைகள் கல்வி இடைநிற்றல் முதலியவற்றைக் குறைப்பதும் திட்டத்தின் நோக்கம். மேலும் திட்டத்தின் பயனை எஸ்சி/எஸ்டி பிரிவினர் அடையுமாறு நீட்டித்து இளம் குழந்தைகள் மற்றும் பெண்கள் இடையேயான உறவுப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும். பாலின சமத்துவ உணர்வு உடைய வாழ்க்கை அணுகுமுறையை ஏற்படுத்துவதையும் மேம்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் இந்தச் சமூகநலத் திட்டங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு தொடர்ச்சியாகக் குறைக்கப்படுவதால் தற்போது இத்திட்டம் சீர்குலைக்கப்படுகிறது. எனவே நாடாளுமன்ற அவைகளில் விவாதிக்க வேண்டும். உணவு பாதுகாப்புச் சட்டத்தை மேலும் வலிமையாக்கி, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதாய் பரவலாக அனைவருக்கும் விஸ்தரிக்க வேண்டும். பேறுகால விடுமுறை, மருத்துவ வசதி முதலிய பேறு கால வசதிகளும் பெண்கள் அனைவருக்கும் என பரவலாக்கி உறுதிப்படுத்த வேண்டும்.

**சமூகநலத் திட்டங்களின் பயன்**

முக்கியமான உடல்நலம், கல்வி, வேலைவாய்ப்பு முதலிய பிரிவுகள் மீது கவனம் குவிக்கப்பட வேண்டும்.

**2006 குழந்தை திருமணத் தடை சட்டம் அமலான பிறகும், நமது நாட்டில் குழந்தைத் திருமணங்கள் நடைபெறுவது உள்ளதென அரசே கூறுகிறது. நடைபெறும் திருமணங்களில், இந்தியாவில் பெண்களின் சட்டபூர்வ திருமணத்திற்கான 18 வயது வரும்முன்னர் ஏன் 23 சதவீதமான திருமணங்கள் நடைபெறுகின்றன என்பது குறித்து நாடாளுமன்றம் அவசரமாக விவாதிக்க வேண்டும் என்பது மாதர் சம்மேளனத்தின் கருத்து.**

**வரதட்சிணை சட்டமும் பெரும்பாலும் பயன்படுத்தப் படுவதில்லை. சட்டங்கள் இருந்தும் அவை ஏன் முடமாக்கப்பட்டு நீதி தேவைப்படும் நிலையில் உள்ள பெண்களாலும் பயன்படுத்தப்படுவதில்லை என்பதற்கான காரணங்களையும் நாடாளுமன்றம் மறுபரிசீலனை செய்து விவாதிக்க வேண்டும்.**

**அரசியல் பாலினச் சமத்துவம்**

மிக முக்கியமாக அரசியல் பாலினச் சமத்துவத்தை உறுதி செய்ய 'பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா'வை நிறை வேற்றுவது மிகப் பெரிய நடவடிக்கையாக இருக்கும். நாடாளுமன்றத்தில் அம்மசோதா தாக்கல் செய்யப்பட்டு 25 ஆண்டுகள் கடந்து விட்டன. முடிவெடுக்கும் உச்சபட்ச அதிகார அமைப்புக்களான நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் போன்றவைகளின் நிகழ்முறையில் பெண்களுக்கான வெளி இருக்குமானால், அவர்களால் விவாதங்களில் பயனுள்ள வகையில் பங்களிப்புச் செய்ய இயலும்.

இந்தியாவில் பாராளுமன்ற ஜனநாயகம் நடைமுறைக்கு வந்து 75 ஆண்டுகள் கடந்த பின்னும் பாராளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் 14 சதவீதமாக இருக்கிறது என்பது அவமானமில்லையா?

ஓர் அதிர்ச்சி அளிக்கும் உண்மை, தற்போது 'குழந்தைத் திருமணத் தடை மசோதா 2021' குறித்து பரிசீலிக்க உள்ள நாடாளுமன்ற நிலைக் குழுவில் ஒரே ஒரு பெண் உறுப்பினர் மட்டுமே இடம் பெற்றுள்ளார். அதன் பொருள், பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது என்ன என்பதையும், ஒரு பெண் எந்த வயதில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் ஆண்கள் முடிவு செய்யப் போகிறார்கள் என்பதுதான்.

பெண்களின் விருப்பத் தேர்வுகள், பெண்களின் வாழ்வு மீது அதிகாரம் செலுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது என்பதில் அரசு கவனம் செலுத்த முயல்கிறது; அதற்கு மாறாக, இந்த நாட்டின் பெண்கள், சமூக அரசியல் நீதியை உறுதிப்படுத்துவதற்காக நீண்ட காலமாகக் கோரிவரும் நாடாளுமன்றங்களில் தங்களுக்கான நிலைத்த பிரதிநிதித்துவத்தை வழங்கிடும் வழிமுறைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

உரிமைகளும் நீதிகளும் மறுக்கப்படுவது பெண்களின் மீதான வன்முறையே. அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய சமத்துவம் மற்றும் நீதிக்கான பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்த ஒன்றிய அரசு பின்வருவனவற்றை வழங்க பொறுப்பேற்க வேண்டும்.

அவை, முதுகலை பட்டப்படிப்பு வரை பெண்களுக்கு இலவசக் கல்வி வழங்குதல், திறன் மேம்பாடு, வேலை வாய்ப்புகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வன்முறையற்ற சூழலை உருவாக்கத் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களின் உறுதியான அமலாக்கம். இந்தத் திசைவழியில் அரசு நிர்வாக அமைப்பு மற்றும் சமூகத்தின் கட்டமைப்பு மாற்றங்களோடு உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதே பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான பாதை.

(பொதுச் செயலாளர், இந்திய மாதர் தேசிய சம்மேளனம்)

நன்றி: நியூஏஜ், தமிழில்: **நீலகண்டன்**

## உள்ளாட்சிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும்

# பொங்கல் போனஸ் வழங்குக!

தருமபுரி மாவட்ட ஏஐடியூசி உள்ளாட்சி பணியாளர் சம்மேளனம் கிராம ஊராட்சி பணியாளர்கள் சங்கத்தின் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றிய பேரவை மற்றும் ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் 102ம் ஆண்டு கொடி ஏற்று விழா ஜருகு மானியதஅள்ளி ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு நடைபெற்றது.

கூட்டத்திற்கு தூய்மை பணியாளர் தனபால் தலைமை வகித்தார்.


மானியதஅள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் ஜெ.ஆர். சிவசக்தி சங்க கொடியை ஏற்றி வைத்தார்.

உள்ளாட்சி பணியாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் மனோகரன் கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி பேரவை கூட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

மாவட்ட துணைத் தலைவர் ஆர்.சுதர்சனன், பிஎஸ்என்எல் மாவட்ட அமைப்பு செயலாளர் பி.வணங்காமுடி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

ஊராட்சிகளில் சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப் பூதியம், தினக்கூலி ஊதியம் பெறும் அனைத்து தொழிலாளர்களுக்கும் அரசு அறிவித்துள்ளபடி பொங்கல் போனஸ் வழங்க வேண்டும்.

கொரோனா கால சிறப்பு ஊக்க தொகை வழங்க வேண்டும். 20 ஆண்டுகளாக ரூ.250 மாத ஊதியத்தில் பணியாற்றும் கூடுதல் டேங்க் ஆப்ரேட்டர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**ஒவ்வொரு புரட்சியும் பழைய சமுதாயத்தை தூக்கி எறிகிறது. அதேபோன்று பழைய ஆட்சியையும் தூக்கி எறிகிறது. புரட்சிக்கு சமூகத் தன்மையும் அரசியல் தன்மையும் உண்டு**

**- மார்க்ஸ்**

# தேர்தல்

## சீர்திருத்தமா? சீர்குலைவா?

த.லெனின்



**சமீபத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட தேர்தல் சீர்திருத்தச் சட்டம் 2021ஐ வெளிப்படையாகப் பார்க்கும் போது சிறப்பானதாகத் தோன்றக் கூடும். ஆனால், அது தேர்தலில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்கு பதிலாக சீர்குலைவுகளையே அதிகம் ஏற்படுத்தும்.**

இத்திருத்தச் சட்டத்தை அவசர அவசரமாக முறையான விவாதமும் இன்றி, இரு அவைகளிலும் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாகியுள்ளது மோடி அரசு!

வாக்காளர் அடையாள அட்டையோடு, ஆதார் அடையாள அட்டையையும் இணைத்து போலி வாக்காளர்களை ஒழிக்கப் போகிறேன் என்று புறப்பட்டிருக்கிற இச்சட்டம், உண்மையில் அசல் வாக்காளர்களையே தூக்கி எறிந்து விடும்.

ஆதார் சட்டம் 2016ன்படி, ஆதார் என்பது ஒருவர் வசிக்கும் இடத்தின் ஆதாரமாகவோ அவர்களது வயது, பாலினம், குடிமகன் என்பதற்கான ஆதாரமாக இதைப் பயன்படுத்தக் கூடாது என்று அதன் விதிகளிலேயே தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

அதை மீறி வாக்காளர் அட்டையோடு ஆதாரை இணைப்பது, ஆதார் வழக்கில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, அரசின் நலத்திட்ட பயன்களைப் பெறுவதற்காக மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டிற்கு எதிராக இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வும், மோடியும் பசப்புவது போல இது ஒன்றும் வானத்தை பொத்துக் கொண்டு புரட்சியைச் செய்து விடாது. கடந்த 2014 ஆம் ஆண்டு நமது தேர்தல் ஆணையம் சோதனை முயற்சியாக ஆதாரை வாக்காளர் அடையாள அட்டையோடு இணைக்க தெலுங்கானாவில் உள்ள நிஜாமாபாத் மற்றும் ஹைதராபாத் மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தியது.

போலி வாக்காளர்களை நீக்குவது என்ற பெயரில் ஏறத்தாழ 20 லட்சம் இஸ்லாமிய மற்றும் தலித்துகளின் உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்டு விட்டனர். 2015ல் ஹைதராபாத்தில் தேர்தல் ஆணையம், தேசிய வாக்காளர் சரிபடுத்துதல் மற்றும் உறுதிபடுத்தும் திட்டம் (என்.இ.ஆர்.பி.ஏ.பி.) ஏப்ரல் 1 முட்டாள் தினத்தன்று துவக்கியது. ஆகஸ்ட் 31, 2015ல் அந்த திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் இந்த உண்மை வெளிவந்தது.

இந்த முறைமை மாநில அரசு வைத்திருக்கும் தகவல் சேகரிப்பு மையம் அதாவது சமூக குடும்ப கணக்கெடுப்பு மற்றும் ஸ்மார்ட் பல்ஸ் சர்வே ஆகியவற்றோடு ஒப்பிட்டு பார்த்தும் இந்த விடுபடுதல் நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்றால் யாரைக் குறை சொல்வது?

இவர்கள் கூறுவது போல இது ஒன்றும் புதுமையானது அல்ல. ஏற்கனவே 30 கோடி வாக்காளர்கள் இதில் இணைக்கப்பட்டதாக கடந்த 2019 ஜனவரியில் மாநிலங்களவையில் கேட்கப்பட்ட கேள்வி எண் 2673 என்ற கேள்விக்கு அரசின் பதிலாகவே அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதார் அடையாள அட்டை ஒருவர் பெற வேண்டும் என்றால் அவர் தனது ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் வாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கு உள்ளூர் அளவில் உள்ள அதிகாரி அந்த நபரின் வீட்டிற்கு நேரடியாகச் சென்று ஆய்வு நடத்த வேண்டும் என்பது விதிமுறை.

உண்மையை நிரூபிக்கும் பொறுப்பு முன்பு அரசிடம் இருந்தது. ஆனால் இன்று அது வாக்காளர்களை சார்ந்ததாக மாற்றப்பட்டுள்ளது. எந்த வித பாதுகாப்பும் இன்றி வாக்காளர்கள் நீக்கப்படுதல், லட்சக்கணக்கில் ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் நடைபெற்ற போதுதான் உச்சநீதிமன்றம் அதில் தலையிட்டு அப்போது அதை தடை செய்தது என்பதையும் நாம் மறக்கலாகாது.

கம்மம் மாவட்ட ஆட்சியர் மற்றும் தெலுங்கானா தேர்தல் ஆணையருக்கும் ஆதார் ஐடியை பகிர்ந்துள்ள வாக்காளர் அடையாள அட்டையின்படி வாக்காளரது தொலைபேசி எண் அதில் உள்ளதால் ரகசிய வாக்கெடுப்பு என்பது எப்படி சாத்தியம்? அவர்கள் யாருக்கு வாக்களித்தனர் என்பதையும் அறிந்து விடலாமே?

எனவே வாக்காளர்களை தொடர்பு கொள்வதற்கு, வாக்குக்கு பணம் கொடுப்பதற்கு இவை பெரும் உதவி செய்யும் என்பதும் நேர்மையான தேர்தல் முறைக்கு இது ஊறு விளைவிக்கவே உதவும்.

**வாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கான விதிமுறைகள் இதில் பின்பற்றப்படாது பலர் வாக்குரிமை இழக்கும் அபாயம் தான் ஏற்படும். ஆதாரே பல குளறுபடிகளோடுதான் இருக்கிறது. ஒரே நபர் பல ஆதார் அட்டைகளை பயன்படுத்துகின்றனர். போலி ஆதா ரும் உள்ள நிலையில், அப்படிப்பட்ட இந்த ஆதாரை இதோடு இணைத்து போலி வாக்காளர்களை எப்படி நீக்க முடியும்?**

இச்சட்டத்தின்படி அதன் பிரிவு 23ன் கீழ் உட்பிரிவுகள் 4, 5, 6 மற்றும் 28வது பிரிவு 2ல் இத்திருத்தத்தை கொண்டு வந்துள்ளனர். வாக்காளர் அட்டையை ஆதாருடன் இணைப்பது கட்டாயம் இல்லை என்று அரசு கூறிக்கொண்டாலும் இச்சட்டத்திருத்தத்தை காணும்போது, ஆதாரை இணைப்பது கட்டாயம் என்றுதானே வெளிப்படுகிறது.

ஆக,இத்திட்டம்முழுக்க,முழுக்கநவீனதொழில்நுட்பங்களையும், சமூக வலைதளங்களையும் பயன்படுத்தி வாக்காளர்களை கவர்ந்திழுக்க மட்டுமே பயன்படும் அபாயம் உள்ளது. ஏற்கனவே பா.ஜ.க. இதில் அதீத ஆர்வம் காட்டுவதும் கடந்த தேர்தல்களில் சமூக வலைதளங்களில் பொய் பிரச்சாரங்களையும், வெறுப்பு அரசியலையும் பரப்பியதையும் கவனத்தில் கொண்டால் இந்த உண்மை வெளிப்படும்.

தேர்தல் நடைமுறையை தூய்மைப்படுத்த தொடர்ந்து பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுதான் வருகின்றன. 1990 வி.பி.சிங் ஆட்சியில் தினேஷ் கோஸ் சுவாமி கமிட்டி உருவாக்கப்பட்டு தேர்தல் முறையில் சீர்திருத்தங்களை செய்ய குழு அமைக்கப்பட்டது. அதில்தான் மதச்சார்பின்மை, தேசிய கீதம், இந்திய அரசியல் சட்டம் ஆகியவற்றை அவமதித்த குற்றத்திற்கு சிறை தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும், தேர்தல் நாளான்று அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் சம்பளத்துடன் கட்டாய விடுப்பு அளிக்க வேண்டும் என்றும், தேர்தல் முடிவடையும் 48 மணி நேரம் முன்பு வரை மதுபானங்கள் விற்பனை செய்யக் கூடாது என்றும், வாக்குச் சாவடிகளில் ஆயுதங்களோடு மக்களை அச்சுறுத்தினால், மீறினால் இரண்டு ஆண்டு சிறை தண்டனை என்றும், பெரும் நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி அளிக்கக் கூடாது என்றும், பிரச்சார நேரத்தை குறைப்பது உள்ளிட்ட பரிந்துரைகளை அது அளித்திருந்தது.

1993 வோரா குழுவும், தார்குண்டே குழுவும் குற்றவாளி மயமான அரசியலை மாற்றி அமைப்பதற்கான பல்வேறு பரிந்துரைகளை அளித்திருந்தது.

கடந்த 1998 இந்திரஜித் குப்தா தலைமையிலான குழு தேர்தல் செலவை அரசே ஏற்க வேண்டும் என்பதுடன், ஒரு நபர் ஒரே நேரத்தில் இரண்டு தொகுதிகளுக்கு மேல் போட்டியிடக் கூடாது என்றும் பரிந்துரைத்திருந்தது. அத்துடன் பன்மைத்துவம் நிலவும் நாட்டில் ஒவ்வொரு வாக்கின் மதிப்பையும் உறுதிப்படுத்தும் விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறை வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏன் கண்டு கொள்ளப்படவில்லை?

சீர்திருத்தங்களின் உண்மையான நோக்கம் பணத்திற்கு வாக்குகளை விலை பேசும் முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே ஆகும். பணம் படைத்த அரசியல் கட்சிகள் வாக்குகளை விலை பேசுவதும், பணம் இல்லாத அரசியல் கட்சிகள் தேர்தலை எதிர் கொள்வதும், தேர்தலில், தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட சம நிலையைப் பேணுவதில் மிகப் பெரிய ஊறு விளைந்திருப்பது என்பதை நாம் அறிய முடியும்.

மேலும், இது தேர்தல் முறையையே சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது. இதன் மூலம் தேர்தல் நாணயமாக நடக்கும் என்ற நம்பிக்கையை குலைக்கிறது.

தரவுகளைப் பாதுகாக்கும் நிபுணர் குழுவின் தலைவராக உள்ள உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் பி.என்.பானர்ஜி "வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதாரை இணைப்பது ஆபத்தான சூழலை ஏற்படுத்துவதுடன் தேர்தலை சரியாகவும், நேர்மையாகவும் நடத்தப்படும் என்பதையும் இது சீர்குலைத்துவிடும்" என்ற அபாயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதையும் சீர்தூக்கி பார்க் வேண்டியுள்ளது.

இதற்கு தீர்வு காண வேண்டுவதே உடனடி தேவையாகும். அதற்கு இந்தத் திருத்தச் சட்டத்தில் எந்த வாய்ப்பும் இல்லை என்பது எதைக் காட்டுகிறது?

அப்படியே ஆதாரை சர்வரோக நிவாரணியாக ஒப்புக் கொண்டால்கூட முன்பு ஏன் ஒன்றிய அரசு குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய மக்கள் தொகை பதிவேடு போன்றவைகளை ஏன் கொண்டு வந்தது?

பாசிசம் எப்போதும் வெற்று முழக்கங்களையே எழுப்பும். அற்றுப் போன அருதப் பழசையே புதியதாக காட்டும்!

அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நிதி ரூ.2000க்கு மேல் அளித்தால் அந்த நிறுவத்தின் பெயர் அளிக்கப்பட்ட அரசியல் கட்சியின் விபரம் இவை வெளிப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இன்று தேர்தலில் தூய்மையை விரும்புவதாக கூறும் மோடியும், பா.ஜ.க.வும் தேர்தல் பத்திரங்களின் மூலம் பெரும் நிறுவனங்கள் அளிக்கும் மொத்த நிதியில் 95% சுருட்டுவது ஏன் தடுக்கப்படவில்லை?

இதில் சீர்திருத்தம் செய்வதற்குப் பதிலாக ஆதாரை வாக்காளர் அட்டையோடு இணைப்பதில் ஏன் இப்படி அவசரம் காட்ட வேண்டும்?

அரசின் நலத்திட்டங்களை பெறும் பயனாளிகளின் தரவுகள் அரசிடம் இருப்பதால் அதை ஆட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகள் தங்களது அரசியலுக்குப் பயன்படுத்தி வாக்காளர்களின் தொலைபேசி எண்ணிற்கு பிரச்சார செய்திகளை அனுப்புவது, ஆசைகளுக்கு இணங்க வைப்பது போன்றவற்றில் ஈடுபட முடியும்.

கடந்த பாண்டிச்சேரி சட்டமன்றத் தேர்தலின் போது பா.ஜ.க.வின் பிரச்சார செய்திகள் வாக்காளர்களின் வாட்ஸ் அப் குரூப் மற்றும் கைபேசிகளுக்கு செல்வது எப்படி என்று சென்னை உயர்நீதிமன்றம் 2021ல் கேள்வி கேட்டதை நாம் மறக்கலாகாது. எனவே, பணபலம் படைத்த அரசியல் கட்சி தேர்வு செய்யப்பட்ட தனது இலக்குகளை அடைவதற்கு இது உதவுமே தவிர ஒரு போதும் பொதுவாழ்வில் புனிதத்தையோ, தேர்தலில் புதிய மாற்றங்களையோ கொண்டு வந்து விடாது என்பது மட்டும் உறுதி.

வலுத்தவனுக்கு வாய்ப்பும், வலுவில்லாத அரசியல் கட்சிக்கு ஏய்ப்புமே எப்போதும் நிலவும். இது நமது ஜனநாயகத் தன்மையை முற்றாக அழித்து விடும் என்பதே உண்மை.

தொடர்புக்கு: **94444 81703**

# விவசாய மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொறுத்துவதை கைவிடுக!

## விவசாயிகள் சங்கம் வேண்டுகோள்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

விவசாயிகளுக்கு எதிராக கொல்லைப்புற வழியாக தொடர்ந்து பல்வேறு சட்டங்களை ஒன்றிய அரசு நிறைவேற்றி வருகிறது. மாநில அரசுகளின் அதிகாரத்தின்கீழ் வேளாண்மைதுறை இருந்தாலும், ஒன்றிய அரசு இப்படியான தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக மின்சார சட்டத் திருத்த மசோதா 2020ஐ ஒன்றிய அரசு சட்டமாக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

இதற்கு நாடு முழுவதும் தீவிர எதிர்ப்பு எழுந்தது.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய அரசு இதுவரை மாநில அரசுகள் வழங்கி வரும் மின் மானியத்தை தொடர்ந்து வழங்க விரும்பினால் விவசாயிகளுக்கு நேரடியாக ரொக்கப் பணமாகக் கொடுக்கலாம் என்ற அறிவுரை கூறியது.

இது நடைமுறைக்கு சாத்தியமில்லாத மெல்ல மெல்ல இலவச மின்சார திட்டத்தை ரத்து செய்யும் வஞ்சக நோக்கம் கொண்டது.

இந்தநிலையில்தற்போது தமிழ்நாடு அரசு விவசாய மின்மோட்டார் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்துகிற நடவடிக்கைகளை தொடங்கி இருப்பது என்பது விவசாயிகளிடம் ஆழ்ந்த சந்தேகத்தை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த அதிமுக ஆட்சியில் இதே நடவடிக்கையை எடுத்தபோது விவசாயிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போதைய தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி மீட்டர் பொறுத்துவது ஒரு விவசாயி எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார் என்பதை கணக்கீடுவதற்கு மட்டுமே என்று கூறியதை விவசாயிகள் ஏற்கவில்லை.

அப்பொழுது எதிர்க்கட்சியாக இருந்த திமுகவும் விவசாயிகளுக்கு ஆதரவாக நின்று மீட்டர் பொருத்தும் திட்டத்தை எதிர்த்து போராடியது. இப்போது திமுகழகம் ஆட்சியில் அமர்ந்தபின் மின் அளவீடு செய்ய மீட்டர் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவது விவசாயிகள் நலனுக்கு எதிரானது.

இதற்காக பல கோடி ரூபாய் அரசு வீணாக ஏன் செலவு செய் திட வேண்டும். தேவைக்கான மின்சாரத்தை கணக்கிட வேறுபல வழிகள் உள்ளன.

இது இலவச மின்சாரம் அல்ல.. வேளாண் உற்பத்திக்கான ஊக்க மின்சாரமாகும்.

இப்படியான சலுகை வந்ததற்கு பின் தான் நெல் உள்ளிட்ட வேளாண் சாகுபடி பரப்பளவும் அதிகரித்தது. தமிழ்நாட்டின் உணவுத்தேவைக்கு மேலே மிகுதியாக உற்பத்தியாகி வருகிறது.

மின் பயன்பாட்டை குறைத்திட சூரிய ஒளி மின் பயன்பாடு மூலமும் திட்டங்கள் அமலாக்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் விவசாயிகள் நலத் துறை என பெயர் மாற்றம் செய்து நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய மாநில அரசு மின் கணக்கு எடுக்க மீட்டர் பொறுத்துவதை கைவிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் வலியுறுத்திக்கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி கூறியுள்ளார்.



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு தின கொடியேற்று விழா

டிசம்பர் 26 1925

**சேலம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97வது அமைப்பு தினம், சுதந்திர போராட்ட வீரர் இரா.நல்லகண்ணு அவர்களின் 97வது பிறந்த தினம், பொதுவுடைமை போராளி கே.டி.கே. தங்கமணி நினைவு தினம் ஆகிய நிகழ்ச்சிக்கு சேலம் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமை வகித்தார்.

போக்குவரத்து கிளை செயலாளர் ஏ.மாதையன் கே.டி.கே படத்திற்கு மாலை அணிவித்தார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் கட்சியின் கொடியை ஏற்றி வைத்தார். மாநில குழு உறுப்பினர் பி.பரமசிவன் உரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எம்.ராமன் நன்றி கூறினார். இதில் மாநில குழு உறுப்பினர் சங்கீதா பாலதண்டாயுதம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.கந்தன் ஜெ.கனியன்பூங்குன்றன், ஏஐடியூசி மாவட்ட பொருளாளர் எஸ்.சம்பத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டி ஒன்றியக்குழு சார்பில் நடைபெற்ற அமைப்பு தினத்தில், ஜீவா நினைவு கொடி கம்பத்தில் மாவட்டசெயற்குழு உறுப்பினர் வே.பரமேஸ்வரன் கொடி ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி, நகர செயலாளர் க.முனீஸ்வரன், ஜனசக்தி பிரபாகரன், செங்கொடி செல்வம், சென்றாயபெருமாள், அண்ணாமலை மற்றும் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்...

**மணப்பாறை:** திருச்சி புறநகர் மாவட்டத்தில் கட்சி 97ஆம் ஆண்டு அமைப்பு தினம் கே.டி.கே. தங்கமணி 20ஆம் ஆண்டு நினைவுதினம், ஜனசக்தி காலண்டர், சிறப்பிதழ் விற் பனை இயக்கம் நடைபெற்றது.

மணப்பாறை கட்சி அலுவல கத்தில் ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார் நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார் புறநகர் மாவட்ட செயலாளர் இந்திரஜித் அமைப்புதின கொடி ஏற்றிவைத்து, கே.டி.கே. தங்கமணி திருவுருவபடத்திற்கு மாலர்தூவி புகழ் அஞ் சலி செலுத்தி, ஜனசக்தி காலண்டர், சிறப்பிதழ் விற்பனை இயக்கத்தை தொடங்கி வைத்தார் மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌகத்அலி ராகமத்துனிஷா, ராஜேந்திரன், நல்லுச்சாமி பிரேமவதி உட்பட நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

**வையம்பட்டி ஒன்றியம்**

ஒன்றிய செயலாளர் சண்முகானந்தம் தலைமையிலும், மருங்காபுரி ஒன்றியம் கஞ்சநாயக்கன் பட்டி துவரங்குறிச்சி மற்றும் அனைத்துகிளைகளிலும் ஒன்றிய செயலாளர் வெள்ளகண்ணு தலைமையிலும், மணப்பாறை ஒன்றியம் புத்தாநத்தம், ஆனாம்பட்டி கீழபொய்கைபட்டி எஃப் கீழையூர் வட பகுதி உட்பட அனைத்து கிளைகளிலும் கொடி ஏற்றி ஜனசக்தி விற்பனை இயக்கம் நடைபெற்றது.

திருவெறும்பூர் ஒன்றியத்தில் கிருஷ்ணசமுத்திரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஊராட்சி தலைவர் ரம்யா, ஒன்றிய கவுன்சிலர் இளையராணி, ராஜ்குமார், ஜெயகுமாரி தாஸ் தலைமையிலும், லால்குடி தாலுகாவில் உள்ள பேரூராட்சி ஊராட்சிகளில் உள்ள கிளைகளில் ஒன்றிய செயலாளர் பழனிராஜ் தலைமையிலும், மணச்சநல்லூர் ஒன்றியம் நம்பர் ஒன் டோல்கேட் எதுமலை வாழவந்தான்கோட்டை ஒன்றிய செயலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையிலும், துறையூர் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் சேகர் தலைமையிலும்,

தா.பேட்டை ஒன்றியம் கடை விதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் செல்வராஜ், ஒன் றிய செயலாளர் கந்தசாமி தலைமையிலும், தொட்டியம் ஒன்றி யத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கணேசன், ஒன்றிய செயலாளர் சதிஷ்குமார் தலைமையிலும், முசிறி ஒன்றியம் கைகாட்டியில் புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிசாமி, ஒன்றிய செயலாளர் சண்முகம் சரவணன் தலைமையிலும்,

உப்பிலியபுரம் ஒன்றியம் உப்பிலியபுரம் கடைவீதியில் ஒன்றியச் செயலாளர் மருதை சுப்பிரமணி தலைமையிலும் நடைபெற்றது. பி.ஹச்.எல் தொழிலாளர்களிடம புறநகர் மாவட்ட பொருளாளர் பக்கிரிசாமி ஜனசக்தி சிறப்பிதழ், காலண்டர் விற்பனை இயக்கத்தை நடத்தினர்.

# மின் கட்டணத்துக்கு ஜிஎஸ்டி வரி வசூலை ரத்து செய்க!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

பாஜக ஒன்றிய அரசு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு போன்ற பெட்ரோலியப் பொருட்கள் மீது கலால் வரியை உயர்த்தி மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

மாநில உரிமைகளை பறித்து, நிதி ஆதாரங்களை மத்தியில் குவித்துக் கொள்ளும் ஒன்றிய அரசின் தவறான நடவடிக்கையால் தமிழ்நாடு பெரும் பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

இந்த நிலையில், எந்தவித முன்அறிவிப்பும் இல்லாமல், நுகர்வோர்களின் கருத்துக்களை கேட்டறியாமல், நடப்பு மாத மின் கட்டணத்துக்கு ஜிஎஸ்டி வரி விதித்து கட்டாயமாக வசூலிக்கப்படுகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி விவசாயிகளுக்கு முற்றிலும் இலவச மின்சாரம் வழங்கி சாதனை படைத்தது. இதனைத் தொடர்ந்து வந்த ஆட்சியும் மின் நுகர்வோர் நலன்கருதி மானியங்கள் வழங்கி, கட்டணச் சலுகை அளித்து உதவி வருகின்றன. தற்போதுள்ள நடைமுறையில் வீடுகளின் மின்நுகர்வில் முதல் 100 யூனிட் மின்சாரம் கட்டணம் இல்லாமல் வழங்கப்படுகிறது. இது போல் கைத்தறி மற்றும் விசைத்தறிக்கும் சலுகை அளிக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் ஜிஎஸ்டி வரி விதிப்பால் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மின் நுகர்வில் 100 யூனிட்டுக்கும் குறைவாக பயன்படுத்திய வீடுகளுக்கும் ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டிருப்பது அநியாயமாகும். சான்றாக திருச்சி மின் திட்டத்தில் மின் இணைப்பு எண் 464ன் மின் கட்டணம் ரூ.95, இதற்கு விதிக்கப்பட்டுள்ள ஜிஎஸ்டி ரூ.90 என்பதை தமிழ்நாடு அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

பெட்ரோலியப் பொருட்களும், அத்தியாவசிய காய்கறி உள்ளிட்ட உணவு தானியங்களின் விலைகளும் வானத்தை நோக்கி உயர்ந்து வரும் போது, வருமான வாய்ப்புகள் அடைபட்டு கிடக்கும் மக்களிடம் மின் கட்டணத்துக்கு ஜிஎஸ்டி வசூலிக்க வேண்டும் என்ற ஒன்றிய அரசின் கொள்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கையை எதிர்த்துப் போராட வேண்டிய மாநில அரசு அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது என வலியுறுத்துகிறோம். எதிர்ப்பு தெரிவிக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் நாட்டில் மின்கட்டணத்துக்கு ஜிஎஸ்டி வரி வசூலிப்பதை உடனடியாக ரத்து செய்ய வேண்டும், வசூலிக்கப்பட்ட வரித் தொகையை மின் கட்டணத்தில் வரவு வைத்து ஈடு செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# என்.சி.பி.எச். கட்சி கிளை மாநாடு

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் மற்றும் பாவை பிரிண்டர்ஸ், பப்ளிகேசன்ஸ் ஒருங்கிணைந்த இலக்கியக் கிளை மாநாடு நடைபெற்றது. மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி கிளை மாநாட்டிற்கு தலைமையேற்று வேலை அறிக்கையை வாசித்தார். மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் கலந்துகொண்டு இன்றைய அரசியல் நிலைமை, கட்சியின் நிலைப்பாடு பற்றியும் நியூ செஞ் சுரி புத்தக நிறுவன வரலாறு பற்றியும் விரிவாகப் பேசினார். சண்முகம் சரவணன் செயலாளராகவும், ஆ.சிவக்குமார் துணை செயலாளராகவும், எஸ்.மணவாளன் பொருளாளராகவும் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆ.சிவக்குமார் நன்றி கூறினார்.

### மாற்றுத் திறனாளிகள்

# கடல் அலையை அருகில் பார்த்து ரசிக்கும் திட்டம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

தலைமுறை தலைமுறையாக மாற்றுத் திறனாளிகளாக பிறந்தவர்கள், சிலவற்றின் மீது ஆர்வம் காட்டினாலும் வாழ்நாள் முழுவதும் அதனை அடைய முடியாமல் போவதை மனித குலம் கண்டு வருகிறது.

“அரிதரிது மானிடராய் ஆதல் அரிது
மானிடர் ஆயினும் கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறந்தல் அரிது’’ என்கிறது ஔவையின் அரிது குறித்த பாடல்.

பிறப்பால் குறைபாடு கொண்டவர்களையும், வாழும் காலத்தில் அங்கம் இழந்தவர்களையும் சமூகம் இழிவுபடுத்தி வந்தது.


வேதனைகளை மனதில் சுமந்து வந்த இவர்களும் திறமை யுள்ளவர்கள்தான், எவருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல என்ற முறையில் “ஊனமுற்றோர்” என்ற சொல்வதை விட்டொழித்து “மாற்றுத்திறானாளிகள்” என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் இந்த பெயர் வழங்கினார்.

தொலைதூரத்தில் நின்று இது தான் கடல் என பார்த்து வந்த “மாற்றுத்திறானாளிகள்” கடல் தண்ணீரில் கால் நனைக் கும் அளவில் ஏற்பாடுகள் செய்திருப்பது காலம் முழுவ தும் சுடர் விட்டு நிற்கும் சிறப்புத் திட்டமாகும். இதனை செயல் படுத்த முனைப்புக் காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி, திட்டத்தை வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பேராயர் தேஷ்மோண்ட் துது மறைவு

## தேசியக் குழு இரங்கல் !



பேராயர் தேஷ்மோண்ட் துது மறைவையொட்டி கட்சியின் தேசியக் குழு சார்பாக பொதுச் செயலாளர் டி ராஜா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

இனவெறிக்கும், நிறவெறிக்கும் எதிரான முதுபெரும் போராளியும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான பேராயர் தேஷ்மோண்ட் துது டிசம்பர் 26 அன்று இயற்கை எய்தினார். அவரது மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

1980களில் நிறவெறிக்கு எதிராகக் கடுமையாகப் போராடிய துது, நெல்சன் மண்டேலா உள்ளிட்ட தலைவர்களோடு சிறைத் தண்டனையும் ஏற்றவர். நிறவெறிக்கு எதிரான அவரது வன்முறையற்ற போராட்டத்தை அங்கீகரிக்கும் வகையில் 1984 ஆம் ஆண்டு அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

“எவ்வித அச்சமும் இன்றி, மற்றவர்கள் ஏற்கத் தயங்கும் நிலைப்பாடுகளை துணிந்து மேற்கொள்வது தான் அவரது தலைசிறந்த பண்பு.” என்று துதுவைப் பற்றி நெல்சன் மண்டேலா கருத்துத் தெரிவித்துள்ளார்.

நிறவெறிக்கு எதிரான அவரது போராட்டம் தொடர்ந்து தென்னாப்பிரிக்காவை ஒரு வலுவான ஜனநாயக, முற்போக்கு நாடாக கட்டமைப்பதற்கான முயற்சிகளுக்கு வழிகாட்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. அவரை இழந்து நிற்கும் அவரது குடும்பத்தாருக்கும், தென்னாப்பிரிக்க மக்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# இந்த வார தம்பிக்குறள்


## 53. பகைக் கஞ்சா வாழ்வு

**பகைக்கஞ்சா வாழ்வுமிகை வாழ்வு பகைக்கஞ்சம்**
**வாஅழ்வு துஞ்சூஉம் வாழ்வு**

எதிர்வரும் பகையினைக்கண்டு அச்சம் கொள்ளாத வாழ்வே உயர்ந்த வாழ்வாகும். அஞ்சியஞ்சிச் சாகும் வாழ்க்கை, நல்ல வாழ்க்கை ஆகாது. (அச்சம் தவிர் – பாரதியார்)

**பகைநடுவே வாழ்வதே வாழ்வாகும் பகையஞ்சி**
**வாஅழ்வ தாகாதாம் வாழ்வு.**

நல்லவாழ்க்கை என்பது பகைவர் நடுவிலேயும் அஞ் சாது வாழும் வாழ்க்கையாகும் என்றும் பகைக் கஞ்சி வாழும் வாழ்க்கை மன அமைதி இல்லாத வாழ்க்கை யாகிவிடும். (செல்வம் இருப்பினும் கூட)



# வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 97வது ஆண்டு துவக்கம், இரா.நல்லகண்ணு பிறந்தநாள், கே.டி.கே.நினைவு நாள் ஆகியவை சிறப்பாக நடைபெற்றதை ஜனசக்தி மூலம் அறிய முடிகிறது. தா.பா.படத்திறப்பு விழாவில் தோழமை கட்சித் தலைவர்கள் ஆற்றிய உரைகளை வெளியிட்டது சிறப்பு.

– சங்கிலிகாளை, இராஜபாளையம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

கட்சியின் அமைப்பு தின விழா, தா.பா. படத்திறப்பு இரண்டு நிகழ்வுகளும் அடுத்தடுத்து நடைபெற்ற போதும், இரண்டிலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். துவக்க நாள் நிகழ்வில் பங்கேற்ற ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கௌர் ஏஐடியூசி கூட்டத்தில் ஆற்றிய உரை சிறப்புமிக்கது.

– சென்றாயப் பெருமாள், ஆண்டிப்பட்டி

**ஆசிரியர் ஜனசக்தி,**

வாக்குரிமை நமது பிறப்புரிமை என்ற ந.பெரியாசமியின் கட்டுரையில் நடப்பு அரசியலை இடித்துச் சொல்லி யிருக்கிறார்.

ஒரு கிறிஸ்தவ கம்யூனிஸ்ட் மறைந்தார் என்ற ஜேக்கப் வாத்தியார் பற்றிய கட்டுரை அருமை. கடந்த சிறப்பிதழ் 36 பக்கங்கள். இந்த வார ஜனசக்தி 20 பக்கங்கள். விலை ஏற்றாமல் எப்படி கொடுக்க முடிந்தது?


– சிவனேசன், சீர்காழி

**ஆசிரியர் ஜனசக்தி,**

வர்க்கமற்ற, சாதியற்ற சமுதாயம் படைத்திட வீறு நடைபோடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற டி.ராஜாவின் கட்டுரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின்97 ஆண்டுவரலாற்றைசுருக்கமாக சித்தரிக்கிறது. பெண்களின் திருமண வயதை சட்ட ரீதியாக உயர்த்தக் கூடாது என்ற டாக்டர் ரவீந்திரநாத் கட்டுரை பா.ஜ.க.வின் முகத்திரையை கிழிக்கிறது.

– சிங்காரம், குடியாத்தம்

## தென்காசி மாவட்டத்தில்
# 25 ஜனசக்தி ஆண்டு சந்தா



தென்காசி மாவட்ட குழு கூட்டத்தில், மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. அவர்களிடம் ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் இரா.சமுத்திரக்கனி 25 ஜனசக்தி ஆண்டு சந்தா வழங்கினார். மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், எஸ்.அழகுமுத்துபாண்டியன், மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை ஆகியோர் உடனிருந்தனர்.

## பழனிக்குமார் மனைவி நினைவு நாளில்
# ஜனசக்தி வளர்ச்சி நிதி

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளரும் , ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளருமான எஸ். பழனிக்குமார் மனைவி செண்பகவள்ளி 17வது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது . இதில் சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வட்ட செயலாளர் சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அப்பொழுது அவரது மகன் ப.ரத்தினகுமார் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ1000 வழங்கினார்

# போக்குவரத்து ஓய்வூதியத் திட்டத்தை அரசு பொறுப்பேற்று வழங்க வேண்டும்!

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஏஐடியூசி ஓய்வு பெற்றோர் சங்கம் சார்பில் போக்குவரத்து ஓய்வூதியத்தை அரசே பொறுப்பேற்க வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை வருகின்ற ஜனவரியில் நடைபெறும் சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவிக்க வலியுறுத்தி தஞ்சைக்கு வருகை தரும் முதல்வருக்கு அளிக்கின்ற கோரிக்கை மனு கையெழுத்து இயக்கம் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை தலைமையில் நடைபெற்றது.

சம்மேளன தலைவர் துரை.மதிவாணன் முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார். மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா,சங்க நிர்வாகிகள் கே.சுந்தரபாண்டியன், எம்.மாணிக்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பாவூர்சத்திரத்தில் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா!

தென்காசி மாவட்டம் வி.கே.புதூர் தாலுகா பாவூர்சத்திரத்தில் தியாகசீலர் ப.மாணிக்கம் நூற்றாண்டு விழா தாலுகா செயலாளர் என்.அய்யப்பன் தலைமையில் நடைபெற்றது. தென்காசி தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா, கீழப்பாவூர் செயலாளர் எம்.சுடலை யாண்டி, ஊராட்சி மன்ற உறுப்பினர் மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.காசிவிஸ்வநாதன், மாவட்ட செயலாளர் த.இசக்கிதுரை, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா, மாநில குழு உறுப்பினர்கள் பி.எஸ்.எஸ்.போஸ், எஸ்.வேலாயுதம், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஏ.பரமசிவன், எஸ்.மாரியப்பன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடையாம்புளி செயலாளர் அணைக்கரை முத்து நன்றியுரை வழங்கினார்.



# பெரம்பலூரில் மாணவர் பெருமன்ற மாவட்ட பயிற்சி முகாம்

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் பெரம்பலூர் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம் கிருஷ்ணாபுரத்தில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. அபிஷேக்குமார் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ்குமார் கொடியை ஏற்றி வைத்து, முகாமை துவக்கி வைத்து உரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் வீ.ஞானசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.ராஜேந்திரன், இளைஞர் பெருமன்ற நிர்வாகி சரவணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

‘‘அரசியலமைப்புச் சட்டமும், மாணவர் உரிமைகளும்‘‘ என்னும் தலைப்பில் மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் க.இப்ராஹிம் அவர்களும், ‘‘மாணவர் பெருமன்ற வரலாறும், இன்றைய கல்விச் சூழலும்‘‘ என்னும் தலைப்பில் மாநில தலைவர் மௌ.குணசேகர் அவர்களும் வகுப்பு எடுத்தனர். இம்முகாமில் மாணவர் பெருமன்ற நிர்வாகிகள் ஹரிஹரன், க.கோபி, சஞ்சய் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# நீட் தேர்வு விலக்கு, ஆளுநருக்கு மேலும் எவ்வளவு காலம் தேவைப்படும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேள்வி

நீட் நுழைவுத் தேர்வு காரணமாக தமிழகத்து கிராமப்புற மாணவர்கள், மிகக் கடுமையான முறையில் பாதிக் கப்பட்டுள்ளார்கள்.

பன்னிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் எடுத்த போதும், நீட் நுழைவுத் தேர்வில் போதிய மதிப் பெண்கள் பெற முடியவில்லை.

தாங்கள் மருத்துவர் ஆக வேண் டும் என்கிற கனவு பகற் கனவாகவே முடிகின்றது. இதன் காரணமாக அரியலூர் அனிதா உள்ளிட்ட 25க் கும் மேற்பட்ட மாணவர்கள் தற் கொலைக்கு தள்ளப்பட்டனர். இந் நிலைமைகள் மாற்றப்பட வேண் டும் என்றும், நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்க்கு விளக்க ளித்திட வேண்டுமென ஒட்டு மொத்த தமிழகமும் தொடர்ந்து கோரி வரு கின்றது. எல்லா வளர்ச்சிக்கும் மேலாக தமிழ்நாடு சட்டப் பேரவையில் நீட் தேர்வு விலக்கு மசோதா, ஒருமனதாக கடந்த செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதுகுறித்து தமிழ்நாடு முதல மைச்சர் இருமுறை ஆளுநரை நேரில் சந்தித்து முறையிட்டுள்ளார். ஆனால் ஆளுநர் அசைந்து கொடுப்பதாக தெரியவில்லை. இது தொடர்பாக கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு அவர்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஆளுநர் மாளிகைக்கு கடிதம் எழுதினார்.

அதற்கு, மசோதா ஆளுநரின் பரிசீலனையில் இருப்பதாக பதில் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு மாத காலமாக பரிசீலனையில் உள்ள தாக தெரிவிப்பது வியப்பளிப்பது மட் டுமல்ல; வேதனையளிக்கின்றது. பேரவையின் மசோதா பரிசீல னையில் நான்கு மாதகாலமாக உள்ளது எனில், இன்னும் எத்தனை மாத காலங்கள் தேவைப்படும் என்பதனை ஆளுநர் மாளிகை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்திட வேண்டும்.

மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் ஒரு மாவட்ட ஆட்சியர், நூறு நாட்களில் கோப்பு களுக்கு தீர்வு காண வேண் டும் எனவும், இல்லையெனில் நடவ டிக்கை எடுக்கப்படும் என்று தெரி வித்து இருப்பதுடன், அவர்களது மாதாந்திர ஊதியத்தை நிறுத்தி வைக் கப்படும் என பணியாளர்களுக்கு உத் தரவு இட்டுள்ளார். நாட்டிற்கே முன் னுதாரணமாக விளங்குகிறது ஆட்சி யரின் உத்தரவு.

தமிழக ஆளுநர் முன்னுதாரணமாக விளங்க வேண்டுமென விரும்பு கின்றோம்.

காலதாமதம் செய்யாமல் குடிய ரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்திட வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின், தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக
# நெல்கொள்முதல் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு!

## முதலமைச்சருக்கு ஏஐடியூசி நன்றி

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏஐடியூசி தொழிற்சங்க மாநில பொதுச் செயலாளர் சி. சந்திரகுமார் பத்திரிகைகளுக்கு விடுக்கும் அறிக்கை:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சுமை தூக்கும் தொழிலாளர் களுக்கான கூலி மூட்டை ஒன்றுக்கு ரூ3.25லிருந்து ரூ.10 ஆக உயர்த்தி வழங்குவதாக தஞ்சையில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழக அரசுக்கும் முதலமைச்சருக்கு நெஞ் சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதற்கு முன்முயற்சி மேற்கொண்டுநிறை வேற்றிய மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களுக்கும் இதற்கு பெரிதும் துணை நின்ற மன் னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர். பி.ராஜா, தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சண்முகம், அவர்களுக்கும், திருத்துறைபூண்டி சட்டமன்ற உறுப்பினர் க. மாரிமுத்து அவர்களுக்கும் சங்கத்தின் சார்பில் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரி வித்துக் கொள்கிறோம்.




# கைத்தறி, விசைத்தறி தொழிலை பாதுகாக்ககோரி நெசவாளர்கள் ஆர்ப்பாட்டம்

ஈரோடு மாவட்டம் சிவகிரியில் நூல் விலை உயர்வை குறைக்க கோரியும், ஜவுளி ரகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 5 சதவிகித ஜி.எஸ்.டி.வரி விதிப்பை 12, சதமாக உயர்த்தும் ஒன்றிய அரசின் முடிவை திரும்ப பெற வலியுறுத்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கைத்தறி நெசவுதொழிலாளர்கள் சங்கத்தின் மாவட்டதுணைசெயலாளர் வி.சண்முகம் தலமைதாங்கினார். ரா.சோமசுந்தரம், மு.தனகோபால்,இரா. துரைசாமி,நா.பொன்காளி,சு.தங்கவேல், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகரசெயலாளர் மு.வரதராஜன்,கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கதலைவர் ரா.ரணதிவேல், திராவிடர் கழக மாவட்ட துணைசெயலாளர்,எஸ்.கே. சண்முகம்,விசைத்தறி உற்பத்தியாளர் சங்க பொருளாளர் இர.கணேசன்,மாதர் சங்க செயலாளர் ஆர்.செல்வி, பாலதண்டாயுதம் நெசவாளர் கூட்டுறவு சங்கதலைவர் ராமசாமி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கி பேசினர். அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற செயலாளர் பொ.வேல்முருகன் நன்றி கூறினார்.

# இளைஞர் பெருமன்ற தஞ்சை வடக்கு மாவட்ட சிறப்பு பேரவை

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தஞ்சை மாவட்ட சிறப்பு பேரவை கும்பகோணத்தில் உள்ள ஏஐடியூசி கூட்ட அரங்கில் எஸ்.இளங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அனைத்திந்திய இளைஞர் பெரு மன்றத்தின் மாநிலச் செயலாளர் சேலம்.க.பாரதி துவக்க உரை ஆற்றி னார். புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி மாநில துணைச் செயலாளர் துரை. அருள்ராஜன் பேசினார். மாவட்டம் முழுவதிலுமிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். மாவட்டத் தலை வராக




எஸ்.இளங்கேஸ்வரன், துணைத் தலைவராக எஸ்.எம்.குருமூர்த்தி, மாவட்டச்செயலாளராக கே.திவான், துணைச் செயலாளராக ஆர்.சதீஸ், பொருளாளராக க.தமிழரசன் உள் ளிட்ட 19 இளைஞர்களை கொண்ட புதிய மாவட்டக்குழு தேர்வு செய்யப் பட்டது. பேரவையில் கீழ்காணும் தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன:

தமிழக சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட நீட் எதிர்ப்பு மசோதாவை தமிழக ஆளு நர் காலதாமதம் செய்யாமல் குடிய ரசுத் தலைவருக்கு உடனே அனுப்ப வேண்டும். தமிழகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 73 லட்சத்து 31 ஆயிரத்து 302 இளைஞர்கள் வேலைக்காக காத்திருக்கிறார்கள், இவர்கள் அனை வருக்கும் தமிழக அரசு தகுதிக்கேற்ப வேலை வழங்கிட வேண்டும்.

மாவீரன் பகத்சிங் பெயரில் தேசிய இளைஞர்களுக்கான வேலை உறுதியளிப்பு சட்டத்தை நிறைவேற்றி அனைவருக்கும் வேலை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என் பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. மாவட்ட செயலாளராக க.திவான் தேர்வு செய்யப்பட்டார்.

# ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

நடப்பாண்டு 2021 இன்றுடன் விடை கொடுத்து 2022ஆம் ஆண்டை நம்பிக்கையோடு வரவேற்கும் தருணத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இரண்டாண்டுகளாக தொடர்ந்து நீடிக்கும் கொரோனா நோய்த் தொற்றுப்பரவல் ஒமைக்கரான் வடிவத்தில் உருமாறி தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு அமையாமல் துயர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வரும் 2022ஆம் ஆண்டு பரவி வரும் புதுப்புது நோய்களை ஆரம்ப நிலையிலேயே தடுக்கும் மருந்துகளையும், சிகிச்சை முறைகளையும் கண்டறிய வழிவகுக்கட்டும்.

கார்ப்பரேட் ஆதரவுக் கொள்கையை கடைப்பிடித்து வரும் பாஜக ஒன்றிய அரசு நிறைவேற்றிய, விவசாய நிலங்களை பெரும் நிறுவனங்களுக்கு கைமாற்றிவிடும் விவசாயிகள் விரோத, வேளாண் வணிக சட்டங்களை திரும்பப் பெறவேண்டும் என்று விவசாயிகள் ஓராண்டுக்கும் மேலாக நடத்தியப் போராட்டத்தில் மகத்தான வெற்றி கண்டு வரலாறு படைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் கடந்த சட்ட மன்றத் தேர்தலில் திமுக தலைமையில் அமைந்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. கேரளாவில் இடது ஜனநாயக முன்னணி ஆட்சியில் தொடர்வது, வங்கத்தில் பாஜக படுதோல்வி கண்டது என மகிழ்ச்சி அளிக்கும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. ஜனநாயக உரிமைகள் மீட்கும் போராட்டங்கள் தீவிரமாகி வருகின்றன.

அடித்தட்டு மக்களின் மருத்துவக் கல்விக் கனவை அடியோடு பறிக்கும் ‘நீட்’ தேர்வு முறைக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டம் தொடர்கிறது. அதில் வெற்றிபெற உறுதியேற்போம்.

அண்மையில் வெளியான சர்வதேச அமைப்பின் அறிக்கை ஒன்று இந்திய மக்களின் வாழ்க்கை நிலையில் நிலவும் சமனற்ற நிலை எவரஸ்ட் சிகரம்போல் ஒரு சில பேர் செல்வங்கள் குவிப்பதும், கடல் பரப்புபோல் மக்கள் துயரக் கடலில் வீழ்வதுமான மேடு, பள்ளங்கள் உருவாகியிருக்கின்றன என்று கூறுகிறது. இது எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறும் ‘‘எரிமலை’’ மீது நாடு அமர்ந்திருக்கும் அபாயத்தை உணர்த்தியுள்ளது.

இந்தச் சூழலில் வரும் 2022ஆம் ஆண்டு மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் மேலும் வலிமை பெற்று நாட்டின் அதிகாரத்தில் நீடிக்கும் வகுப்புவாத, மத வெறி சக்திகளையும், ஜாதி ஆதிக்க வெறித்தனத்தையும் முறியடித்த நீடித்த அமைதிக்கு வழிகாணும் என்ற நம்பிக்கையோடு இந்திக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## மண்டல அதிகாரிகள் மீது நடவடிக்கை கோரி ஆர்ப்பாட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அம்மாபேட்டை மண் டல குழு சார்பில் அம்மாபேட்டை மண்டலதில் நடைபெறும் ஊழல்களை கண்டித்தும், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரியும், மண்டல அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் மண்டல செயலாளர் எம்.ஷாநவாஸ்கான் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாநில குழு உறுப்பினர் பி.பரமசிவம் ஆகி யோர் கண்டன உரை நிகழ்த்தினார்.

இதில் மண்டல துணை செயலாளர் சீனிவாசன் முக மது மீரா மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தோழர் சி.எஸ்.ராமசாமி மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

வங்கி ஊழியர் சங்கத் தலைவரும், ஏஐடியூசி தலைவருமான சி.எஸ்.ராமசாமி (வயது 94), 29.12.2021 அன்று காலமானார்.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் பணி புரிந்த அவர், இளம் வயதிலேயே அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தில் (ஏஐபிஇஏ) சேர்ந்து துடிப்புடன் செயலாற்றத் துவங்கினார். பஞ்சாப் நேஷனல் வங்கி ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் பொறுப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்தார். அந்த வங்கியின் டைரக்டர் போர்டு இயக்குனராகவும் தொழிலாளர் தரப்பில் செயலாற்றினார். தான் பணிபுரிந்த வங்கி எல்லையைத் தாண்டி, அனைத்து வங்கி ஊழியர்களுக்கும் சேவையாற்றியிருக்கிறார்.

தமிழ்நாட்டின் பல ஆலைகளில் இயங்கும் தொழிற்சங்கங்கள், போனஸ் பேச்சு வார்த்தைகளில் திறனோடு பங்கேற்பதற்கு, அந்தந்த நிர்வாகங்களின் லாபநஷ்ட கணக்கீடுகளைக் கூர்மையாக ஆய்வு செய்து விபரங்களைத் திரட்டித்தந்து உதவியவர். புகழ்மிக்க கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் பொருளாளராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டக்குழு உறுப்பினராகவும், அர்ப்பணிப்பு மிக்க தொழிற்சங்கத் தலைவராகவும் திகழ்ந்த சி.எஸ்.ராமசாமியின் மறைவு பேரிழப்பாகும். அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு செவ்வஞ்சலி செலுத்துகிறது. அவரை இழந்து வாடும் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## ஒகேனக்கல் உபரிநீரை அனைத்து ஏரிகளிலும் நிரப்ப வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டக்குழு கூட்டம் இண்டூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் தலைமை வகித்தார்.முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான ந.நஞ்சப்பன் அரசியல் சூழ்நிலை மற்றும் கட்சி மாநாடுகள் நடத்துவது குறித்து பேசி னார்.மாவட்டச் செயலாளர் எஸ். தேவராசன் வேலை அறிக்கை வைத்து பேசினார்.

கூட்டத்தில் ஒகேனக்கல் உபரி நீரை அனைத்து ஏரிகளிலும் நிரப்பி தருமபுரி மாவட்டத்தில் விவசாயத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.நீண்ட நாட்களாக கிடப்பில் போடப்படுள்ள பென்னாகரம் பஸ் நிலைய பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். இண்டூரில் விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் அகில இந்திய பொது செயலாளர் ஏ.பி.பாரதன் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரின் உருவப்படத்திற்கு அனைவரும் மலர் தூவி மரியாதை செய்தனர்.

## மயிலாடுதுறை: ஜனசக்தி சந்தா வழங்கும் பேரவை




மயிலாடுதுறை மாவட்டத்தில் ஜனசக்தி, தாமரை சந்தா வழங்கும் மாவட்ட சிறப்பு பேரவை ஜனசக்தி மாவட்ட பொறுப்பாளர் பிரபாகரன் தலைமையில், ஜனசக்தி ஒன்றிய பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.செல்வராசு எம்.பி., த.லெனின் ஆகியோர் ஜனசக்தி ஆண்டு சந்தா 129ஐ பெற்றுக் கொண்டு சிறப்புரை ஆற்றினர். மாவட்ட செயலாளர் அ. சீனிவாசன், மாவட்ட நிர்வாக குழு பி.வீரராஜ், மு.செல்லப்பன், கே.எஸ்.சிவராமன், எஸ்.சி.கணபதி, கே.ராமன், எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். எஸ்.ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

### பால் உற்பத்தியாளர்கள்
## ஆன்லைன் பணப்பட்டுவாடாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்




விருதுநகர் பால்வள துணை பதிவாளர் அலுவலகம் முன்பு, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. வத்ராப் பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் சௌந்திரபாண்டியன் தலைமை வகித்தார். சிபிஐ மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், சங்க மாவட்ட செயலாளர் வி.பாலமுருகன், நகர செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். நலசங்க ஒருங்கிணைப்பாளர் தெய்வேந்திரன் நன்றி கூறினார்.

## சங்கரன்கோவில் கட்சி சொத்துக்கான ஆவணம் ஒப்படைப்பு!

சிவகிரியில் தென்காசி மாவட்ட குழு கூட்டம் மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.காசிவிஸ்வநாதன், எஸ்.அழகு முத்துபாண்டியன், மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் சங்கரன்கோவிலில் பி.எஸ்.எஸ்.போஸ் மற்றும் எம்.குருசாமி ஆகியோரின் முயற்சியால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்காக பெறப்பட்ட ஐந்து செண்ட் நிலத்திற்கான பட்டாவை சங்கரன்கோவில் ஒன்றிய செயலாளர் எம்.குருசாமி மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயனிடம் ஒப்படைத்தார்.

### நூறு நாள் வேலைக்கு சட்டகூலி
## ரூ.273 வழங்க வலியுறுத்தி வி.தொ.ச. ஆர்ப்பாட்டம்

மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் சங்கம் சார்பில் நூறு நாள் வோலை திட்ட தொழிலாளிக்கு சட்டகூலி ரூ.273 வழங்கக் கோரியும், நூறு நாள் வோலை திட்ட தொழிலாளியை அலைகழிப்பை கைவிட வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் ஒன்றிய செயலாளர் ஜெயலெட்சுமி தலைமை வகித்தார். ராமசாமி, பழனியம்மாள், வேளாங்கண்ணி, பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கணேசன், தலைவர் சண்முகானந்தம், ஜனசக்தி உசேன், தங்கராசு, ஸ்டீபன், சேவியர், வீராச்சாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## பரமக்குடியில் மக்கள் நூலக நூல் திறனாய்வுக் கூட்டம்

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மக்கள் நூலக வாசகர் வட்டம் நூல் திறனாய்வுக் கூட்டம் மக்கள் நூலகத் தலைவர் செ.சந்தியாகு தலைமையில் நடைபெற்றது. செயலாளர் சி.பசுமலை நூலக செயல்பாடுகளை விளக்கினார். பொருளாளர் வே.இர்ராஜேந்திரன் நிதிநிலை அறிக்கையினை வாசித்தார். கவிக்கோ அப்துல் ரகுமான் எழுதிய எம்மொழி செம்மொழி என்னும் நூலை எழுத்தாளர் நீ.சு.பெருமாள் திறனாய்வு செய்தார். தமிழ்நாடு கலை இலக்கிய மன்ற மாவட்டச் செயலாளர் ந.சேகரன், தமிழாசிரியர்கள் உ.சண்முகநாதன் சூ.சேவியர் ஆகியோர் நூல் திறனாய்வில் பேசினர். கூட்டத்தில் பரமக்குடி வழக்கறிஞர் சங்கச் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட சி.பசுமலை அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.




மதுரை மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி ஐ.சாலிதளபதி அவர்களிடம் ஜனசக்தி சிறப்பிதழ் மற்றும் காலண்டர் வழங்கிய போது...

### நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படாததால்
## கிராம மக்கள் சாலை மறியல்!

ஒரத்தநாடு வட்டம் கருக்காடிப்பட்டி கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் உள்ளது. இப்பகுதியில் கருக்காடிப்பட்டி, கக்கரைகோட்டை, சோழபுரம்,வடக்கூர், செல்லம்பட்டி என 18 கொள்முதல் நிலையங்கள் உள்ளது. தற்போது கருக்காடிப்பட்டி கொள்முதல் நிலையம் மட்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கருக்காடிப்பட்டியில் சுமார் 800 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் விவசாய சாகுபடி செய்து வருகின்றனர். தங்கள் வயலில் அறுவடை செய்த சுமார் 3000 மூட்டை நெல்லை கருக்காடிப்பட்டி கொள்முதல் நிலையம் கொண்டு வந்து 20 நாட்களுக்கு மேலாக காத்திருக்கின்றனர். சமீபத்தில் பெய்த மழையினால் நெல் மூட்டைகள் நனைந்து சேதமாகி உள்ளன. விவசாயிகளின் நெல்லை கொள்முதல் செய்வதற்கு ஆன்லைனில் பதிவு செய்தால்தான் கொள்முதல் செய்ய முடியும் என அதிகாரிகள் கூறியதற்கு எதிர்ப்பு தெரிவித்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் தமிழ்நாடு விவசாய சங்கத் தலைவர் முத்து உத்திராபதி தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

# கரிசலில் உதித்த செஞ்சூரியன்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஒப்பற்ற தலைவரும், கோவில் பட்டியை அசைக்கமுடியாத கம்யூனிஸ்ட்களின் எக்கு கோட்டையாக மாற்றி, அதன் நிரந்தர சட்டமன்ற உறுப்பினராக வீற்றிருந்து, தனக்குப் பின் னால் தனது கட்சியின் வேட்பாளர்களை சட்டமன்ற உறுப்பினர் ஆக்கிய பெருமைக்குரியவர் கோவில்பட்டி சோ.அழகர்சாமி அவர்கள். அவரின் வாழ்க்கைத் தடத்தை பற்றி எஸ்.காசிவிசுவநாதன் அவர்கள் எழுதிய "கரிசலில் உதித்த செஞ்சூரியன் சோ.அழகர்சாமியின் வாழ்க்கை தடம்" என்கிற இந்நூல். விவசாயிகள் சங்கத்தின் தலைவராக அறி யப்பட்ட இவர். தன் தொடக்க கால வாழ்க்கையில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். எட்டயபுரம் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத் தலைவராகவும், எட்டயபுரம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க நிறுவனராகவும், அதன் தலைவராகவும் பணி யாற்றியவர். கோவில்பட்டி தொகுதியில் 5 முறை மக்களால் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக் கப்பட்டவர். இத்தனை சிறப்புக்குரியவர் ஒரு எளிய மனிதராகவே வலம்வந்தார். ஒரு அப்பழுக்கற்ற கம்யூனிஸ்ட் ஆகவே வாழ்ந்து மறைந்தார்.




20 வயது இளைஞராக இருந்த போதே தாலுக்கா உணவு கமிட்டி தலைவராக பொறுப்பேற்றார். சுற்றி உள்ள கிராமங்களுக்கு கண்ட்ரோல் விலையில் உணவுப் பொருட்கள், துணி போன்ற ரேஷன் பொருட்கள் சரியாக வினி யோகிக்க ஏற்பாடுகளைச் செய்தார். பொதுவாழ்வில் நேர்மை, தூய்மை, கொண்ட லட்சியத்தில் உறுதி என்ற தாரக மந்திரத்திற்கு சொந்தக்காரர் சோ.அழகர்சாமி. சோஷலிஸ்ட் ஆக வாழ்க்கையைத் தொடங்கிய அழகிரிசாமி, நாகலாபுரத்தில் இருந்த தியாகி வி.பாலகிருஷ்ணன் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டது. கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் பூதல புரம் ஆர்.வேலுச்சாமி தேவர், கே.பாலதண்டாயுதம், ஆர். எச். நாதன், விருது நகர் உலகநாதன், மணலி கந்தசாமி ஆகியோருடன் இவருக்கு நட்பும், தோழமையும் உருவாகியது. இந்த உறவு இவருக்கு புதிய வெளிச்சத்தைக் காட்டியது

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நரவேட்டையாடப்பட்ட காலகட்டத்தில், 1949 ஆம் ஆண்டு. அழகர்சாமி தன்னை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யில் இணைத்துக்கொண்டார். தலைமறைவு, சிறை என அத்தனை கெடு பிடிகளையும் மீறி தான், இந்த பகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கம் வளர அடித்தளம் இட்டார் அழகர்சாமி. சட்டமன்றத்தில் ஏழை எளிய மக்களின் குரலாக ஓங்கி ஒலித்த குரல் இவருடைய குரல். தனக்கென ஒரு விசிட்டிங் கார்டு கூட இல்லாத சட்டமன்ற உறுப்பினர். அமைச்சர்கள் யாராக இருந்தாலும் அவருடைய அறைகளுக்கு,உரிமையோடு சென்று மக்களின் பிரச்சினைகளை பேசக்கூடியவர். இவருடைய நேர்மையும், எளிமையும் இன்றைய இளைய தலைமுறை அறிந்து கொள்ள வேண்டிய பாடமாகும். இந்நூலை அனைவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும்

**– இன்சுவை பாரதி**


**நூலாசிரியர் : எஸ்.காசி விஸ்வநாதன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம்**
**41b, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை-50, போன்: 044 26251968**
**பக்கங்கள் : 366 விலை : ரூ.335**

## நூல் நயம்

# தமிழகத்தின் மக்தூம் பொ.கைலாச மூர்த்தி

கலை கலைக்காகவே என்று வாழும் கலைஞர்களுக்கு மத்தியில். கலை என்பது மக்களுக்காகவே என வாழ்ந்த மனிதர்தான் பொ. கைலாச மூர்த்தி.

அவரது வாழ்க்கையையும்,பணிகளையும் தமிழக மக்களுக்கு அறிமுகம் செய்ய பெ. கணபதி சுப்பிரமணியன், நா.ராமச்சந்திரன், ரகு அந்தோணி ஆகியோர் "தமிழகத்தின் மக்தூம் பொ.கைலாசமூர்த்தி" என்கிற இந்நூலை தொகுத்து வெளியிட்டுள்ளனர். ஒரு அரசு ஊழியராக தனது வாழ்க்கையை தொடங்கி, அரசு பணியாளர் சங்கம், இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் போன்ற பல பொது அமைப்புகளில் பங்கேற்று, ஆதன் நிகழ்ச்சிகளில் சுற்றுவட்டார மக்கள், அரசுப்பணியாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் படும் பாடுகளை ஒயிலாட்டம், சிலம்பாட்டம், கரகாட்டம், கும்மியாட்டம் மூலமாக மக்களிடம் கொண்டு சென்றவர். பலருக்கும் பயிற்சி அளித்தவர். கலையை சமூக மாற்றத்திற்கான கருவியாக மாற்ற முடியும் என நம்பியவர்.




கொடிய கொரோனா காலத்திலும் அதன் கோரங்களை குறித்து பாடியவர். குரோனா காலத்தில் பாதிக்கப்பட்ட நாட்டுப்புற கலைஞர் களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை செய்த மனிதாபிமானி. இவரது கலைப் பணி திறமையையும், அர்ப்பணிப்பையும் கண்டு. பாளையங்கோட்டை புனித சவேரியார் கல் லூரியின் நாட்டார் வழக்காற் றியல் துறை, இவரை மாணவர்களுக்கு கலையைக் கற்றுத்தரும் ஆசிரி யராக நியமித்தது. தமிழக அரசு இவருக்கு "கலை மாமணி" விருது கொடுத்து கௌரவித்தது.

தேர்தல் களங்களில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்காக நிகழ்ச்சிகளை நடத்தி மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர். இவரது கலை நிகழ்ச்சிகளில் இந்திய தேசிய தலைவர்களை பெருமையோடு அறிமுகம் செய்து வைப்பார். இவரது பேச்சுக்கோ, பாடலுக்கோ அவர் எந்த எழுத்து குறிப்புகளும் வைத்துக்கொள்வதில்லை, காரணம் அவை யாவும் அவர் ஊனுடனும், உயிருடனும் கலந்து இருக்கும். 75 வயதில் எதிர்பாராத அவரது மரணம் நாட்டுப்புற கலைக்கு மட்டுமல்ல, எளிய உழைப்பாளி மக்களுக்கும் பெரும் இழப்பாகும்.

இந்த எளிய கலைஞனை தமிழக மக்களுக்கு அடையாளம் காட்டு வதற்காக இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறேம். **– சமரன்**

**பதிப்பாசிரியர்கள் : பெ. கணபதி சுப்பிரமணியன், நா. ராமச்சந்திரன், ரகு அந்தோனி**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம், 41b, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-50, போன்: 044 26251968**
**பக்கங்கள் : 182 விலை : ரூ.185**

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

# இந்தியாவில் வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்கு சர்வதேச ஊடகங்கள் கண்டனம்



இசுலாமியர்களை கொன்றழிக்க வேண்டும் என்ற வெறுப்புணர்வு ஊடகங்களில் வெளியானதையொட்டி இந்திய அரசியல் தளத்தில் அதிர்வலைகள் உண்டானது. இது குறித்து, நியூயார்க் டைம்ஸ், பைலைன் டைம்ஸ் உள் ளிட்ட சர்வதேச ஊடகங்கள் கடும் கண்டனத்தை தெரி வித்ததுடன் மோடி அரசாங்கத்தையும் விமர்சித்துள்ளன.

நரேந்திர மோடி இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்ற பின், பா.ஜ.க ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான அரசாங்கத்தில் உள்ள இந்துத்துவ தீவிரவாதிகள் இசுலாமியர்களை கொன்றழிக்க வேண்டும் என்ற வெறுப்புணர்வை உமிழ்ந்து வருகிறார்கள். அவர்களின் இந்த இனஅழிப்புக்கான அறைகூவல் இந்தியாவில் உள்நாட்டுப் போருக்கு வித்திடும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இவை பற்றியெல்லாம் சிறிதும் கவலை இல்லாமல் பிரதமர் மோடி மவுனமாக இருந்து வருகிறார். இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டில், அரசி யலமைப்புச் சட்டத்தின்பாற்பட்ட அரசாங்கத்தை நிர்வாகம் செய்வதற்குப் பதிலாக மதத்தை மையமாகப் கொண்ட அடையாள அரசியலில் ஊறித் திளைக்கிறார்.

வெறுப்புணர்வைத் தூண்டிய குற்றவாளிகள் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை. இந்திய அரசு தரப்பிலிருந்து ஒரு கண்டனம் கூடத் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து தேசியத்தை நிர்மாணிக்க, அவசியமேற்பட்டால், இசுலாமியர்களை கொன்றழிக்க வேண்டும் என்று இந்துத் துவ வலதுசாரிகள் மாநாடு ஒன்றில் உறுதியேற்றனர் என்று நியூயார்க் டைம்ஸ் இதழ் எழுதியிருப்பது இந்தியாவில் இசுலாமியர் எதிர்ப்பு உணர்வு அதிகரித்து வருவதை எடுத் துக்காட்டுவதாக உள்ளது.

அண்மையில், ஹரித்துவார் நகரில் நடைபெற்ற 3 நாள் மாநாட்டில் வெளிப்பட்ட இசுலாமிய வெறுப்புணர்வு வன்முறையைத் தூண்டுவதற்கான வெளிப்படையான அறைகூவலாக இருக்கிறது. இது போன்ற மாநாடு மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்கும் மதத் தலைவர்கள் பிரதமர் மோடியுடன் நெருக்கமாக இருப்பவர்கள் ஆவர்.

பொதுவாக, இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மைச் சமூகத்தவர்கள் பாகிஸ்தானில் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை இந்தியா முன் வைக்கும். ஆனால், இப்போது இந்தியாவில் வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சு அதிகரித்து வருவது குறித்து இந்தியா மீது பாகிஸ்தான் குற்றஞ்சாட்டுகிறது.

ஊடகங்களில் வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்கு மற்றும் பரப்புரைகளுக்கு எதிராக மோடி அரசு எவ்வித உறுதியான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. மதவெறி பிடித்த பா.ஜ.க ஆர்.எஸ்.எஸ் ஆட்சியின் செயல்பாடு சர்வதேச ஊடக அரங்கில் இந்தியாவின் மதச்சார்பற்ற பாரம்பரியத்தை சீர்குலைப்பதாக இருக்கிறது.

மதச்சார்பற்ற இந்தியாவை அனைவரும் ஒன்றிணைந்து போராடிப் பாதுகாக்க வேண்டும். அதற்கு பா.ஜ.க ஆர்.எஸ். எஸ் அரசை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்த வேண்டும்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# கிளை மாநாடுகள்

04ம் பக்கத் தொடர்ச்சி >> ,வட்ட செயலாளர் கோவிந்தன் ஆகியோர் பேசினர். கோவிந்தன் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்

**சத்திரப்பட்டி சிபிஐ 1, 2 கிளைகள்:**

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் கிழக்கு ஒன் றியம் சத்திரப்பட்டி 1,2 கிளைகள் மாநாடு ஞானகுரு தலைமையில் நடைபெற்றது.மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வி.இரவி, ஒன்றிய செயலாளர் முத்துமாரி ஆகியோர் பேசினர். 1வதுகிளை செயலாளராக பாலசுப்பிரமணியன், 2வது கிளை செயலாளராக மாரிமுத்து ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

**அண்ணா தினசரி காய்கறி மார்கெட் கிளை:**

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் தொழிலாளர்கள் கிளை மாநாடு எம். முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார், மாவட்ட பொருளாளர் க.சமுத்திரம், வட்ட செயலாளர் ஆர்.ஜீவா ஆகியோர் பேசினார்கள். செயலாளராக பி.முத்துக்குமார், துணை செயலாளராக மாரிமுத்து, பொருளாளராக பூலித்திரை ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்

**சீர்காழி ஒன்றியம், நகரம் 1 கிளை மாநாடு:**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றியம், நகரம் 1 ஆவது நகர கிளை மாநாடு பி.நெடுஞ்செழியன், வி.ராஜசங்கர் தலைமையில் நடைபெற்றது. அமர்நாத் வரவேற்று பேசினார். எம்.சந்திரகாசு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். பி.இளமதியன் கொடியினை ஏற்றி வைத்தவர். வே.நீதி சோழன் ஒன்றிய துணை செயலாளர் அரசியல் விளக்க உரையாற்றினார். மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.சுந்தரய்யா மாநாட்டை வாழ்த்தி பேசினார். ஏ.இராஜேந்திரன் நன்றி கூறினார். புதிய செயலாளராக டி.கம்பதாசன், துணை செயலாளராக எம்.ராஜசங்கர் அமர்நாத் தேர்வு செய்யப்பட்டனர்.

**குரும்பட்டி கிளை:**

எடப்பாடி ஒன்றியம் குருக்கப்பட்டி கிளை மாநாடு ஹ.சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சு.அய்யனார், ஒன்றிய செயலாளர் ஊ.பெரியதம்பி, மாவட்டக்குழு உறுப்பினர் ஏ.சின்னபையன் ஆகியோர் உரையாற்றினர். கிளைச் செயலாளராக ஹ.சுப்ரமணி, துணை செயலாளராக ஹ.ராஜா, பொரு ளாளராக ஏ.கந்தசாமி தேர்வு செய்யப்பட்டனர்.

**ஏர்ரகொல்லனூர் கிளை:**

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எர்ரகொல்லனூர் கிளை மாநாடு முருகேசன் தலைமையில் நடைப்பெற்றது. மாநாடில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சி.மாதையன், பி. முனி யப்பன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினர்.

மாநாட்டில் கிளை செயலாளராக வெள்ளையன்,துணை செயலாளராக செந்தில்,பொருளாளராக ராஜா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**அஸ்தம்பட்டி கோர்ட் கிளை :**

சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி மண்டலம், கோர்ட் ரோடு காலனி 16வது கிளை மாநாடு எஸ்.வடிவேல் தலைமையில் நடைபெற்றது. அஸ்தம்பட்டி மண்டல செயலாளர் ஆர்.எல். முத்துராஜ கோபால் அரசியல் உரை நிகழ்த்தினார். கே. ஜெயக்கொடி செயலாளராகவும், எஸ்.வடிவேல் துணை செயலாளராகவும், எஸ்.இராமமூர்த்தி பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

**கிடாரங்கொண்டான் கிளை:**

கிடாரங்கொண்டான் கிளை மாநாடு நாகராஜன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை வாழ்த்தி மாநிலக் குழு உறுப்பினர் பி.எஸ்.மாசிலாமணி, மாவட்டக்குழு உறுப்பினர் செல்லமணி, எஸ்.செல்வம் மற்றும் நகர செயலாளர் எம்.ஏ.மாரியப்பன், வீ.தர்மதாஸ் ஆகியோர் பேசினர். கிளைச் செயலாளராக இளம்பருதி தேர்வு செய்யப்பட்டார். அதேபோன்று கட்சியின் 21வது கிளை மாநாடு முனியப்பன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டினை வாழ்த்தி செல்லமணி, நகர செயலாளர் எம்.ஏ.மாரியப்பன், நகர செயற்குழு உறுப்பினர் வீ.தர்மதாஸ், கே.பாலதண்டாயுதம் பேசினர். கு.வேதாச்சலம் கிளைச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

**கணபதி நகர் கிளை :**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கணபதி நகர் கிளை மாநாடு கே.ரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. வடக்கு மண்டல துணைச் செயலாளர் வி.ஆர்.பாண்டியன் அரசியல் விளக்கவுரை ஆற்றினார். கிளைச் செயலாளராக ஆர்.மருதாசலம், துணைச் செயலாளராக கே.ரங்கசாமி, பொருளாளராக எம்.தேவராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட் டனர்.

**திருவண்ணாமலை கிளை:**

திருவண்ணாமலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு நடைபெற்றது. டி.ராஜேந்திரன் தலைமை தாங்கினார். என்.பாலகிருஷ்ணன் கட்சி கொடியை ஏற்றி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வி.முத்தையன் மாநாட்டை துவக்கி வைத்தார். கு.ஜோதி, இரா.தங்கராஜ், த.ராஜேந்திரன் உள்பட பலர் பேசினர். புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். ஆர்.புஷ்பா ராஜாமணி நன்றி கூறினார்.

**வடசென்னை 46வது வட்ட கிளை**

வடசென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட 46வது வட்ட பி கிளை மாநாடு ஏ.எஸ்.கே.மன்றத்தில் ச.தேசிகானந்தம், டி.செண்பகம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டு கொடியை மூத்த தோழர் ஆர்.கே.ஞானசேகரன் ஏற்றி வைத்தார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, துணைச் செயலாளர் எம்.வசந்தகுமார், மாநிலக்குழு உறுப்பினர் கீ.சு.குமார், தொகுதி செயலாளர் ஆர்.சுப்பிரமணி ஆகியோர் உரையாற்றினர். மாநாட்டில் 46வது பி பிளை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. எஸ்.நாகராஜ், ஆர்.பார்த்திபன் அகியோர் கிளைச் செயலாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

# அமெரிக்கா தலைமையில் ஜனநாயக மாநாடு... ஏற்க இயலுமா!?





மு.வீரபாண்டியன்

**அமெரிக்க ஏற்பாட்டில் அதன் தலைமையில் டிசம்பர் 9, 10 ஆகிய இரு தினங்கள் ஜனநாயக மாநாடு நடைபெற்றுள்ளது. ரஷ்யா, சீனா இரு பிரதான நாடுகளைத் தவிர்த்து மாநாடு நடந்துள்ளது. இது இன்னொரு பனிப்போரின் துவக்கமாகவே கருதப்படும்.**

இருநாடுகளும் தவிர்க்கப்பட்டிருப்பது அல்லது புறக் கணிக்கப்பட்டிருப்பதன் நோக்கம் அங்கு ஜனநாயகம் நிலவ வில்லை என்பதுதான். அப்படி எனில், பங்கேற்ற அனைத்து நாடுகளிலும் ஜனநாயகம் நிலவுகிறதா? சரி. அமெரிக்கா விலாவது முழு நிறை ஜனநாயகம் நிலவுகிறதா ? ஜனநாயகம் உள்நாட்டில் ஒரு முறைமையிலும், உலகநாடுகள் மீது வேறு முறையிலும் நிலவ முடியுமா ?

ஆனால், அமெரிக்கா எனும்போது அப்படிதான் நிகழ்கிறது. அமெரிக்க ஜனநாயகத்தை இந்திய ஜனநாயகத்தோடு ஒப்பிட முடியாது. அதுவும் அரசியல் ஜனநாயகம் எனும்போது ஒப்பிடவே இயலாது. பலகட்சி இயங்குமுறை, பன்முகம், மதச்சார்பின்மை, சட்டத்தின் ஆட்சிமுறை எதிர்க்கட்சிகள், விவாதமுறை எனும் நாடாளு மன்ற ஜனநாயகம் இப்படி இந்திய ஜனநாயகத்தின் சிறகுகள் மகத்தானவை செனட் போன்ற செல்வ அதிகாரசபை இந்தியாவில் இல்லை.

இந்திய அரசியல் ஜனநாயகத்தின் திசைவழி சமத்துவம் தான். அமெரிக்க அரசியல் ஜனநாயகத்தின் திசைவழி முதலா ளித்துவம்தான், இரண்டுக்கும் இடையிலான மிகப்பெரிய இடைவெளியை அறியமுடியும் அல்லவா ?

அமெரிக்காவில் கறுப்பின மக்கள் மீதான் பாகுபாடுகள் இன்னமும் நீடித்தபடிதான் இருக்கிறது. வசிப்பிடங்களில் கறுப் பின மக்களோடு சேர்ந்துவாழ வெள்ளையர்கள் விரும்புவது இல்லை. கல்விச்சாலைகளிலும் கூட கறுப்பின மக்கள் அதிகம் உள்ள பள்ளி கல்லூரிகளை கடந்துவிடுகிறார்கள் வெள்ளை யர்கள். சமூக ஜனநாயகம் அவ்வளவு தாழ்வில் இருக்கிறது அமெரிக்காவில். அதிகாரம், நிலம், சொத்துக்கள், உணவு, இருப் பிடம் இவை களோடு அடக்குமுறைகள், உளவியலான தாக்கு தல்களுக்கும் உள்ளாகிறார்கள். இன்னமும் கூட கறுப் பின மக்கள் அடிமை யின் குறியீடு வெள்ளையர்கள் ஆதிக்கக் குறியீடு எனும் உளவியல் தொடர்வது எந்தவகை ஜனநாயகம்.

சார்லி சாப்பலின் துவங்கி மார்டின் லூதர்கிங் வரை, அதேபோல் ஆஞ்சிலோ டேவிட் துவங்கி தொலைக் காட்சி புகழ் ஒப்ரா வரை நேர்ந்த கதி உலகறியும். அமெரிக்கா வியட்நாம் மீது தொடுத்த யுத்தத்தோடு உடன்பட மறுத்த காரணத் திற்காவே முகமது அலி மீதான அடக்குமுறைகளை உலகறியும். இவையெல்லாம் ஜனநாயக வழிதானா ?

இரண்டாம் உலக யுத்தத்தில் நாகசாகி, ஹிரோசிமா மீது வீசப்பட்ட அணு குண்டு அதிர்ச்சியைக் காட்டிலும் அமெ ரிக்க நாளுமன்றம் அதை நியாயப் படுத்தியதே அதுதான் ஜனநாயகமா ?

1948 ல் கிரீஸ் நாட்டில் அப்பட்டமான ராணுவத் தலையீடு, பின்னர் கௌதமாலா, ஹாண்டுராஸ், நிக்ராகுவா, ஆப்கன், ஈராக், லிபியா என அப்பட்டமான ராணுவ அடக்கு முறைகள் ஜனநாயகம் தானா ?

உலகமே கண்டித்தபோதும் ஆப்ரேஷன் பீனிக்ஸ் எனக் கூறி, சின்னஞ் சிறிய வியட்நாம் மீது நாபாம் உள்ளிட்ட லட்சக் கணக்கானகுண்டுகளைவீசியதைஉலகம்மறந்துவிடுமாஎன்ன? தென்னாப்பிரிக்க விடுதலைக்காக பல்லாண்டுகள் சிறையில் வாடிய நெல்சன் மண்டேலா, ஆலிவர் டாம்போ, வால்ட்டர் சிசுலு உள்ளிட்ட அரசியல் தலைவர்களை ரோபன் சிறைத் தீவில் இருந்து விடுவிக்க வேண்டுமென ஐநா சபை தீர்மானம் நிறைவேற்றியபோது, அதை அப்பட்டமாக மீறியதோடு, தென்னாப்பிரிக்க இனவெறி போத்தா அரசுக்கு அப்பட்டமான ஆதரவைத்தந்து யார் ? பிரிட்டனும், அமெரிக்காவும்தானே.

பால்ஸ்தீனத்திற்கான ஆதரவு தீர்மா னங்களை பலமுறை தொடர்ந்து மீறியது யார் ? கியூபா மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டுமென பலமுறை ஐநா சபை தீர்மானம் நிறைவேற்றியும் இதுவரை அதற்கு மதிப்பளிக்காதது யார்? அமெரிக்கதானே. இத்தகைய நாடு ஜனநாயகம் குறித்து பேசுவதும் மாநாடு நடத்துவதும் உலகம் ஏற்க இயலுமா ?

அதே நேரத்தில் சீனா மீதான ஜனநாயகம் குறித்த கேள்வி களை கடந்து செல்லமுடியாது. இந்திய வகை அரசியல் ஜனநாயகம் குறித்து சீனா நிறைய கற்கவேண்டும். அதே நேரத்தில் இந்தியாவில் சமூக ஜனநாயகமும் பொருளாதார ஜனநாயகமும் இன்னமும் கூட தாழ்வு நிலையில் இருப்பதை ஒப்புக் கொள்ளவேண்டும். பிறப்பால் தாழ்வு எனக் கூறி காத லையும் திருமணத்தை ஏற்க மறுத்து கொலைகள் செய்வது எவ்வகை சமூக ஜனநாயகம்.

நாற்பது கோடி மக்களுக்கு தேவையான செல்வ வளங்களை நான்குபேர்கள் பறித்துக் கொண்டு இருப்பது எவ்வகை பொருளாதாரா ஜனநாயகமாகும். எனவே, கற்கவேண்டியது சீனாமட்டுமல்ல அமெரிக்காவும் இந்தியாவும் கூடத்தான்.

தென்சீன கடலாதிக்கம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. கடல் ஆதிக்கத்தின் மூலம்தான் உலக நாடுகளை காலனி செய்தது பிரஞ்ச், பிரிட்டன், டச்சு ஏகாதிபத்திய நாடுகள். சூயஸ் கால்வாய் துவங்கி குவாண்டமோ கடல் தீவுச் சிறை, டீக்கோகார்சியாவின் ராணுவத் தளம் என பல கடல் தளங்கள் அமெரிக்காவின் ஆதிக்கத்தில்தானே இருக்கிறது. சீன ஆதிக் கம் எனக் கூறி ஏகாதிபத்திய ஆதிக்கங்களை மறைப்பது ஏன்.

மேலு சீனாவின் பொருளாதாரம் ஆதிக்கம் பற்றி பேசப் படுகிறது. இறுதிக் கோட்பாடு எனக் கூறி புதிய பொருளாதாரக் கொள்கைகளை உலகின் மீது திணித்தது யார் ? அமெரிக்காவும் பிரிட்டனும்தானே. இந்தப் பொருளாதார முறைமைதானே சீனா. ஏன் சீன ஆதிக்கம் என குற்றம் சாட்டப் படுகிறது, என்ன நியாயம் இது, பொருளாதாரத்தில் சீன ஆதிக்கம் என்றால், ஏன் அதிகமான வர்த்தக உறவுகளை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் சீனாவிடம் கொண்டுள்ளது.

ஒட்டுமொத்த ஆப்ரிக்க நாடுகளோடு அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஏன் குறிப்பிட்டு சொல்லும்படியான வர்த்தக உறவுகளை கொள்வதில்லை ? குறிப்பிட்டு சொல்லும் படியான தொழிநுட்ப உதவிகளை செய்வதில்லை ? இதை ஆய்ந்தாலே போதும் அமெரிக்க ஐரோப்பிய ஜனநாயகம் வெட்டவெளிச்சமாகும். ஆக, சீன ஜனநாயகத்தை சுட்டிக்காட்டி அதன் பொருளாதார ஆதிக்கத்தை சுட்டிக்காட்டி அமெரிக்க ஜனநாயகத்தை, அதன் ஆதிக்கத்தை நியாப்படுத்டுவதை ஏற்க இயலாது. 16 ம் நூற்றாண்டுப் துவங்கி நாம் வாழும் இந்த நூற்றாண்டு வரை இந்த புவிப்பரப்பை ஆட்சி செய்வது முதலாளித்துவம்தான். காலனித்துவம், இரண்டு உலகப் போர் என்னும் சோகம், இயற்கை மீதான சூறையாடல் எனும் வரலாற்றுத் துயரங்களை உலகுக்களித்தது முதலாளித்துவம்தான். ஓர் புதிய உலகம் கோருபவர்கள், ஏகாதிபத்தியங்களை கடந்தாக வேண்டும். எனவே, ஏகாதிபத்தியங்கள் பேசும் ஜனநாயகம் ஏற்புடையதல்ல.

---

16ம் பக்கத் தொடர்ச்சி >>

அமைப்பாகத் திகழ வேண்டும் என்ற கருத்தும் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட நமது அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றன.

இந்திய அரசு பெரும்பான்மை மதத்தை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட போது, “அவ்வாறு செய்வது தேசத் திற்கு பேரழிவை உண்டாக்கும்“ என்று டாக்டர் அம்பேத்கர் உறுதிபட பதிலுரைத்தார். மத நம்பிக்கைகளின் அடிப்படை யிலான பாகுபாடுகள் அற்ற, அடிப்படை உரிமைகளை வழங்கும் மதச்சார்பற்ற, ஜனநாயக குடியரசாக நமது நாடு உருவாக்கப்பட்டது. மதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு என்ற கருத்தை வலியுறுத்திய ஆங்கிலேய ஆதரவு கூட்டத்திற்கு மக்கள் மத்தியில் ஆதரவு இல்லை. தேச நலனுக்காக அனைத்தையும் தியாகம் செய்த விடுதலைப் போராளிகள் அனைவரும் இந்தியா மதச்சார்பற்ற அரசாகத் திகழ வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2008 – 2009 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் நிச்சயமற்ற சூழலின் போது, இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ்.–பா.ஜ.க. எழுச்சியுற்றதை நாம் பார்த்தோம். கிறித்தவ திருச்சபை போன்ற நிறுவன கட்டமைப்பை இந்து மதம் கொண்டிருக்கவில்லை என்பதோடு, ஆங்காங்கே உள்ள வழக்கப்படி மத சம்பிரதாயங்கள் மேற்கொள்ளப்பட்டன. வேற்றுமைகள் நிறைந்த நமது சமுதாயத்தின் மீது ஒற்றைத்தன்மையைத் திணிக்க வேண்டும் என்பதில் முழு கவனம் கொண்டிருக்கிறது ஆர்எஸ்எஸ். அதன்படி பிராம ணீய நூல்களில் உள்ள திரட்டுகளுக்கு ஒற்றைத்தன்மை கொண்ட வியாக்கியானங்களை உருவாக்கும் செயல்களில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இந்தப் போக்கு மத நல்லிணக்கத்திற்கு பெரும் அபாயத்தை உருவாக்குவதோடு மட்டுமின்றி, வரலாற்றில் நம்மை பல நூறு ஆண்டுகளுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்வதுடன், பொருளாதார நலன் சார்ந்த பிரச்சனைகளில் இருந்து நமது கவனத்தை திசை திருப்புகிறது.

அண்மைக்கால நிகழ்வுகள் சில நமக்கு கவலை அளிப்ப வைகளாகவே இருக்கிறது. குஜராத் மாநிலத்தின் சில நகராட்சி பகுதிகளில் அசைவ உணவு விற்பனைக்கு தடை விதிக்க வேண்டும் என்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு மாதத்திற்குள் இந்து மதத்திற்கு மாறவில்லை என்றால் இட ஒதுக்கீட்டு பலன்கள் பறிக்கப்படும் என்று பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பழங்குடி மக்களுக்கு கெடு விதித்துள்ளார். உள்ளாட்சிப் பணிகள் தொடங்கி அயல்நாட்டு கொள்கைகள் வரையிலான மதச்சார்பற்ற விவகாரங்களிலும் மதம் தனக்கான இருப்பை அதிகரித்துக் கொள்ள முயலுகிறது.

அரசின் அதிகாரபூர்வ மதம் என்ற அளவிற்கு நடைமுறையில் பெரும்பான்மை மதத்தின் எழுச்சியானது அரசியல்அமைப்பு சட்டத்தின் அடிப்படை விழுமியங்களைத் தகர்த்தெறியக்கூடிய அபாயமாக உருவெடுத்துள்ளது. “அபத்தமான கூற்றுகளை நம்பவைக்க முடிந்த ஒருவரால், கொடு மைகளைக் கட்டவிழ்த்து விடும் நபராக உங்களை உருவாக்க முடியும்“ என்று பிரெஞ்சு நாட்டு சிந்தனையாளர் வால்டேர் கூறிய பிரபலமான கருத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கண்ணியம், வாழ்வாதாரம், சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் வீட்டு வசதி ஆகியவற்றுடன் தொடர்புடைய முக்கிய பிரச்சனைகளின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் மட்டுமே மத அடிப்படையிலான சிந்தனை வளர்ச்சிப் போக்கின் எழுச்சியை எதிர்கொண்டு முறியடிக்க முடியும்.

மதச்சார்பற்ற அரசின் செயல்பாடுகளில் மதம் தலையீடு செய்வதற்கு நாம் அனுமதிக்கப் போகிறோமா? அல்லது இந்து வலதுசாரி சக்திகளின் வஞ்சகத்தை எதிர்த்து முறியடிக்க போகிறோமா? என்பதுதான் இன்று நம்முன் உள்ள கேள்வி ஆகும். இது தான் இந்த தேசத்தின் கதியோடு நாம் மேற்கொள்ளும் போராட்டமா? முன்னேறிச் செல்வதற்கான பாதை எது? விடுதலைப் போராட்ட இயக்கமும், எண்ணற்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் புரிந்த அளப்பரிய தியாகமும் நமக்கு தந்த படிப்பினைகள் அதற்கான பாதையை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

தமிழில்: **அருண் அசோகன்**

---















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 08.01.2022 at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57



டி.ராஜா

# இந்தியாவில் அரசும் மதமும்



**பிரதமர் நரேந்திர மோடி துவக்கி வைத்த காசி விஸ்வநாதர் ஆலய விழா நிகழ்வு தொலைக்காட்சிகளில் விமரிசையாக ஒளிபரப்பப்பட்டது. தேசத்தின் ஆட்சியாளர்கள் தீவிர முனைப்பு காட்டும் மோசமான சூழ்ச்சிகளைத்தான் அந்த நிகழ்வின் ஒளிபரப்பு பெரிதும் வெளிப்படுத்தியது.**

அரசு விழா ஒன்றில், நாட்டின் பிரதமர் இந்து மதக் குறியீடுகளை வணங்கியதும், மதச்சடங்கு ஆச்சாரங்களை மேற்கொண்டதும், நமது நாட்டின் பெரும்பான்மை மதத்திற்கு நடைமுறை ரீதியிலான அதிகாரப்பூர்வ சிறப்பு நிலையை வழங்கியது. இத்தகையப் போக்குகள் மதம், அதன் நோக்கம், சமுதாயத்தின் மீதான மதத்தின் தாக்கம், அரசு – சமுதாயத்தில் அதன் பங்கு மற்றும் செயல்பாடுகள், பல்வேறு மதங்கள் மற்றும் பண்பாடுகளைக் கொண்ட நாட்டில் அரசு மற்றும் மதத்திற்கு இடையேயான உறவு ஆகியவை குறித்த எண்ணற்ற கேள்விகளை நம் முன் எழுப்புகின்றன.

நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகிய இலட்சியங்களின் மீது நிலைநாட்டப்பெற்ற இறையாண்மைமிக்க, சமத்துவ, மதச்சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமது நாட்டை மிகத் தெளிவுபட பிரகடனம் செய்கிறது. அவ்வாறு இருப்பினும், தற்போதுள்ள ஆட்சி அரசியலமைப்புச் சட்டத்தின் அந்தப் பிரகடனத்தைச் சுய விருப்பத்துடன் புறந்தள்ளவே முயலுகிறது.

நாக்பூரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் லட்சியத்திற்கு விசுவாசமாக இருக்கும் இந்த வலதுசாரி பிராமணீய ஆட்சி சகிப்பு தன்மையின்மைக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. பலப் பிரயோகத்தால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைத் தாக்குதல்கள் நம் கண் முன்னால் தொடர்ந்து வருகின்றன. அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்து வரும் விவா தத்திற்குரிய இந்த வன்முறைத் தாக்குதல் சம்பவங்கள் குறித்து நாம் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**பல்வேறு மொழிகள், பண்பாடுகள் மற்றும் மதங்களைக் கொண்ட நமது நாட்டில், வரலாற்று அழித்தொழிப்பு நடைபெற்று வருகிறது. இவை அனைத்தும் இந்து தேசியத்தை நிறுவிட வேண்டும் என்கிற கோல்வால்கர் மற்றும் சாவர்க்கரால் முன்னிலைப்படுத்தப்பட்ட அரசியல் செயல்திட்டத்தின் அடியொற்றி அமைந்திருப்பவை ஆகும்.**

அரசின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தும் கோட்பாடுகளில் ஒன்றான மதச்சார்பின்மை அவமதிக்கப்படுகிறது; புறந்தள்ளப்படுகிறது. மதத்தை மையமாகக் கொண்டுள்ள ஒரு அரசியல் உருவாக்கத்திற்கு இந்திய துணை கண்டத்தின் பன்மைத்துவ பண்பாட்டு எதார்த்தம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது.

மதச்சார்பின்மைக்கு ஒற்றை வரையறையை தீர்மானிக்க முடியவில்லை என்றபோதும், நவீன தேசிய அரசுகள் மதச் சார்பின்மை என்ற கோட்பாட்டின் மீது நீண்ட காலமாக நிலை பற்றி வருகின்றன. சமுதாயத்தில் மதத்தின் பங்கு என்பது எப்போதும் பெரும் விவாதத்துக்குரிய ஒரு பிரச்சனையாகவே இருந்து வருகிறது.

பண்டைய கிரேக்க அரசுகள் தொடங்கி நவீனகால தொழில்மய நகரங்கள் ஈறாக, தத்துவஞானிகளும், சிந்தனையாளர்களும், அரசியல் துறையினரும் மதத்தை எவ்வாறு புரிந்து கொள்வது, அணுகுவது, குறிப்பாக சமூகத்தின் உருவாக்கத்தில் மதத்தின் பங்கு மற்றும் விளைவுகள், நிர்வாகம் ஆகியவை பற்றி ஆழ்ந்து சிந்தித்து வருகிறார்கள். நவீனம், தொழிற்புரட்சியின் வருகையுடன் தேசிய அரசுகளின் தோற்றம் உருவான காலத்தின்போது, அரசு மற்றும் மதத்திற்கு இடையிலான உறவு பற்றிய ஒரு தீர்மானமான கருத்தை நிறுவிட வேண்டும் என்ற பேரார்வம் காணப்பட்டது. மதத்தையும், அரசையும் பிரித்து வைத்திருப்பது என்ற நிலைப்பாடே தேசிய அரசுகளின் ஆரம்பகால அணுகுமுறையாக இருந்தது. மதம் என்பது ஒரு நபரின் தனிப்பட்ட விவகாரமாக கருதப்படுவதே சரியானதாக இருக்கும் என்றும், அரசுக்கு அதில் தலையீடுகள் செய்வதற்கு எவ்வித பங்கும் இல்லை என்றும் வலியுறுத்தப்பட்டது. சமூக உடன்படிக்கையின் விளைவாக நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவக் கோட்பாடுகள் மீது அமையப்பெற்ற ஆட்சி நிர்வாகத்துடன் தொடர்புடையதாகவே தேசிய அரசுகள் உள்ளன. அதுவே தேசிய அரசின் சாரமாகவும் இருந்து வருகிறது.

பெரும்பான்மை மத கொடுங்கோன்மையை அரசுகளைந் தெறிய வேண்டிய நிலையில் உள்ளபோது, மதத்தைச் சீரான முறையில் அணுகுவதும், புரிந்துகொண்டு எதிர்கொள்வதும், நவீன தேசிய அரசுகளுக்கு பெரும் சவாலாகவே இருந்து வருகிறது. அற்றை நாட்களில், அரசையும், மதத்தையும் முற்றாக பிரித்து வைப்பது நிலைப்பாடாக இருந்தது. அரசின் உருவாக்கத்தில் மதத்தின் முக்கியத்துவத்தை மங்கச் செய்வதில், பிராந்திய தேசியவாதத்தின் தோற்றம் முக்கியமான பங்காற்றியது. சமுதாயத்தில் ஆழ்ந்த மத நம்பிக்கை வேரூன்றி நின்றாலும், அரசு மற்றும் அதன் செயல்பாடு மீதான மதத்தின் பிடி தளர்ந்து வந்தது. இந்தப் போக்கை பிரெஞ்சுப் புரட்சியும், அமெரிக்க விடுதலைப் போரும் மேலும் தீவிரப்படுத்தின. புரட்சிகர பிரெஞ்சு நாட்டின் பெரும் மக்கள்திரள் மதகுருமார்களின் மேலாதிக்கத்திற்கும் அவர்கள் வசமிருந்த உடைமைகளுக்கும் எதிராக அணிதிரண்டனர். அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் திருத்தம், ஜனநாயக மதச்சார்பற்ற அரசு மற்றும் மதத்திற்கு இடையிலான உறவு குறித்த திட்டவட்டமான ஒரு வரையறையை வழங்கியது. அதன்படி, அமெரிக்க நாடாளுமன்றம் மதத்தை நிறுவுவது குறித்து சட்டம் இயற்றாது என்றும், பேச்சுரிமை, மக்கள் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமை மற்றும் குறைகளை களைவதற்கும், தீர்வு காண்பதற்காக அரசாங்கத்திடம் முறையிடுவதற்குமான உரிமை ஆகியவற்றைத் தடை செய்வதற்கான சட்டங்களை இயற்றாது என்றும் பிரகடனம் செய்யப்பட்டது. அரசுக்கும் – மதத்திற்கும் இடையே ஒரு தடுப்புச் சுவர் வேண்டும் என்று அமெரிக்க அதிபராக இருந்த தாமஸ் ஜெஃபர்சன் அழுத்தமாக வலியுறுத்தினார்.

விஞ்ஞான சோசலிசம் அதன் தொடக்கத்திலிருந்தே, ஏற்றத்தாழ்வும், சுரண்டலும் நிலவும் சமுதாயத்தில் மதத்தின் பங்கு பற்றிய தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தது. எனவேதான் மார்க்ஸ் பின்வருமாறு கூறினார். “ஒடுக்கப்பட்ட ஜீவன்களின் பெருமூச்சாக மதம் உள்ளது. இதயமற்ற உலகின் இதயமாக அது தோற்றம் அளிக்கிறது. ஆன்மாவற்ற நிலையில் ஆன்மா போன்று அது காணப்படுகிறது.” அரசின் மீது மதங்களின் ஆதிக்கம் குறித்து லெனின்,

**“சொர்க்கத்தில் பொன்னுலகைப் படைப்பதற்கான பாட்டாளி வர்க்கத்தின் கற்பனைக் கருத்தை விட, பூமண்டலத்தில் பொன்னுலகைப் படைப்பதற்கான பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர போராட்டத்திற்கான ஒற்றுமைதான் மிகவும் முக்கியமானதாகும்.”** என்று கூறுகிறார்.

சமுதாயத்தைக் கட்டமைப்பதில் தேசிய அரசுகளே பிரதான இயக்கவகையாக முன்னேற்றம் அடைந்ததால், மதம் என்பது ஒரு நபரின் தனிப்பட்ட விவகாரமாக இருந்திட வேண்டும் என்பது மேலும் தெளிவானது; உலகின் பல நாடுகளில் அரசின் செயல்பாடுகளில் இருந்து மதம் பிரிக்கப்பட்டது.

மதங்களிடமிருந்து சமூக, அரசியல் மற்றும் சட்ட ரீதியாக அரசைப் பிரித்துவிட வேண்டும் என்றே நவீன அரசியல் சிந்தனைகள் உறுதிபட முயன்றன. இந்தியாவிலும் கூட, நவீன ஜனநாயக விழுமியங்களுடன் நமது சமுதாயம் ஒத்திசைவுடன் பயணித்திடவும், மதத்தின் பெயரால் ஒழுகப்படும் பிடிவாதப் போக்குகள் மற்றும் மரபுவழிப்பட்ட பிற்போக்குத்தனங்களை ஒழித்திடவும் சீர்திருத்தவாதிகள் தொடர்ந்து முயன்றனர்.

பெண்கள் உடன்கட்டை ஏறும் சதிக் கொடுமைக்கு எதிராக ராஜாராம் மோகன் ராய் தொடர்ந்து போராடினார். அவர் தனது செயல் திட்டத்திற்கு ஆதரவு திரட்டவும், தனது தாயார் உள்ளிட்ட சமுதாயத்தின் பிற்போக்கு கும்பலின் எதிர்ப்பை எதிர்கொள்ளவும் வேண்டி, பண்டைய நூல்களையும், நவீன விழுமியங்களையும் மேற்கோள் காட்டினார். ஈஸ்வர சந்திர வித்யாசாகர், எம்.ஜி. ரானாடே, சையத் அகமத் கான் போன்ற பலர் சமூக சீர்திருத்தத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். கல்வி, மத நூல்கள் பற்றிய பகுத்துணரவல்ல சிந்தனை ஆகியவற்றிற்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவம்தான் இந்த சிந்தனையாளர்கள் இடையே நிலவிய பொதுவான காரணியாக அமைந்தது. மகாத்மா ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே மற்றும் பாத்திமா ஷேக் ஆகியோர் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்புநிலை பிரிவினரிடம் மேலும் ஆழமாகச் சீர்திருத்தத்தைக் கொண்டு சென்றனர்.

இத்தகைய சமூக சீர்திருத்தவாதிகளின் பணிகள் சமுதாயத்தின் மீதான பிற்போக்குத்தனம், மூடநம்பிக்கைகள், மதத்தின் வரட்டுத்தனம் ஆகியவற்றின் பிடியைத் தளர்த்தியதோடு, அப்போது எழுச்சியுற்ற விடுதலைப் போராட்டம் குறித்த விவாதங்களில் மனிதநேயத்தையும், பகுத்தறிவுச் சிந்தனையையும் மையப்படுத்தியது. இந்தச் சீர்திருத்தவாதிகளின் வாழ்வு மற்றும் பணிகள் உருவாக்கிச் சென்ற சமூக மற்றும் தத்துவார்த்த அடித்தளத்தின் மீதிருந்து பிரிட்டிஷாருக்கு எதிரான போராட்டத்தை நமது விடுதலைப் போராட்ட வீரர்கள் மேலும் முன்னெடுத்துச் சென்றார்கள்.

ஆங்கிலேயர்களை வெளியேற்ற வேண்டும் என்பதில் பெரும் கவனம் செலுத்திய அதே காலகட்டத்தில், சுதந்திர இந்தியா ஒரு தேசிய அரசாக அதனை எவ்வாறு கட்டமைத்துக் கொள்ள வேண்டும். எத்தகைய இலட்சியங்களை உலகிற்கு சுதந்திர இந்தியா பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பதிலும் நமது தலைவர்கள் விழிப்புணர்வுடன் திகழ்ந்தார்கள்.

**மதச்சார்பின்மை கோட்பாடு தான் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்களின் முத்திரையாக அமைந்தது. தன்னை ஒரு இந்துவாகப் பிரகடனப்படுத்திக் கொண்ட காந்தியடிகள், மத அடிப்படையிலான பாகுபாட்டை ஒருபோதும் சகித்துக் கொண்டாரில்லை.**

ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், சர்தார் பட்டேல், மவுலானா ஆசாத் உள்ளிட்ட மாபெரும் தலைவர்கள் மதசார்பற்ற அரசு என்ற கோட்பாடு மீது உள்ளார்ந்த உறுதிப்பாட்டைப் பூண்டிருந்தனர். சாதி ஒழிப்புக்கான அறைகூவலை விடுத்த டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் இந்நாட்டின் மாபெரும் சமூக சீர்திருத்தத்தை முன்னெடுத்தார். தமிழ்ச் சமூகத்தில் பெரியார் ஈ .வெ. ராமசாமி ஏற்படுத்திய பகுத்தறிவு சிந்தனை போக்கும், பிறப்பின் அடிப்படையில் உண்டாகும் பாகுபாட்டுக்கு முடிவு கட்ட ஸ்ரீநாராயணகுரு விடுத்த அறைகூவலும் பரவிப் பிரதிபலித்தன. கதார் கட்சித் தலைவர்கள் முதல், பகத் சிங் தலைமையிலான இடதுசாரி புரட்சியாளர்கள் ஈறாக, அனைவரிடமும் சுதந்திர இந்தியாவில் மதத்தின் பங்கு குறித்து ஒருமித்த கருத்து நிலவியது: “மதம் என்பது ஒரு நபரின் தனிப்பட்ட விவகாரமாகும். இந்திய அரசு அனைத்து மதங்களிடமிருந்தும் சம தொலைவில் விலகி நின்றிடல் வேண்டும்”.

வகுப்புவாரி உரிமைகள் குறித்து இந்துஸ்தான் சோசலிச குடியரசு படையின் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: “வகுப்புவாரி உரிமைகளைப் பொறுத்தவரையில் இதர சமூகங்களின் நலன்களுக்கு பாதிப்புகள் உண்டாக்காத அளவிற்கு, வருங்காலத்தில் பல்வேறு சமூகங்களுக்கு இடையில் உள்ளார்ந்த இணக்கத்திற்கு வித்திடக்கூடிய அளவிற்கு ஒவ்வொரு சமூகமும் கோரும் உரிமைகள் அனைத்தையும் வழங்குவது குறித்து புரட்சிகரக் கட்சி ஆழ்ந்து சிந்தித்து வருகிறது.”

பல்வேறு மதச் சமூகங்களும் அமைதியுடன் சமாதான சகவாழ்வை மேற்கொள்வதற்கான உணர்வும், அரசு அனைத்து மதங்களிடமிருந்தும் சமதொலைவில் விலகி நின்று ஒரு மதச்சார்பற்ற

தொடர்ச்சி 15ம் பக்கம் >>

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan .,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.